ஸ்ரீ தமிழ்
உண்மை நின்றிட வேண்டும்

**ஆசிரியர் – பதிப்பாளர் :**
இல. பத்மப்ரியா

**பொறுப்பாசிரியர் :**
வெ. ஜெயராமன்

**துணை ஆசிரியர்கள் :**
நா. பாஸ்கரன்
சி. பாண்டிக்குமார்

**வடிவமைப்பு :**
ஸ்ரீஸ்வயம்

**சட்ட ஆலோசகர்கள் :**
இல. ஸ்ரீராம்
த. பாஸ்கர்

**அலுவலக முகவரி:**
ஸ்ரீ தமிழ்
77/6, 10வது அவென்யூ,
அசோக்நகர்,
சென்னை –600 083

70102 81932

http://www.shreetv.tv
facebook.com/shreetv
x.com/Shreetv media
youtube com/ShreeTV
shreemedia.news@gmail.com

Press and Registration of Books Act-ன்படி எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டவை.

கதைகளில் வரும் பெயர்களும் நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத்தன்மைக்கு ஸ்ரீ தமிழ் நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரைகளின் கருத்துகள் படைப்பாளர்களின் சொந்தக் கருத்துகளே!

**தனி பிரதி: ரூ 30/–**
**ஆண்டு சந்தா: ரூ 600/–**

# ராகுல் எம்பியாகத் தொடர்வது ஜனநாயகத்திற்கு ஆபத்து

ஜனநாயகத்தில் தேர்தல் வெற்றி தோல்வி இயல்பானது. மக்கள் தீர்ப்பை ஏற்று, நாட்டின் வளர்ச்சியையும், மக்கள் நலத்தையும் உறுதிப்படுத்த, ஆளும்கட்சிக்கு ஆக்கபூர்வமான யோசனைகளைச் சொல்வது, அரசின் செயல்பாடுகள் மற்றும் கொள்கைகள் மீது ஆக்கப்பூர்வமான விமர்சனங்களை முன்வைப்பது எதிர்கட்சிகளின் கடமையாகும். பாராளுமன்றம் சிறப்பாகவும், ஆக்கப்பூர்வமாகவும் செயல்படுவதை உறுதி செய்யும் கடமை எதிர்கட்சித் தலைவருக்கும் உண்டு. துரதிருஷ்டவசமாக, தேர்தலில் தோல்வியுற்ற காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்கட்சிகள், தொடர் தோல்விகளை சகித்துக்கொள்ள முடியாமல் ஜனநாயக விரோதச் செயல்களில் ஈடுபடுகிறார்கள். அரசின் தவறைச் சுட்டிக்காட்டுவதை விடுத்து, அன்னிய நாட்டினர் உதவியை நாடி, தேசத்துக்கு துரோகம் இழைக்கிறார்கள்.

பாராளுமன்ற விவாதங்களை ஆக்கபூர்வமாக நடத்த உதவி செய்யவேண்டிய எதிர்கட்சித் தலைவரான இராகுல் காந்தி, பாராளுமன்றத்தில் வன்முறையைத் தூண்டுகிறார். இந்தியாவின் ஜனநாயக மரபினைப் பாதுகாக்கும் நீதிமன்றம், தேர்தல் கமிஷன் போன்றவற்றின் மீது அவதூறு பரப்பி, மக்களின் நம்பிக்கையை இழக்கச் செய்யும் சதியில் ஈடுபடுகிறார். நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்யும் இராணுவத்தின் மாண்பைக் கெடுக்கிறார், எதிரி நாடுகளின் திட்டமிட்ட பிரிவினைவாதப் பிரச்சாரத்திற்கு வலுச் சேர்க்க பாராளுமன்றத்தை பயன்படுத்துகிறார். பாராளுமன்றப் பேச்சின் மீது, காவல்துறை நடவடிக்கை எடுக்க முடியாது. அதே நேரத்தில், ஊடகங்கள் வாயிலாக, கருத்தாக்கத்தை ஏற்படுத்த முடியும் என்பதால், தொடர்ந்து இவ்வாறு அவர் செய்து வருகிறார். பெண் எம்.பி.களைத் தூண்டிவிட்டு, பிரதமரைத் தாக்கி, பாராளுமன்றத்தை சாக்கடையாக்க முயற்சித்தார். இதை உணர்ந்த ஆளும் பா.ஜ.க வினர் பொறுமை காத்து, பாராளுமன்றத்தின் மாண்பைக் காத்ததுடன், நாடு முழுவதும் கலவரம் ஏற்படுத்த பாராளுமன்றத்தைக் களமாக்கும் ராகுலின் சதியை முறியடித்தனர்.

எந்த விவாதமானாலும், விவாதத்திற்குத் தொடர்பேயில்லாத விஷயத்தைப் பேசுவது, ஆதாரமற்ற அவதூறுகளை வீசுவது, அரசு பதில் சொல்லத் தொடங்கியவுடன் சபையைவிட்டு வெளியேறுவது என்று கூரையில் கல்லெறிந்துவிட்டு ஓடும் விஷமியைப் போல் எதிர்கட்சிகளை மாற்றிவிட்டார் ராகுல். மக்களவையை வழிநடத்தும் எந்த விதியையும் கடைபிடிக்காமல், சபாநாயகர் இருக்கைக்கான குறைந்தபட்ச மரியாதையைக் கூடக் கொடுக்காமல், அவை நாகரிகம் இல்லாமல் நடந்துகொள்வது இயல்பாகிவிட்டது.

நேரு குடும்பத்தில் பிறந்ததால், நான் சட்டத்திற்கு அப்பாற்பட்ட தாந்தோன்றி என்ற இவரது எண்ணம், நம் நாட்டின் ஜனநாயக மரபை அழித்து வருகிறது. பாராளுமன்றத்திற்கு புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படும் எம்.பிகள் மரபறியாமல் போவது, நம் நாட்டின் ஜனநாயகத்திற்கு விடப்பட்ட சவால். ராகுலின் இந்தப் போக்கைத் தடுக்க உடனடி நடவடிக்கை தேவை! ராகுல் எம்.பியாகத் தொடர்வது ஜனநாயகத்திற்கு ஆபத்து.!

# பட்ஜெட் 2026 சிறப்பம்சங்கள் ஓர் பார்வை

பத்மநாபன்



**பட்ஜெட் ஏமாற்றமா தொடர்ச்சியா?**

நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் இம்முறை 2026-27 க்கான வரவு செலவு கணக்கை தாக்கல் செய்யும் முன் பெரும் எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால் பட்ஜெட் தாக்கலுக்குப் பின் ஒருவித பரபரப்பும் இல்லாத கவர்ச்சிகள் அற்ற பட்ஜெட் என்றே பலர் கருதினர். இன்னும் சிலர் ஏமாற்றம் என்றும் கருதினர்.

ஏமாற்றம் என்பது ஒரு எதிர்பார்ப்பின் விளைவுதானே. வணிகச் சங்கங்களும்(chamber of commerce), பட்டயக்கணக்கறிஞர்கள் கழகம் (Institute of Chartered Accountants of India) சில கோரிக்கைகள் வைத்தன. திருமணமான தம்பதியர் சேர்ந்து வருமான அறிக்கை தாக்கல், புதிய வருமான வரி முறையில் சில பல சலுகைகள், போன்றவை. இது வரவில்லை மாறாக எதிர்கால மற்றும் விருப்ப ஒப்பந்தங்கள் (futures and options) பத்திரப் பரிவர்த்தனை வரி (securities transaction tax) உயர்த்தப்பட்டிருக்கிறது. இது பங்குச் சந்தையை நேராக பாதித்ததால் அன்று சந்தை வீழ்ச்சியை சந்தித்தது. அடுத்த நாளே அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் வர மீண்டும் உயர்ந்தது. திரு.அருண் ஜெட்லி அவர்கள் முன்னெடுத்த பல சீர்திருத்தங்களின் நீண்டகாலத் தொடர்ச்சியாக இந்த பட்ஜெட் பொருளாதார வல்லுநர்களால் பார்க்கப்படுகிறது.

**மூலதனச் செலவினங்கள்**

நம் வீட்டில் வரவு செலவு திட்டமிடுதல் போல் நாட்டில் வரும் நிதியாண்டுக்கான வரவு செலவு திட்டமே பட்ஜெட். இரு வகையான செலவினங்கள் பட்ஜெட்டில் இடம்பெறும். முதலாவது மூலதனச் செலவினங்கள் (capital expenditure). முதலீடுகளும் முதலீட்டுக்கான பரிவர்த்தனைகளும் இதில் அடங்கும். வருவாய் சார்ந்த செலவினங்கள் ( revenue expenditure) ஊதியம் உட்பட அன்றாட செலவினங்கள், கடன் வாங்கியதற்கான வட்டி ஆகியவை இதில் அடங்கும்.

வீட்டு பட்ஜெட்டில் எப்போதோ ஒரு முறை மகனின் மேற்படிப்பு, மகளின் திருமணம் போன்ற மூலதனச் செலவினங்கள் வரும். ஆனால் நாட்டின் பட்ஜெட்டில் வருடா வருடம் மூலதனச் செலவிற்கு நிதி ஒதுக்க வேண்டும். காரணம், அடிப்படை வசதிகள், உள் கட்டமைப்புகளைத் தொடர்ந்து உயர்த்த வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். உதாரணமாக ரயில் இருப்புப்பாதை செப்பனிடுதல் மற்றும் உயர்த்தல், கவச் என்னும் சேமக்கவசத்தை எல்லாத் தடங்களிலும் நிறுவுதல், புதிய ரயில் பெட்டிகள் உற்பத்தி, ரயில் நிலையங்களை சீரமைத்து மேம்படுத்தல் போன்றவை ரயில்வேயின் மூலதனச் செலவுகளாகும். ரயில்வேயின் சரக்கு வரி மற்றும் பயணச்சீட்டு வருவாய் அன்றாட செலவினங்களுக்கே ஈடுகட்டும். ஆகவே மேம்பாட்டு செலவினங்களுக்கு பட்ஜெட்டிலிருந்து மூன்று லட்சம் கோடி மூலதனச் செலவாக ஒதுக்கபட்டிருக்கிறது.

> **இயற்றலும் ஈட்டலும் காத்தலும்**
> **காத்த வகுத்தலும் வல்ல தரசு - திருக்குறள்**

**நிதிப் பற்றாக்குறை**

திட்டமிடப்படும் அன்றாட செலவினங்கள் மற்றும் மேம்பாட்டுச் செலவினங்களுக்குத் தேவையான நிதி வருமானத்தை விட அதிகமாகும்போது அதை நிதிப் பற்றாக்குறை (fiscal deficit) என்று சொல்லுகிறோம்.

இந்தியாவின் மொத்த செலவினங்கள் (2026-2027) க்கான மதிப்பீடு ரூ 50.65 லட்சம் கோடி.
மொத்த வருமானம் ரூ 35 லட்சம் கோடிகள்
பற்றாக்குறை சுமார் ரூ 16 லட்சம் கோடி
இதை சரிக்கட்ட சந்தையிலும், சிறுசேமிப்பு நிதியும் கடனாகப் அரசாங்கம் பெறுகிறது.

**விரலுக்குத் தகுந்த வீக்கம்**

இப்படி கடன் பெற்றுத்தான் நாம் செலவு செய்ய வேண்டுமா என்றால், ஆம் என்றே பதில். ஏன் எனில் இந்தியா ஒரு வளர்ந்து வரும் நாடு.

அடிப்படை வசதிகளும், கல்வித் தேவைகளும், போக்குவரத்து, தொலைத்தொடர்பு வசதிகளும், சுகாதாரமும் மருத்துவ வசதிகளும் இல்லையெனில் மக்களுக்கும் சுபிக்ஷம் இல்லை. பொருளாதாரமும் சீரடைந்து அபிவிருத்தி அடையாது. ஆக இதற்கான செலவு கடன் பெற்றுத்தான் செய்ய வேண்டும் அதே நேரத்தில் கடன் அதிகமாக இருந்தாலும் அபாயம். மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) நிதிப்

**பட்ஜெட் சிறப்பு கவனங்கள்**

- **செமி கண்டெக்டர்**
- Bio Pharma
- **விவசாயம்**
- **ரயில்வே முதலீடு**
- **கல்வி – சுகாதாரம்**
- **சிறு குறு உற்பத்தியாளர்கள்**
- **புதிய நீர் நிலை வழித்தடங்கள்**
- **அடிப்படை வசதி மேம்பாடு**

பற்றாக்குறை 4.4 விழுக்காடாக உள்ளது.

இது ஆண்டுக்கு ஆண்டு குறைந்துக் கொண்டு வருகிறது. எவ்வளவுக்கு எவ்வளவு இந்த விகிதம் குறைகிறதோ அவ்வளவு நல்லது. இதைப் போல் மொத்த கடன் அளவு மொத்த உள் நாட்டு உற்பத்தியில் 56 விழுக்காடாக உள்ளது. இதுவும் குறைந்துக் கொண்டு வருகிறது. 2030-2031 ஆம் ஆண்டு இது 50 விழுக்காடாக குறையும் என்ற இலக்கு அரசாங்கம் வைத்திருக்கிறது.

**53 லட்சம் கோடி எங்கே போகிறது?**

மொத்த பட்ஜெட் தொகை 53 லட்சம் கோடி எங்கு போகிறது?

● ஊதியம் மற்றும் அரசாங்க இயந்திரம் தடைபடாமல் ஓட ரூ 8 லட்சம் கோடிகள் ஆகிறது. (இதில் ஓய்வூதியமும் அடக்கம்)

● ரூ 14 லட்சம் கோடிகள் வாங்கின கடனுக்கு வட்டி செலுத்தவே போகின்றது.

● வளர்ச்சித் திட்டங்களுக்கு என்று ரூ 23 லட்சம் கோடிகள் ஒதுக்கப்பட்டிருகின்றன

இந்தப் பின்னணியில் இந்த ஆண்டின் சிறப்பம்சங்கள் என்னவென்று சற்றே நோக்குவோம்.

**மூன்று தலையாய கடமைகள்**

**முதல் கடமை:** பொருளாதார வளர்ச்சியை உயர்த்தி ஸ்திரப்படுத்துதல் அதாவது மொத்த உள் நாட்டு உற்பத்தி உயர்தல் - GDP growth, கடனுக்கும் மொத்த உள் நாட்டு உற்பத்திக்குமுள்ள விகிதாச்சாரத்தை குறைத்தல் மற்றும் நிதிப்பற்றாக்குறை விகிதத்தைக் குறைத்தல்;

**இரண்டாம் கடமை:** மக்களின் எதிர்பார்ப்பையும், அபிலாஷைகளும் நிறைவேற்றுதல்

**மூன்றாம் கடமை:** எல்லோர்க்கும் எல்லாமும் கிடைத்திடல்



**பட்ஜெட் சிறப்பம்சங்கள்**

**உற்பத்தித் துறையில்** குஞுட்டி இணிணஞீதஞிஞணிஞா ட்டிண்ண்டிணிண நம் நாட்டிலே உற்பத்தி திட்டங்கள், அதற்கான வரைவு, அறிவுத்திறன் வளர்ச்சி மற்றும் செயல்பாட்டுத் திட்டம் (Semi Conductor Mission)

**உயிர் மருந்து சக்திக்கு உந்துதல்** (Bio Pharma initiatives) - இதன் மூலம் உயிர்களைக் காக்க உயரிய திட்டம், ஆராய்ச்சி தொடர் ஆய்வகங்கள் (ரூ 10000 கோடி ஐந்து வருடங்களுக்கு)

இருபது புதிய நீர் நிலை வழித்தடங்கள். கிழக்கும் மேற்கும் தெற்கும் வடக்கும் உள்ளிட்டு, இதற்கான அடிப்படை மேம்பாட்டுத் திட்டம்.

**விவசாயத்தில்**

பருப்பு வகைகளுக்கு ஊக்குவிப்பு, தென்னை, பழங்கள் அபிவிருத்திக்கு பச்சைக் கொடி, நூறு மாவட்டங்களுக்கு பாசன வசதி மேம்பாடு, விவசாய கடன் அட்டைகள் ரூ மூன்று லட்சத்திலிருந்து ரூ ஐந்து லட்சம் வரை உயர்வு, பஞ்சு மகசூல் அதிகரிக்க ஐந்து வருட திட்டம்

**கல்வி / சுகாதாரம்**

மருத்துவக் கல்லூரிக்கு அதிக மாணவர் சேர்க்கை இடங்கள், மருத்துவச் சுற்றுலா திட்ட அபிவிருத்தி, கிராமங்களில் இணைய சேவை திண்ணமாக்குதல்

**சிறு குறு உற்பத்தியாளர்களுக்கு**

உற்பத்திப் பெருக்கித் தடைகளை நீக்க ஆவன செய்தல், கடன் வரம்பு வசதி உயர்த்தல்

ரயில்வே ரூ.மூன்று லட்சம் கோடிகள் ஒதுக்கீடு இருப்புப்பாதை மேம்பாடு, அகலப்பாதை மாற்றுதல், சீரமைத்தல், பாதுகாப்புக் கவசமிடுதல்

அடிப்படை வசதி மேம்பாட்டிற்கு (1.5 லட்சம் கோடிகள்)

வட்டியில்லாக் கடன் - மாநிலங்களுக்கு கடன் வசதி

**மும்முனைக் கொள்கை**

அடிப்படை வசதி கட்டமைப்புப் பெருக வேண்டும், கட்டுமானங்கள் கூடவேண்டும், பொருளாதாரம் வளர வேண்டும் அதே சமயத்தில்
மொத்த கடனும், பற்றாக்குறையும் குறைந்து, மொத்த உள் நாட்டு உற்பத்திக்கும் பற்றாக்குறைக்குமான விகிதாசாரமும் குறைய வேண்டும்.

இத்திட்டங்களும் கொள்கைகளும் நடந்தேறினால் நாடு சுபிக்ஷமடையும், வீடும் சேமமாகும்.

# திருமாவுக்குத் தெரியுமா? தமிழின் பெருமை

இராமகிருஷ்ணன்

ஒரு நாள் நள்ளிரவில் வலம் வந்துகொண்டிருந்த பாண்டிய மன்னன் ஒரு வீட்டினுள் பேச்சுக் குரல் கேட்டது. பாண்டியன் உற்றுக் கேட்ட பொழுது கீரந்தை என்ற வேதியன் தன் மனைவியுடன் பேசிக் கொண்டிருந்தான். அவன் “வணிகத்தின் பொருட்டு வெளியூர் செல்கின்றேன்” என்றான். அவன் மனைவி அச்சத்தில் அவளுக்கு திருடர் பயம் இருப்பதாக பதிலளித்தாள். வேதியனோ, நம் நாட்டு அரசனது செங்கோல் உன்னைக் காக்கும் அஞ்சாதே எனக்கூறிச் சென்றான். இவ்வுரையாடலைக் கேட்ட பாண்டியன் மனம் மகிழ்ந்தது , அத்தெருவினை நாளும் தவறாது காவல்புரிந்தான். ஒருநாள் இரவு அவ்வேதியன் வீட்டில் பேச்சுக் கேட்டது. ஐயமுற்ற பாண்டியன் கதவைத் தட்டினான். வேதியன் தான் வந்துள்ளான் என்பதை உணர்ந்து, தான் வந்ததை அறிந்தால் வேதியன் தன் மனைவி மீது சந்தேகப்படுவானே என்று எண்ணி அவ்வீதியில் அமைந்திருந்த அனைத்து வீட்டுக் கதவையும் தட்டினான் பாண்டியன். மறு நாள் அத்தெருமக்கள் அரசனிடம் சென்று கதவைத் தட்டியவனின் கையை வெட்ட வேண்டும் என்று முறையிட்டனர். அரசனும் வாளொன்றைக் கொண்டு வரச் செய்து தன் கையை வெட்டிக் கொண்டான். அதன் பின் நடந்த நிகழ்வுகளை எடுத்துரைத்தான் என்று சேர நாட்டு மன்னன் செங்குட்டுவனின் தம்பி இளங்கோவடிகள், சிலப்பதிகாரத்தில் குறிப்பிடுகிறார்.

**தமிழின் முகவரியைத் தந்தவர்கள் தமிழை அழித்தார்கள் என்கிறது தற்குறித்தனமல்ல, விஷமத்தனம்! தமிழை அழிக்கும் விஷம நோக்கம்!**

தன்னால் ஒரு பெண்ணின் மீது சந்தேகம் கூட வந்துவிடக் கூடாது என்று வாழ்ந்த மன்னர்களை, சரக்கு இருக்கு, முறுக்கு இருக்கு இழுத்துகிட்டுவா என்று சொல்லும் பண்பாடற்ற திருமாவால் எப்படி மதிக்க முடியும்?

நாடா கொன்றோ, காடா கொன்றோ
அவலா கொன்றோ, மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை, வாழிய நிலனே”
(புறம்: பா.எண்.187)

நாடாக இருந்தாலும், காடாக இருந்தாலும், தாழ்ந்த நிலமாக (அவலாக) - பள்ளமாக - இருந்தாலும், மேடான நிலமாக (மிசையாக) இருந்தாலும், எவ்விடத்தில் ஆடவர் நல்லவராய் விளங்குகின்றனரோ, அவ்விடத்தில் மேன்மை பெற்றுத் திகழ்வாய், நிலமே !

மக்களின் நடத்தையால் மண் சிறப்புறும் என்ற கோட்பாட்டைக் கொண்டவர்கள் தமிழர்கள். மனித ஒழுக்கத்தைப் போற்றி வாழும் இந்தப் பண்பாட்டைக் குறிப்பதுடன் இதைத் தலைமுறைகளுக்கு பகர்ந்த பெருமை, சங்க இலக்கியங்களைச் சாரும். இந்த இலக்கியங்களைப் படைத்த புலவர்களை பாதுகாத்து, இலக்கியங்கள்ப் போற்றும் வண்ணம் வாழ்ந்து காட்டியவர்கள் மொழியையும், பண்பாட்டையும் அழித்தவர்கள் என்கிறார் திருமா. 10 கேஸ் வாங்கினால் தான் உனக்கு சிறப்பு என்று ரவுடித்தனத்தை ஊக்குவித்தவருக்கு நல்லொழுக்கம் நச்சாகத்தானே தோன்றும். தமிழின் முகவரியைத் தந்தவர்கள் தமிழை அழித்தார்கள் என்கிறது தற்குறித்தனமல்ல, விஷமத்தனம்!, தமிழை அழிக்கும் விஷம நோக்கம்!

மொழிப் பற்று, உணர்வு தேவையில்லை என்று எண்ணுபவன் நான் என்கிறார் திருமா. அப்படியென்றால் தமிழ் மொழியையும், பண்பாட்டையும் அழித்தவர்கள் மன்னர்கள் என்று ஏன் குற்றம்சாட்ட வேண்டும் ? மொழியைப் பற்றிய கவலை திருமாவிற்கு ஏன்?

ராஜ ராஜன், இராஜேந்திரன் என்ன தமிழ் பெயர்களா என்கிறார். தன் கட்சியிலுள்ள ஷாநவாஸ், நண்பர் ஜவாஹிருல்லாஹ், ஜெகத் கேஸ்பர் ராஜ், ஸ்டாலின், கருணாநிதி, தயாநிதி, உதயநிதி எல்லாம் தமிழ் பெயர்களா? என்று கேட்பாரா?

வட மொழியில் மயங்கிக் கிடந்தவர்கள், பார்ப்பனர்களின் யாகம் வேள்வியில் மயங்கிக் கிடந்தார்கள் என்கிறார் திருமா. உருதுப் பள்ளிக்கும் மொழிக்கும் சலுகை கொடுக்கும் திமுக அரசு யார் காலில் விழுந்து கிடக்கிறது? இஸ்ரவேலின் தேவர் என்றும், அரபியில் அலறும் கட்டிடங்களுக்குச் சட்டத்தை மீறி அனுமதி கொடுக்கும் அரசு யார் காலில் விழுந்து கிடக்கிறது? இந்தக் கட்சியின் கூட்டணியில் இருக்கும் திருமா எந்த மயக்கத்தில் இருக்கிறார்?

இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல் என்று அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே என்கிறது தொல்காப்பியம் சொல்லதிகாரம். எச்சவியல் குறிப்பிடுகிறது. தமிழில்



கண்டெடுக்கப்பட்ட பழமையான நூலான தொல்காப்பியமே, வட சொல்லை செய்யுள் ஈட்டச் சொல் என்று சொன்னபின், திருமாவுக்கு சம்ஸ்க்ருதத்தின் மீதும், வேள்விகள் மீதும் வரும் காட்டம், உருது மீதும் , 50 கேஜி தாஜ் மஹால் என்று ஆங்கிலத்தைக் கையாளும் புலவர்கள் மீது வராதது ஏன்?

நான் எவனையும் மதித்ததில்லை என்னும் திருமா, பிளாஸ்டிக் சேர் போடவில்லை என்றாலும் நான் மானம் கெட்டு கூட்டணியில் இருப்பேன் என்றும் சொல்கிறார். இதே திருமாவோ, அடங்க மறு, அத்துமீறு என்று வீர வசனமும் பேசுவார். நான் கூட்டணியைவிட்டு வெளியேறினால், பேனர் கொடுக்க பலர் தயாராக இருப்பதாகவும் சொன்னவர் திருமா!. ஜாதி உணர்ச்சியைத் தூண்டி, அந்தத் திரட்சியை பணயம் வைத்து பிழைப்பு நடத்தும் இவர் நான் யாரையும் மதித்ததில்லை என்று பேசுவது சரியே! இவர் மதிப்பது கொள்கையையோ, நபர்களையோ அல்ல, பணத்தையும் பதவியையும் தான் என்பதை அவரே தெளிவுபடுத்தியுள்ளார்.

வேங்கை வயலில் தொட்டியில் மலத்தைக் கலந்த வழக்கை, பட்டியலினத்தவரே கலந்துவிட்டனர் என்று சொல்லி மூடிய தி.மு.க அரசின் முன் வாய் மூடி இருந்தவர் தானே திருமா! தீண்டத்தகாதவர்களா நாங்கள் என்று தீண்டாமையை நியாயப் படுத்திய தயாநிதியை தோழமைச்சுட்டல் என்று தோழமையுடன் ஆதரித்தவர் தானே திருமா! பட்டியலின பள்ளிகள், விடுதிகளில் நடக்கும் அநியாயங்களையும், ஆணவக் கொலைகளையும், ஜாதிக் கொடுமைகளையும் கண்டு கொள்ளாமல் தி.மு.க விற்கு சாமரம் வீசும் திருமா, நான் ஆண்ட பரம்பரை என்று சொல்வதில் பெருமைப் படுவதில்லை என்கிறார். இவர் தி.மு.க.விற்கு அடிமையாக இருக்கலாம் அதற்காக ஒட்டு மொத்த சமுதாயத்தையே அடிமைச் சமுதாயம் என்று முத்திரை குத்தி, முட்டாள்களாக்கி, தாழ்வு மனப்பான்மையை விதைப்பதின் நோக்கம் என்ன?

தமிழின் முகவரியான வான்மறை திருக்குறளைத் தந்த வள்ளுவன் தோன்றியது பட்டியலினம்! பாரதத்தின் இதிகாசங்களில் ஒன்றான இராமாயணத்தை எழுதிய வால்மீகி முனி, பட்டியலினம் என்று எல்லாக் காலங்களிலும் உலகை ஆளும் படைப்புகளைத் தந்தவர்கள் பட்டியல் மிக நீளம். இந்தப் பரம்பரையில் தோன்றியவர் நாம் என்று ஒரு நாளாவது திருமா பேசியிருப்பாரா? இந்த ஆளுமைகளை இவரால் எப்படி ஏற்க முடியும்?

இந்த நாட்டில் வெள்ளைக்காரன் கல்வி முறை நடப்பில் வருவதற்கு முன், இவர் கட்சியினர் அதிகமாக பாராளுமன்ற உறுப்பினர்களாகவும் சட்ட மன்ற உறுப்பினர்களாகவும் இருக்கும் பழைய ஆற்காடு மாவட்டத்தில், 84% மாணவர்கள் பட்டியலின மற்றும் சூத்ர வர்ணத்தைச் சேர்ந்தவர்கள் என்கிறது தாமஸ் மன்ரோ அறிக்கை. தீண்டாமையின் உச்சம் என்று அடையாளப்படுத்தப்படும் மலபார் பகுதிகளில் வானவியல் உயர் படிப்பை மேற்கொள்ளும் 808 மாணவர்களில், 510 நபர்கள், பட்டியலினத்தவர்கள். மருத்துவ உயர் படிப்பில், 194 மாணவர்களில் 100 நபர்கள் பட்டியலினத்தவர்கள் என்கிறது மன்ரோவின் அறிக்கை. இந்தப் பெருமைகளை என்றாவது திருமா பேசியிருப்பாரா? ஆங்கிலேயர்கள் நம் நாட்டின் கல்வி முறையை அழித்தபின், பட்டியலினத்தவரின் கல்விக்கு அரும்பாடுபட்ட மஹான், ஸ்வாமி சகஜாநந்தர். அவர் இருந்ததும், திருமாவின் பாராளுமன்றத் தொகுதியிலே! இந்த ஆளுமையை திருமா மதித்தாரா? இவற்றையெல்லாம் அறிந்தவர்களுக்கும், உணர்ந்தவர்களுக்கும் தானே பெருமித உணர்வு ஏற்படும்! நோட்டுக்காகவும், சீட்டுக்காகவும் சமுதாயத்தை விற்கும் அற்பத்தனத்திற்கு பண்பை மதிக்கும் பழக்கம் எங்கு வரப்போகிறது!

தமிழ் பிரிவினைவாதம் பேசி, பாரதத்தின் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் சீர்குலைத்து, பின் தமிழையே அழிக்கும் அன்னிய சதியின் அங்கமே இந்தத் திருமாவின் பேச்சு.! சமயம் வேறு, மொழி வேறு என்று மக்கள் பயன்பாட்டிலுள்ள விழிமியங்களை அழிக்கும் சதியை, இனவாதமாகத் தொடங்கி, மொழியை முன்னிறுத்தி பிரிவினை பல செய்தவர்கள், அவர்களின் இறுதி நோக்கமாக, மொழிப் பெருமையே வேண்டாம் என்று சொல்லி, நம் வேர்களை வெட்டி நிர்கதியாக ஆக்குவதை இந்தத் திருமாவின் பேச்சு நமக்கு உணர்த்துகிறது. உலகம் முழுவதும் பல நாகரிகங்களை, பண்பாடுகளை அழித்த மிஷனரி கும்பல், நம் தமிழகத்தில் தனது இறுதி முயற்சியைத் தொடங்கிவிட்டதை உணர முடிகிறது.

# இஸ்லாத்தை பரப்பியது

## வணிகமா? வாளா?

பால கௌதமன்

பஹ்ரிய்யா-வணிகத்தால் பரவிய இஸ்லாம் என்ற நூல் வெளியீட்டு விழா, ஜனவரி 20, 2026 அன்று சென்னையிலுள்ள தமுமுக தலைமையகத்தில் அக்கட்சியின் தலைவர் ஜவாஹிருல்லா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்தப் புத்தகத்தை புதுமடம் ஹலீம் என்பவர் எழுதியுள்ளார். இந்த நிகழ்ச்சியில் ஹலீம் அவர்கள் இபின் பதூதா, கங்கா தேவி மற்றும் பலரை மேற்கோள் காட்டியுள்ளார். இதில் திருப்பரங்குன்றம் பெயரைக் குறிப்பிட்டு, சிக்கந்தர் பெயரையும் குறிப்பிட்டு, விஜயநகரப் படைகள் சூழ்ச்சியால் சிக்கந்தர் என்ற மாவீரனை வீழ்த்தினார்கள். மதுரை சுல்தானியத்தை வீழ்த்திய சங்கிகள் என்றும் பேசினார். சிக்கந்தரை வீழ்த்திய சங்கிகளான விஜயநகரப் பேரரசர்கள், பின்நாளில் முஸ்லீம்கள் இல்லாமல் ஆட்சி நடத்த முடியாது என்று உணர்ந்து, முஸ்லீம்களைச் சேர்த்துக் கொண்டனர் என்று பேசினார்.

புதுமடம் ஹலீமின் குறிப்புப்படி, விஜயநகர சங்கிகளால் சூழ்ச்சியால் வீழ்த்தப் பட்டவன் சிக்கந்தர். திருப்பரங்குன்றம் தர்காவின் கதையை, முஸ்லீம்களின் வலைத்தளமான dargahinfo.com எப்படிச் சொல்கிறது?

12 ஆம் நூற்றாண்டின் இறுதியில் அரபு நாட்டின் மதினாவிலிருந்து ஜெட்டா ஆளுனர் சிக்கந்தர் பாட்ஷா, ஹஜரத் சுல்தான் ஸயித் இப்ராஹிம் ஷாஹித் பட்ஷாவுடன் தமிழ்நாடு வந்தார். மதுரையை ஆண்ட திருப்பாண்டியன் மதமாற மறுத்ததால், அவனைப் போரில் வென்று ஏர்வாடி மன்னன் பாதுஷா






இப்ராஹிம் சுல்தான் ஸயித் ஷாஹித், சையத் சுல்தான் சிக்கந்தர் பாஷாவை மதுரையின் அரசனாக்கினான். ஷரியத் சட்டத்தின் அடிப்படையில் ஆட்சி நடத்தினான். தோல்வியுற்ற திருப்பாண்டியன் திருப்பதி சென்று படை திரட்டினான். சிக்கந்தர் பாஷாவோ, மதத்தைப் பரப்புவதில் கவனமாக இருந்தானே தவிர, பாண்டியன் படையைத் திரட்டுவதைக் கவனிக்கவில்லை. இதனால் சிக்கந்தர் கடுமையாகப் போராடி, இந்தப் போரில் தோல்வியடைந்தார். இந்தப் போரை, பாண்டிய மண்டலத்தில் நடந்த மிகப் பெரிய போர் என்று சங்க கால கவிஞர் பாடினாராம்!

திருப்பாண்டியன் படையை எதிர்க்க சிக்கந்தர் ஏர்வாடி சுல்தானிடம் உதவி கேட்டு செய்தி அனுப்பிய வீரர்களைத் திருப்பாண்டியனின் வீரர்கள் கொன்றுவிட்டார்கள். தோல்வியடைந்த சிக்கந்தர் திருப்பரங்குன்றம் குகையில் தொழுகை செய்யக் குனிந்தபோது, அவனை பாண்டியனின் வீரர்கள் வெட்டிச் சாய்த்தனர். அப்போது சிக்கந்தர் நிகழ்த்திய அற்புதங்களால் மனம் திருந்திய பாண்டிய வீரர்கள் சிக்கந்தரைப் புதைத்த இடம் தான் திருப்பரங்குன்றம் தர்கா என்கிறது.

இந்தக் கதையில் வரும் சிக்கந்தர், ஜெட்டா ஆளுனர், ஷரியாச் சட்டத்தை அமல்படுத்தினான், கொன்ற மன்னன் திருப்பாண்டியன், போரில் சூழ்ச்சியில்லை, ஆனால் 12 ஆம் நூற்றாண்டு சங்க காலம் என்ற புதிய (புருடா) வகையறை.

பஹ்ரிய்யா ஆசிரியர் புதுமடம் ஹலீம் கதையில், மதுரை சுல்தானிய வம்சவழி மன்னன்

சிக்கந்தர், சூழ்ச்சியால் கொன்றவர் விஜயநகர சங்கிகள், சமத்துவத்துடன் ஆட்சி செய்த மன்னர்!

இதில் எது உண்மை? தர்கா சரித்திரமா? தமுமுக வரலாறா?

புதுமடம் ஹலீம் தன் வரலாற்றை நியாயப்படுத்த, இபின் பதூதா, கங்கா தேவி ஆகியோரின் வரலாற்றுக் குறிப்புகளை துணைக் கொள்கிறார். அந்தக் குறிப்புக்களுக்கு வரும் முன், மதுரை சுல்தானியத்தின் வரலாற்றைப் பார்ப்போம். உல்லூஹ் கான் என்ற காட்டுமிராண்டி, திருச்சி திருவரங்கநாதர் கோவில், மதுரை மீனாட்சி கோயில் ஆகியவற்றைத் தரைமட்டமாக்கிவிட்டு, இப்பகுதிகளைத் தன் ஆளுமைக்குள் கொண்டு வந்து மாபார் என்று பெயரிட்டான். அவனே தில்லி சென்று முகமது பின் துக்ளக் என்று முடிசூட்டிக் கொண்டான். இவனது முட்டாள்தனமான முடிவுகளால், தில்லி சுல்தானியம் பலவீனம் அடைந்தது. இவன் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளின் ஆளுனர்கள் அவன் கட்டுப்பாட்டிலிருந்து விடுபட்டு தங்களை சுல்தான்களாக அறிவித்துக் கொண்டனர். அப்படி மதுரை ஆளுனராக இருந்த ஜலாலுதீன் அஹ்சன் கான் துக்ளக்கிற்கு துரோகம் செய்து உருவாக்கியதே மதுரை சுல்தானியம்.

இந்தத் துக்ளக்கின் தர்பாருக்கு வந்த மொராகோ வழிப்போக்கன் இபின் பதூதா. தில்லி சுல்தானுக்கு உட்பட்ட பகுதிகளில், இஸ்லாமிய சட்டத்தை அமல்படுத்தப் பெரும்பாடுபட்டுத் தோற்றான். சுமார் 10 ஆண்டுகாலம் துக்ளக்கிடம் பணியாற்றியவன் மாலத்தீவு சென்றான். பௌத்த மதத்திலிருந்து மாறிய மாலத்தீவு மன்னனுக்கு, குர்-ஆன் அறிஞர் மற்றும் இஸ்லாமிய சட்ட நிபுணர் தேவை என்பதால், இபின் பதூதாவை நீதிபதியாக நியமித்தார். வெள்ளிக்கிழமை தொழுகைக்கு வரத்தவறினால் வீதியில் வைத்து சவுக்கடி என்ற தண்டனையை அமல் படுத்தினான் இபின் பதூதா. மக்கள் எதிர்ப்பு அதிகரிக்கவே, அவன் அங்கிருந்து கிளம்பி, இலங்கை மார்க்கமாக அவன் வந்தடைந்த இடம், சுல்தானிய ஆட்சியின் கீழ் உள்ள மதுரை. இந்த மதுரையில் சுல்தானின் ஆட்சி எப்படி இருந்தது என்பதை ரிஹ்லா என்ற புத்தகத்தில் கொடுமையான தண்டனைகளைக் கொடுத்த இபின் பதூதா பின்வருமாறு விவரிக்கிறான்.

இந்துக் கைதிகள் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, அந்தப் பெரிய நகரத்தின் நான்கு வாயில்களுக்கும் அழைத்துச் செல்லப்பட்டனர்.

**ஒருகாலத்தில் அழகிய பெண்களின் சலங்கை ஒலியால் இனிமையாக இருந்த சாலைகளில், இப்போது இரும்புச் சங்கிலிகளால் கட்டப்பட்டு இழுத்துச் செல்லப்பட்டு பின்னர் தலை துண்டிக்கப்படும் பிராமணர்களின் காதை கிழிக்கும் அலறல் ஒலிகளே கேட்கின்றன.**



அங்கு, அவர்கள் கொண்டு வந்த கம்பங்களில் கைதிகள் குத்தி நிறுத்தப்பட்டனர். பின்னர், அவர்களுடைய மனைவிகள் கொல்லப்பட்டு, அவர்களின் தலைமுடியால் அந்தக் கம்பங்களில் கட்டப்பட்டனர். சிறிய குழந்தைகள் அந்த தாய்மார்களின் மார்பின்மேல் படுகொலை செய்யப்பட்டனர்; அவர்களின் சடலங்கள் அப்படியே அங்கு விடப்பட்டன. அதன் பின் அந்த முகாம் முற்றிலும் அழிக்கப்பட்டது, மேலும் அவர்கள் மற்றொரு காட்டிலுள்ள மரங்களை வெட்டத் தொடங்கினர். இதே முறையிலேயே பின்பு பிடிக்கப்பட்ட இந்து கைதிகளையும் அவர்கள் நடத்தினர். இத்தகைய அவமானகரமான நடத்தை, வேறு எந்த அரசனிடமும் நான் அறிந்ததில்லை. இதற்காகவே கடவுள் கியாஸுத்தீனின் மரணத்தை விரைவுபடுத்தினார். (பக்கம் 236)

இந்தச் செய்தியை, புதுமடம் ஹலீமால் மேற்கோள்காட்டப்படும் கங்காதேவியின் மதுரா விஜயம் நூல் உறுதி செய்கிறது.

மதுரையின் தோப்புகளுக்குள் நடந்ததைக் குறித்து நான் மிகுந்த வருத்தம் அடைகிறேன். தென்னை மரங்கள் அனைத்தும் வெட்டப்பட்டுள்ளன; அவற்றின் இடத்தில் மனிதக் கபாலங்கள் இரும்புக் கம்பிகள் முனைகளில் தொங்கிக் கொண்டிருக்கும் வரிசைகளே காணப்படுகின்றன.

ஒருகாலத்தில் அழகிய பெண்களின் சலங்கை ஒலியால் இனிமையாக இருந்த சாலைகளில், இப்போது இரும்புச் சங்கிலிகளால் கட்டப்பட்டு இழுத்துச் செல்லப்பட்டு பின்னர் தலை துண்டிக்கப்படும் பிராமணர்களின் காதை கிழிக்கும் அலறல் ஒலிகளே கேட்கின்றன.

இபின் பதூதா சுல்தானுடனான சில அனுபவங்களைக் குறிப்பிடுகிறான்.

ஒரு நாள், காஜியும் நானும் (கியாஸுத்தீனுடன்) உணவருந்திக் கொண்டிருந்தபோது, காஜி அவரின் வலப்பக்கமும் நானோ இடப்பக்கமும் அமர்ந்திருந்தோம். அப்போது, ஏழு வயது மகனும் மனைவியும் உடன் ஒரு நம்பிக்கையற்றவன் (காஃபிர்) அவன் முன்னிலைக்குக் கொண்டு வரப்பட்டான். சுல்தான் தன் கையால் மரணதண்டனை செய்பவர்களுக்கு அவன் தலையை வெட்டச் சைகை செய்தார்; பின்னர் அரபியில் அவர்களிடம்,



“மகனையும் மனைவியையும்” என்றார். அவர்கள் அவர்களின் தலைகளையும் வெட்டினர். நான் என் கண்களைத் திருப்பிக் கொண்டேன். மீண்டும் பார்த்தபோது, அவர்களின் தலைகள் தரையில் கிடந்தன.

மற்றொரு முறை, சுல்தான் கியாஸுத்தீனுடன் நான் இருந்தபோது, ஒரு இந்து அவன் முன்னிலையில் கொண்டு வரப்பட்டான். அவர் எனக்கு புரியாத சில வார்த்தைகளைச் சொன்னார்; உடனே அவரது சீடர்கள் தங்கள் உரை கத்திகளை இழுத்தனர். நான் அவசரமாக எழுந்தேன்; அதற்கு அவர், “நீ எங்கே செல்கிறாய்?” என்று கேட்டார், “நான் என் பிற்பகல் (மாலை 4 மணி) தொழுகையைச் செய்யச் செல்கிறேன்” என்று பதிலளித்தேன். அவர் என் காரணத்தைப் புரிந்து, சிரித்தார்; பின்னர் அந்த விக்கிரக வழிபாட்டாளரின் கைகளையும் கால்களையும் வெட்ட உத்தரவிட்டார். நான் திரும்பி வந்தபோது, அந்த துரதிருஷ்டவான் தன் இரத்தத்தில் மூழ்கிக் கொண்டிருந்ததைக் கண்டேன்.

இவன் ஆட்சி காலத்தில், திருச்சி அரங்கநாதர் கோயிலை வீரபல்லாலன் மீட்டான். அவனிடம் தோற்ற இஸ்லாமியப் படை வீரர்கள் சமயபுரம் அருகிலுள்ள கோட்டையில் தஞ்சம் புகுந்தனர். மதுரை சுல்தானிடம் அனுமதி பெற்று சரணடைகிறோம் என்று கெஞ்சினர். ஒத்துக் கொண்டான் 80 வயதான பல்லாலன். சரணடைய அவகாசம் கொடுத்த நேரத்தில், பல்லாலன் படையிலிருந்த இஸ்லாமியன் உதவியுடன் பல்லாலனை, இரவு நேரத்தில் தாக்கினான். அவன் உடலைப் பிளந்து வைக்கோலைத் திணித்து மதுரைக் கோட்டை வாசலில் தொங்க விட்டான்.

கியாசுதீன் காம ஊக்க மருந்து மிகுதியானதால் இறந்தான், அவன் 2 ஆண்டுகாலம் கூட ஆட்சியில் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

புதுமடம் ஹலீம் மேற்கோள்காட்டியவர்கள் குறிப்பின் அடிப்படையில் இஸ்லாம் வாளால் பரவியதா ? வணிகத்தால் பரவியதா ?

குமார கம்பண்ணன் படையிடம் தோற்று, போரில் கொல்லப்பட்ட கடைசி மதுரை சுல்தானிய மன்னன் சிக்கந்தர் பாட்ஷா என்பது வரலாறு. தமிழகத்திலுள்ள கோயில்களை, இஸ்லாமிய

**இந்தப் புத்தகத்திற்கு பஹ்ரிய்யா என்ற பெயர் வைத்ததின் நோக்கத்தையும் புதுமடம் ஹலீம் தெளிவு படுத்தினார். பிரியாணி என்ற சொல் இப்போது தமிழ்ச் சொல் போல் ஆகிவிட்டது, இது போன்று பஹ்ரிய்யாவும் ஆக வேண்டும் என்ற நோக்கத்தையும் அவர் தெளிவு படுத்தினார்.**

ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டு, தமிழ் மொழி காத்து, நம் நாட்டின் பண்பாட்டின்படி நாம் வாழ்வதற்குக் காரணம் விஜயநகரப் பேரரசே! நம்மை அரபு அடிமைத்தளையிலிருந்து மீட்டதால் விஜயநகரப் பேரரசு சங்கியாகிவிட்டது. அப்படியென்றால் சங்கி என்பதில் தமிழன் பெருமை கொள்ளவேண்டும்.

இந்தப் புத்தகத்திற்கு பஹ்ரிய்யா என்ற பெயர் வைத்ததின் நோக்கத்தையும் புதுமடம் ஹலீம் தெளிவு படுத்தினார். பிரியாணி என்ற சொல் இப்போது தமிழ்ச் சொல் போல் ஆகிவிட்டது, இது போன்று பஹ்ரிய்யாவும் ஆக வேண்டும் என்ற நோக்கத்தையும் அவர் தெளிவு படுத்தினார்.

பஹ்ரிய்யா என்பது அரபு மொழியில் கடல் தொடர்பான, நீர், கடல் தொடர்புடைய பகுதி, என்று பொருள் படும்படியாக உள்ளது. வரலாற்றுத் திரிபுடன், மொழியையும் ஆக்கிரமிக்கும் சதியும் இந்தப் புத்தகத்தின் வாயிலாக அரங்கேற்றப்பட்டுள்ளது.

கில்ஜியையும், லோடியையும் ஆக்கிரமிப்பாளன் என்று சொல்லக்கூடாது, அவர்கள் நம் நாட்டவர்கள் என்று பேசியிருக்கிறார் முன்னாள் துணை குடியரசுத் தலைவர் ஹமீத் அன்சாரி. இஸ்லாமிய மன்னர்களின் கொடுமைகளை பாட புத்தகத்தில் சேர்க்கிறார்கள், சுங்க வம்சம் போன்ற இந்தியப் பேரரசுகள் எல்லாம் பாடமாக்கப்படுகின்றன என்று கேரளா லிட் பெஸ்ட் 2026ல் கலந்து கொண்ட ரொமீலா தாபர் புலம்பியுள்ளார். இந்த நிகழ்வுகளைப் பார்க்கும்போது, வரலாற்று மோசடியைத் திட்டமிட்டு செய்யும் சதி நாடு முழுவதும் நடக்கிறது. அதன் ஒரு பகுதியே இந்த பஹ்ரிய்யா என்ற நூல்! இந்த நூல் வரலாற்று மோசடியையும் தாண்டி, அடிப்படைவாத இஸ்லாமிய ஆட்சி நடத்தியவர்களைக் கொண்டாடுகிறது. அவுரங்கசீப், திப்பு, ஹைதர் போன்ற கொடுங்கோலர்களை வழிகாட்டிகளாகக் கொண்டு நாடு முழுவதும் வன்முறைகள் நடக்கின்றது. இது போன்று வன்முறைகளைத் தூண்டவும், தாரூல் இஸ்லாம் அதாவது இஸ்லாமிய உலகம் என்ற அடிப்படையில், எல்லைத்தாண்டிய மத அரசியல் அடையாளத்தை முன்நிறுத்தவும், அப்பாவி ஹிந்துக்களை ஏமாற்றி, அவர்களை ஹிந்து சமயத்திற்கு எதிராகத் திருப்பும் சர்வதேச சதியின் அங்கமே இந்த நூல் !

# பயங்கரவாதம், பிரிவினைவாதம், அடிப்படைவாதம் - ஆதரிக்கும் அரசும்

-சிகு

ஜனவரி 28, 2026 அன்று திண்டுக்கல் நகரில் பழனி பாபா நினைவு நாள் பொதுக்கூட்டம் நடந்தது. இதன் அங்கமாக நெடுஞ்சாலையை ஆக்கிரமித்து ஊர்வலம் சென்றார்கள் இஸ்லாமிய அடிப்படைவாதிகள். இந்த ஊர்வலத்தில் பழனி பாபா படை வருகுது பார், இமாம் அலி படை வருகுது பார், கோவை பாஷா பாய் படை வருகுது பார் என்ற கோஷங்கள் ஒலிபெருக்கி வாயிலாக எழுப்பப்பட்டன. இவர்கள் குறிப்பிடும் நபர்கள் யார் ?

வன்முறையைத் தூண்டும் வெறுப்புப் பேச்சின் வாயிலாக பல இஸ்லாமிய இளைஞர்களை மூளைச் சலவை செய்து பயங்கரவாதிகளாக மாற்றியவன் பழனி பாபா. கோவை குண்டு வெடிப்பு, ஆர்.எஸ். எஸ் அலுவலக குண்டு வெடிப்பு என்று வெடிகுண்டு நாயகனான, அல் உம்மா அமைப்பின் நிறுவனர் கோவை பாட்சா. பல குண்டு வெடிப்புகளுக்குக் காரணமானவன் இமாம் அலி !

இவர்களின் படை என்றால் என்ன பொருள்? தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்புக்களின் தலைவர்கள் பெயரில் ஊர்வலம் நடத்த காவல் துறை அனுமதிக்கலாமா? பல உயிர்களைக் குடித்த குண்டு வெடிப்புக்களை திட்டமிட்டு இயக்கிய கோவை பாட்சாவின் இறுதி ஊர்வலம் போலீஸ் பாதுகாப்புடன் கோவையில் நடந்தது. இந்த நிகழ்வுகள், இஸ்லாமிய பயங்கரவாதத்தை அரசு ஆதரிக்கிறது என்பதைக் காட்டுகிறது.

**பயங்கரவாதிகளின் சடலங்களைக் கொண்டு நடத்தப்படும் ஊர்வலங்கள், வன்முறைக்குக் காரணமாகின்றன என்பதைவிட, இளைஞர்கள் பலரை பயங்கரவாதிகளாக உருவாக்கப் பயன்படுகிறது.**

காஸா, காஷ்மீர் போன்ற இடங்களில், கொல்லப்பட்ட பயங்கரவாதிகளின் சடலங்களைக் கொண்டு நடத்தப்படும் ஊர்வலங்கள், வன்முறைக்குக் காரணமாகின்றன என்பதைவிட, இளைஞர்கள் பலரை பயங்கரவாதிகளாக உருவாக்க பயன்படுகிறது. பயங்கரவாதிகளின் நினைவு நாள் நிகழ்வுகளும், பயங்கரவாதத்தைப் பரப்ப உதவுகிறது. காஸா, காஷ்மீரைப் போல் இன்று தமிழகமும் மாறிவருகிறது என்பது வேதனையாகவுள்ளது.

கோவையில் சட்டவிரோத செயல்பாடுகள் தடுப்புச் சட்டத்தின் (Unlawful Activities (prevention) Act) கீழ் கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்க பிப்ரவரி 13, 2026 அன்று கருத்தரங்கம் நடத்தப்படுவதாக செய்தி வந்துள்ளது. நடத்தும் அமைப்பின் பெயரில்லை ஆனால் சிறப்புப் பேச்சாளர்கள் பட்டியலில் பெரியார் திராவிடர் கழக பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டினன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி துணைப் பொதுச் செயலாளர் வன்னி அரசு, எஸ்.டி.பி.ஐ மாநிலத் தலைவர் நெல்லை முபாரக் மற்றும் பலர் கலந்து கொண்டனர். இந்த அழைப்பில், ஆயிரக்கணக்கான ஊபா சிறைவாசிகளில் சிலர் என்ற பெயரில் சில புகைப்படங்கள் இருந்தன. இதில் பீமா காரேகாவோங் கலவரம் உள்ளிட்டவற்றில் குற்றவாளியான மாவோயிஸ்ட் தொடர்புடைய சுரேந்திர காட்லிங், காஷ்மீர் பயங்கரவாதத்தில் தொடர்புடைய குர்ரம் பர்வேஷ், சர்ஜில் இமாம், உமர் காலித் மற்றும் பி.எப்.ஐ அமைப்பின் பலரின் படங்கள் இடம்பெற்றிருந்தன.

பாரத அரசால் தடை செய்யப்பட்ட அமைப்பினருக்கு ஆதரவான மூன்றாவது கூட்டம் இது என்று சொல்லப்படுகிறது. எந்த ஒரு தடையுமின்றி தமிழகத்தில் பயங்கரவாத அமைப்புக்களின் செயல்பாடுகள் நடப்பதையே இது காட்டுகிறது. மம்தானி நியூயார்க் மேயரானபின், உமர் காலிதுக்கு ஆதரவான பதிவிட்டவுடன், உமர் காலித்தை விடுதலை செய் என்ற முழக்கம் வலுக்கிறது. இந்தச் சூழலை பயன்படுத்தி, அனைத்து பயங்கரவாதிகளையும் விடுதலை செய்ய அழுத்தம் கொடுப்பதற்கு இந்த நிகழ்ச்சி நடத்தப்படுகிறது. இந்தக் கோரிக்கை வலுப்பெற்றவுடன், சிக்கன் நெக் என்றழைக்கப்படும் சில்லுகுரி காரிடோரில் இஸ்லாமிய அடிப்படைவாதிகள் போராட்டம் ஒன்றை நடத்தி, வடகிழக்கு மாநிலங்களை இணைக்கும் சாலையை மறித்தனர். இரயில்வே சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தனர்.

நம் அண்டை நாடான வங்கதேசத்தில் ஹிந்துக்கள் மீது தாக்குதல் அதிகரித்து வருகிறது. வங்கதேசத்தில் மத அடிப்படைவாதத்தைப் பரப்பி ஹிந்துக்கள் மீது தாக்குதல் நடத்துவதை ஊக்குவிக்கும் ஜமாத்-இ-இஸ்லாம் கட்சி வெற்றி பெரும் சூழல் உள்ளது. அப்படி அந்தக் கட்சி வெற்றிபெற்றால் தியாகம் வீண்போகாது என்று சொல்லும் பாடமாகும். இது

ஒரு கட்சியின் வெற்றியல்ல, சிறை, தடை, தூக்கு, அவமதிப்பு எல்லாவற்றைத் தாண்டியும் தலை நிமிர்ந்து நின்ற சிந்தனையின் வெற்றி என்று தமிழ்நாடு வெல்ஃபேர் கட்சியின் மாநிலத் துணைத் தலைவர் திரு.ம.முகமது கவுஸ் பதிவிட்டுள்ளார். இஸ்லாமிய நாடான வங்க தேசத்திலேயே, அடிப்படைவாதத்திற்காகத் தடை செய்யப்பட்டது ஜமாயத்-இ-இஸ்லாம். பாரதத்தில் நடந்த பல தாக்குதல்களுக்கும், இந்த அமைப்பிற்கும் தொடர்புண்டு. இந்த அமைப்பின் வெற்றி, தெற்காசிய அரசியல் வரலாற்றையே மாற்றும் என்று கவுஸ் பதிவிடுகிறார். பிப்ரவரி 13, கோவையில் நடக்கவுள்ள ஊபா கைதிகள் விடுதலை கருத்தரங்கிற்கு இவர் உதவி செய்வதாகத் தகவல் வருகிறது.

வங்கதேசத்தை மையமாகக் கொண்டு நம் நாட்டில் பயங்கரவாதத்தில் ஈடுபடும் அமைப்புக்களின் ஆதரவாளர்கள், பாகிஸ்தானிலிருந்து இயங்கும் பயங்கரவாத அமைப்பின் ஆதரவாளர்கள், சர்வதேச அடிப்படை இஸ்லாமிய ஆட்சி அமைக்கத் துடிக்கும் ஆதரவாளர்கள், இடதுசாரி நக்ஸல் பயங்கரவாதிகளின் ஆதரவாளர்கள் என்று அனைவரும் கைகோர்த்து செயல்படுகிறார்கள். இவர்களின் நிகழ்ச்சி பகிரங்கமாகத் தமிழகத்தில் நடக்க அரசு அனுமதிப்பது, அரசே பயங்கரவாதத்தையும், பிரிவினைவாதத்தையும் ஆதரிக்கிறது என்பதைக் காட்டுகிறது.

உலகம் முழுவதும் இடதுசாரி லிபரல்களும், ஜிகாதிகளும் கூட்டுச் சேர்ந்து பல ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தி வருகிறார்கள். இந்த மாற்றங்கள் நடந்த இடங்களில், இடதுசாரிகள் ஒழிக்கப்பட்டு, இஸ்லாமிய அடிப்படைவாதிகள் கட்டுப்பாடே மேலோங்குகிறது. பாரிஸ், லண்டன், கனடாவின் பல பகுதிகள். இப்போது நியூயார்க் என்று பல நகரங்கள், பல ஐரோப்பிய நாடுகள் இன்று இஸ்லாமிய பயங்கரவாதத்தின் பிடியில் சென்றுள்ளது. இந்த சர்வதேச இடதுசாரி-ஜிகாதி கூட்டணியே கோவை நிகழ்ச்சியில் தென்படுகிறது. எனவே இந்த நிகழ்ச்சியும் சர்வதேச சதிக் கூட்டணியின் நீட்சியே. இந்தச் சூழலை பயன்படுத்தி அப்பாவி முஸ்லீம்களை அடிப்படைவாதிகளாக மாற்றும் முயற்சி வெற்றிகரமாகச் செயல்படுத்தப் படுகிறது.

திருநெல்வேலி மேலப்பாளையம் பகுதியில், மருத்துவமனைக்குச் சென்று பிரசவம் பார்ப்பது தவறு என்ற அடிப்படைவாத சித்தாந்தத்தை அமல்படுத்த வீட்டிலேயே பிரசவம் பார்த்த நசீன் உசேன் என்பவரது குழந்தை இறந்தது. இந்தப் பகுதியில் இப்படி பல இறப்புகள் நடந்துள்ளன என்கிறார்கள் உள்ளூர்வாசி கள். அஸ்கர் என்பவன் அனஸ் என்பவனை மூளைச் சலவை செய்து, கூட்டாக பல பிரசவம் பார்த்துள்ளனர், பலர் இறந்தும் உள்ளனர்.கருவுற்ற தாய்மார்களின் வீடுகளைக் கணக்கெடுத்து மருத்துவ உதவி செய்யும் அரசு இயந்திரம் என்ன செய்கிறது? குழந்தை இறப்பு, மகப்பேறு மரணம் ஆகியவற்றைத் தடுக்கும் அரசின் சட்டதிட்டங்கள், ஷரியத் சட்டத்தின் முன் சைலண்டாகிவிட்டன. உயிர்வாழுதல் அடிப்படை உரிமை. இந்தக் குழந்தையின் உயிர் வாழும் அடிப்படை உரிமையை, அடிப்படைவாத இஸ்லாமியச் சட்டம் பறித்து விட்டது.



தகுதியற்ற நபர்களால் கையாளப்பட்ட மருத்துவ சிகிச்சை என்ற அடிப்படையில் தந்தை உட்பட சிலர் மீது வழக்குப் பதிந்துள்ளது காவல்துறை. இது துயர சம்பவமாக இருக்கலாம் ஆனால் இதன் பின் இருக்கும் அடிப்படைவாத சித்தாந்தம், நாட்டிற்கு ஆபத்தாக அமையும். இந்த சம்பவத்தில் கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று, இலங்கை புத்தளத்தை மையமாகக் கொண்டு செயல்படும் ஜமாத்துல் முஸ்லிமீன் என்ற அமைப்பு பதிவிட்டிருக்கிறது. திருநெல்வேலி மேலப்பாளையத்தில் நடக்கும் சட்ட விரோதச் செயலுக்கு, இலங்கையில் ஆதரவுக் குரல் என்றால், இந்த நிகழ்வும் சர்வதேச அடிப்படைவாதத்துடன் தொடர்புடையது என்பது தெளிவாகிறது. இதுபோன்ற அடிப்படைவாத நம்பிக்கையே பயங்கரவாதிகளை உருவாக்க அடித்தளமிடுகிறது. இந்த அபாயங்களை உணர்ந்து, சர்வதேச பயங்கரவாதிகள், மத அடிப்படைவாதிகள், பிரிவினைவாதிகள், இம்மூவரை ஆதரிக்கும் மாநில அரசிலிருந்து மத்திய அரசு தமிழகத்தைக் காக்கவேண்டும்.

# நியூஸ் 24/7 சேனல் மீதான தாக்குதல்

-ராஜேஷ்

சமீபத்தில் தமிழகம் வந்து மதுராந்தகத்தில் NDA கூட்டணி பொதுக்கூட்டத்தில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, திமுக ஆட்சி என்பது CMC. அதாவது Corruption,Mafia and Crime என விவரித்தார். நம் கட்டுரை அச்சில் ஏறும் வரை ஸ்ரீரங்கம் திமுக எம்.எல்.ஏ பழனியாண்டி மீது வழக்கு பதிவு செய்யப்படவில்லை. என்ன தான் நடந்தது?

பழனியாண்டிக்கு சொந்தமான குவாரி கரூர் மாவட்டம், சிவாயம் பகுதியில் செயல்பட்டு வருகிறது. இந்தக் கல்குவாரியில் செய்தி சேகரிக்க நியூஸ் தமிழ் 24x7 திருச்சி மாவட்டச் செய்தியாளர் கதிரவன், கேமராமேன் செபாஸ்டின், சமூக ஆர்வலர் சுடலைக்கண்ணு, வழக்கறிஞர் திருமலை ராஜன், உதவியாளர் ராஜமாணிக்கம் ஆகிய 5 பேர் சென்றிருக்கின்றனர்.

குளித்தலை - மணப்பாறை நெடுஞ்சாலையில் இருந்து ட்ரோன் மூலம் முழுவதுமாக எம்.எல்.ஏ-வின் கல்குவாரியை கவர் செய்து வீடியோ, போட்டோ எடுத்துள்ளனர். படம் எடுத்தது குவாரியில் இருந்த ஊழியர்களுக்கு தெரியவர 50க்கும் மேற்பட்டவர்கள் எம்.எல்.ஏ பழனியாண்டி தலைமையில் வந்து செபாஸ்டின்,திருமலை ராஜன் மற்றும் உதவியாளர் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். இது தொடர்பான செய்தி ஊடகங்களில் வெளிவந்தவுடன் பழனியாண்டி க்ரூப் பதற்றம் அடைந்து விட்டது. காரணம் செய்தியாளர், கேமராமேன் ஆகியோரின் மொபைலை பிடுங்கி வீடியோவை அழித்த நிலையில் எப்படி ஊடகங்களுக்குச் சென்றது என குழப்பம். மேலும் தாக்குதல் நடத்திய இடத்திற்கு அருகில் இருந்த பெட்ரோல் பங்க் சிசி டிவியின் வீடியோவை அழிக்கும் வேலையில் ஈடுபட்டது எம்.எல்.ஏ மகன் தரப்பு.

**கேமராமேன் வாயிலேயே எம்.எல்.ஏ பழனியாண்டி குத்தும் வீடியோ ஆதாரம் இருந்தும் இப்போது வரை திமுக பழனியாண்டி மீது வழக்கு பதிந்து கைது செய்யப்படவில்லை**

எதிர்க்கட்சிகள் குரல் கொடுக்க ஆரம்பித்தவுடன் பழனியாண்டி 2029 வரை குவாரி நடத்துவதற்கான உரிமம் இருப்பதாகவும், சமூக ஆர்வலர் சுடலைகண்ணுவும், திருமலைராஜனும் பணம் பறிக்கும் வேலையில் தொடர்ந்து ஈடுபட்டதால் குவாரி ஊழியர்களுடன் தகராறு ஏற்பட்டது. அப்போது கேமரா கண்ணாடி உடைந்து எங்கள் ஊழியருக்கு 50 தையல் போடும் அளவுக்கு காயம் ஏற்பட்டது கூசாமல் பேசினார் எம்.எல்.ஏ.

மாவட்ட காவல்துறையோ இருதரப்பின் மீதும் வழக்கு பதிந்தது.இதற்கு அரசியல் கட்சிகள் மத்தியில் கடும் எதிர்ப்பு கிளம்பியது. அண்ணாமலை, எடப்பாடி,நயினார் கண்டனம் தெரிவித்தனர்.

சம்மந்தப்பட்ட ஊடகம் வெளியிட்ட வீடியோ காட்சியால் பலருக்கும் அதிர்ச்சி. காரணம் நியூஸ் சேனல் கொண்டு வந்த கேமராவை காரிலிருந்து எடுத்து கேமராமேன் வாயிலேயே எம்.எல்.ஏ பழனியாண்டி குத்தும் வீடியோ தான் அது. இப்படி தெளிவான ஆதாரம் இருந்தும் இப்போது வரை திமுக பழனியாண்டி மீது வழக்கு பதிந்து கைது செய்யப்படவில்லை என்பது அரசின் அப்பட்டமான அதிகார துஷ்பிரயோகம்.

இதைவிடக் கொடுமை என்னெவென்றால் திமுக கூட்டணி நீங்கலாக பிற கட்சிகள் காட்டும் எதிர்ப்பைக் கூட சக ஊடகங்கள் வெளிக்காட்டவில்லை. தங்களைப் போன்ற ரிப்போர்டர் தாக்கப்பட்டும் கூட பிரஸ் கிளப் சார்பில் போராட்டம் நடந்ததா தெரியாது. உலகளவில் பத்திரிகையாளர்களுக்கு ஆபத்தான நாடுகள் பட்டியலில் இந்தியா முக்கிய இடத்தில் இருக்கிறது என தன்னுடைய ஏசியன் ஸ்கூல் ஆஃப் ஜெர்னலிஸம் நடத்தும் கருத்தரங்கில் தவறாமல் ஊளையிடும் என்.ராம் சிறு முனுமுனுப்பு கூட செய்யாமல் இருப்பது, திராவிட மாடல் அரசு தமிழக ஊடகங்களுக்கு நாய்க்கு எலும்புத்துண்டுகளை வீசுவது போல "எதையோ" தந்து வாயடைத்து விடுகிறது என்பது தெளிவாகிறது.

கொடுமையைக் கண்டு கண்கள் சிவக்க போர்க்குரல் இடும் இம்மண்ணின் ஊடக, பத்திரிகையாளர்களையா இப்படி சொல்கிறாய் என கேட்கிறீர்களா? அதற்கு மிக சமீபத்திய ஊடக விவாதத்தில் நடந்த சம்பவமே அதற்கு உதாரணம். மாலைமுரசு செய்தி சேனல் விவாதத்தில் தவெகவை கிண்டல் செய்து பேசினார் லக்ஷ்மி சுப்ரமணியம் ( பன்வாரிலால் கன்னத்தை தொட்டார் என சீன் போட்ட உத்தமி). பதிலுக்கு தவெக சார்பில் கலந்து கொண்ட ஃபெலிக்ஸ் திமுக எம்.எல்.ஏ வால் தாக்குதலுக்கு உள்ளான உங்களைப் போன்ற ரிப்போர்டருக்காக குரல் கொடுங்க முதலில் என்றார். ஆனால் கொஞ்சம் கூட அலட்டிக் கொள்ளாத லக்ஷ்மி, நான் ஏன் பழனியாண்டியை எதிர்த்து பேசனும் என்றார்.

ஆளுங்கட்சியின் முறைகேடுகளுக்கு எதிரான குரல்கள் எல்லா வகையிலும் ஒடுக்கப்படும் என்பதே நிதர்சனம்.

# அரசியல் உலா

**- கரிகாலன்**

"நல்ல காலம் பொறக்குது!"
"நல்ல காலம் பொறக்குது!"

குடுகுடுப்பைக்காரன் போல குரல் ஒலித்தது. அந்த நண்பர் ஏளனம் செய்யவில்லை. இதுவரையில் நடந்ததை நாம் ஏற்கனவே சொல்லிவிட்டதாலும் இனி வருவதையும் அவ்வப்போது நாம் சொல்லி வருவதாலும் என்னைப் பார்த்தவுடன் எழுந்த உற்சாகம்.

உவகையோடு ஏற்றுக்கொண்டு அந்த உணவு விடுதியின் உள்ளே நுழைந்தோம். வழக்கமாக அமருமிடத்தில் எதிரில் சில பேரும் அருகில் சில பேருமாகச் சபையைக் கூட்டினோம். ஓரிருவர் தவிர அனைவருமே அன்று அங்கே குழுமியிருந்தார்கள்.

"விடிகார்த்தால ஒரு கனவு, ஒரு யானை தானே தன் தலையில மண்ணள்ளிப் போட்டுகிச்சு. அதுக்கு என்ன ஓய் அர்த்தம்?", தனது கனவைச் சொல்லி விளக்கம் கேட்டார் தஞ்சாவூர்க்காரர்.



"யாரு அப்பாவைச் சொல்றீங்களா" இது ஒருவர்.
"ஏன் அண்ணியாருக்கு இது பொருந்தாதா?" இடைமறித்தார் இன்னொருவர். எந்த அப்பாவைச் சொல்றார், எந்த அண்ணியாரைச் சொல்றார் எனத் தெரியாமல் நான் முழித்துக் கொண்டிருந்தேன்.

மாயாவதியைச் சொல்றீங்களா?" என்று கேட்டார் மற்றொருவர். மாய உலகில் வாழும் மற்றொரு கட்சித் தலைவி கண்முன்னே வந்து போனார்.

அது வெறும் கனவு இல்லைங்க. இப்ப தமிழ்நாட்டுல பல பேரோட நிலைமையும் அந்த யானை போல தான்.

"எப்பவுமே திமுக கூட்டணியைக் குறை சொல்லியே பேசுறீங்களே, நல்லதா நாலு வார்த்தை சொல்லக் கூடாதா?", ஆதங்கப்பட்டார் அந்தக் கட்சியின் அனுதாபி.

"மார்க்கத்தினர் தங்கள் மதத்தின் பெயரை வெளிப்படையாகச் சேர்த்தும், மறைத்து மனிதநேயத்தை முன்னிறுத்தியும் இரு கட்சிகளாகப் போட்டிப் போடுகின்றனர். அவர்கள் எந்தக் காரணத்தைக் கொண்டும் திமுக கூட்டணியை விட்டு வெளியே வர மாட்டார்கள். அந்தக் கூட்டணிக்கு இது ஒரு நல்ல செய்தி!"

**அடுத்து?**

"கம்யூனிசத்தைக் கல்லறைக்குள் புதைத்து விட்டுக் காசுக்காகக் கட்சி நடத்துபவர்கள் இரு கம்யூனிஸ்ட்கள், அதற்கு சற்றும் சளைக்காத கட்சி தான் மதிமுக. இவர்கள் மூவரும் சேர்ந்து சாப்பிடலாம் திமுக அஸ்தமிக்கும் வரை கூடவே இருந்து காரியங்கள் செய்வார்கள்!"

**"ஓஹ்!"**

"அடங்கியே இருப்பேன், அத்துமீறவே மாட்டேன்"- என்று கிட்டத்தட்ட கல்லறைக்குள் போய் படுத்து விட்ட நிலையில் ஒருத்தர் இருக்கிறார். உள்ளே சென்றவர்கள் மீண்டு வருவதில்லை இப்போதைக்கு இவரை அந்தப் பட்டியலில் வைத்துக் கொள்ளலாம். அவரைப் பற்றியும் திமுக கவலைப்படத் தேவையில்லை!"

கொங்கு மக்கள் தங்கள் முன்னேற்றத்தை அவர்களே தீர்மானித்துக் கொள்வார்கள் (அங்கு அதிமுக கூட்டணி தான் வெல்லும்) என்பது தெளிவாகி விட்ட காரணத்தினால், கொங்கு மண்டலத்தில் போட்டியிடுவது பற்றியோ கூட்டணி அமைப்பது பற்றியோ திமுக கவலைப்படவே தேவை இருக்காது. அங்கு இருக்கும் அந்த உதிரிக் கட்சியையும் நாம் கணக்கில் இருந்து உதறி விடலாம்.

அடுத்ததாகத் தமிழக வாழ்வுரிமைக் கழகம். ஏற்கனவே பாட்டாளிகளின் வாழ்வுரிமையை போட்டி போட்டு இரண்டு பேர் பங்கு பிரித்துக் கொள்ள பிரயாசைப்படுகிறார்கள். அப்பாவுக்கா, மகனுக்கா என்ற அந்தப் போட்டியே ஓயாத நிலையில் இந்த சின்ன கட்சியும் இனி ஆட்டத்தில் இருக்கப் போவதில்லை. கணக்கிலிருந்து கழித்து விடுவோம்.

"இப்படிக் கவலைங்களை கழிச்சிட்டே வந்தா, திமுக ரொம்ப சுலபமா ஜெயிச்சுடும் போல இருக்கே! அதான் சொல்ல வரிங்களா?", என்று கேட்ட அவரின் முகத்தில் பீதி தெரிந்தது.

"இருப்பா, அவசரப்படாதே! திமுகவுக்கு இப்போதைக்கு ஒரே ஒரு பிரச்சனை தான். அது ஒத்தைத் தலைவலி, தீவிரத் தலைவலி. காங்கிரஸ் கூடவே இருக்கனுமா, கழட்டி விடனுமான்னு திமுக தான் முடிவு செய்யனும்!"

"அப்ப காங்கிரஸ் தானா கழண்டு போகாதா?"

"அது ஏற்கனவே கழண்டு போனது தான். இப்ப கூட அது தனியாப் போகலாம், போகாமலும் இருக்கலாம்!"

"இப்படிச் சொன்னா எப்படி? ஏதாவது ஒன்னு சொல்லுங்க!"

""ரெண்டு தரப்புலயும் ஒருத்தருக்கு ஒருத்தர் குறை சொல்றதப் பாத்தா, யாருமே இண்டி கூட்டணிய விரும்பலன்னு தெரியுது. திமுகவை விட்டு காங்கிரஸும், காங்கிரஸ விட்டு திமுகவும் தானா பிச்சுகிட்டுப் போகட்டும்னு தான் பேசியேப் பிரச்சனைய வளக்கறாங்க!"



"இப்ப சமீபத்துல கூட ஒரு நிகழ்ச்சியில பேசும்போது, ஜெயிச்சா ஆட்சியில பங்கு தர மாட்டோம்னு ஸ்டாலின் உறுதியா சொல்லிட்டாரே! அப்ப இனிமே முடிவெடுக்க வேண்டியது காங்கிரஸ் தானே?"

"ஆட்சியில பங்கு தரேன்னு சொல்ற விஜய் கூடப் போனா, நெறைய இடத்துல போட்டியிட வாய்ப்பு கிடைக்கும். ஆனா ஒன்னுல கூட ஜெயிக்கறது கஷ்டம் (முடியாது). திமுக கனவுல மண்ணு அள்ளிப் போட்டோம்னு திருப்திப் பட்டுக்கலாம், அவ்ளோ தான். அதாவது அவங்க நெனச்சா அவங்கள மட்டம் தட்டின திமுகவ ஒட்டுமொத்தமா தோக்கடிக்க முடியும்!"

"முக்கியத்துவத்தை இந்தத் தேர்தல்ல மீதிப் பேருக்குப் புரிய வெச்சாத் தான், அடுத்த தேர்தல்லயாவது கட்சிக்கு மதிப்பு கிடைக்கும்ன்னு அவங்களுக்கு ஒரு நம்பிக்கை!"

"மகளிர் வங்கிக் கணக்குல 5000 ரூபா போட்டு அதிமுகவ மெரட்ட திமுக நெனைக்குது, விஜய் கட்சிய வெச்சு திமுகவ மெரட்ட காங்கிரஸ்நெனைக்குது. காங்கிரஸ மெரட்டனும்னு திமுக நெனைச்சா, பேச்சுவார்த்தைநடத்த கமலஹாசன அனுப்பினாப் போதுமே!", அறிவாலயத்துக்கே ஆலோசனை கூறினார் ஒரு அன்பர்.

**நல்ல காலம் பொறக்குது!**

"நல்ல செய்தி எதுவா இருந்தாலும் நான் மட்டுந்தான் சொல்லனுமா? இன்னைக்கு நீங்க யாராச்சும் சொல்லுங்களேன்!", என்ற போது உடனடியாக ஒரு குரல் ஒலித்தது.

"தமிழகத்துல தேசிய ஜனநாயகக் கூட்டணி ஜெயிக்கிறதுக்குத் தேவையான பலமும், மக்கள் ஆதரவும் இப்பவே வந்துடுச்சு. இனிமே எந்தக் கட்சி உள்ளே வந்தாலும் அவங்களுக்கும் கூட்டணிக்கும் பலம் இன்னும் கூடுமே தவிர இம்மியளவும் குறையாது!"

"இதுவரைக்கும் நிலைப்பாட்டை தெளிவா அறிவிக்காதவங்க இதைப் புரிஞ்சுகிட்டு அவங்களையும் தேசிய ஜனநாயகக் கூட்டணியில இணைச்சுட்டாங்கன்னா, அது லாபமே தவிர எந்த விதத்துலயும் நஷ்டமாகாது!"

"அப்படின்னா எண்ணிக்கை முக்கியமில்ல, அதானே! அதுக்குப் புது விளக்கம் எதுக்கு?", சலித்துக் கொண்டார் ஒருவர்.

அவருக்குச் சொன்ன அதே விளக்கத்தை ஸ்ரீ தமிழ் வாசகர்களுக்கு இப்பொழுது சொல்கிறேன். அந்த வாக்கியம் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டு சிலரால் விமர்சிக்கப்பட்டது. எண்ணம் முக்கியமாகும் பொழுது எண்ணிக்கையும் கூடுதல் முக்கியம் பெறுகிறது. தனிப்பட்ட எண்ணிக்கை எதுவாக இருந்தாலும் அது எதிரியை வீழ்த்த தேவையான கூட்டு எண்ணிக்கையில் ஒரு அங்கம் தானே!

"ஆட்சியில பங்கு தருவோம்ன்னு சொல்றத தோல்வியா நினைக்குது திமுக. அதான் பங்கு தர மாட்டோம்ன்னு ரொம்பப் பிடிவாதம் பிடிக்கிறாங்க. திமுக தரப்புல மட்டுந்தான் இது ஒரு பேசு பொருளாகியிருக்கு. அதிமுகவும் அதே மாதிரி சொன்னாக் கூட, தேசிய ஜனநாயக கூட்டணியில யாரும் அதப் பத்தி கவலைப்படுறதில்ல. ஜெயிச்சா கூட்டணி மந்திரி சபைதான்னு அதுல இருக்கிற எல்லாருக்கும் தெரியும். பிடிவாதத்தால திமுக ஆட்சியை இழக்குது, அமைதியா இருந்தே அதிமுக ஆட்சியைப் பிடிக்குது!"

என் கருத்தை அசைப் போட்டு ரசித்தபடியே அன்றைய சபை கலைந்தது. அடுத்த முறை நாம் சந்திக்கும் போது அநேகமாகத் தேர்தல் தேதி கூட அறிவிக்கப்பட்டு இருக்கலாம்.

# அன்னதானத்திலும் தீண்டாமை; அறநிலையத்துறையின் திராவிட மாடல்

-குற்றாலநாதன்

கடந்த 3.2.2026 செவ்வாய்க்கிழமை தமிழக முன்னாள் முதலமைச்சர் அண்ணாதுரையின் நினைவு நாளை முன்னிட்டு திருநெல்வேலி அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோவிலில் சமபந்தி போஜனம் நடைபெற்றது.

தமிழக அரசின் இந்து சமய அறநிலையத்துறை சார்பில் நடைபெற்ற இந்த விழாவில் தமிழக சட்டப்பேரவை சபாநாயகர் அப்பாவு அவர்கள் கலந்து கொண்டு சமபந்தி போஜனம் நடத்தினார்.

மதியம் சுமார் 12.45 மணிக்கு நிகழ்ச்சி தொடங்கப்பட்ட சிலமணி நேரத்தில் நரிக்குறவர் சமூகத்தைச் சார்ந்த குழந்தைகள் உள்ளே சென்றபோது தடுத்து நிறுத்தப்பட்டதாகவும் அவர்கள் வெளியில் வந்து உள்ளூர் youtube செய்தியாளர் ஒருவரிடம் தங்களை உள்ளே விடவில்லை என தெரிவித்ததாகவும் உடனே அந்த செய்தியாளர் அந்த நரிக்குறவர் சமுதாய குழந்தைகளை அழைத்துக் கொண்டு உள்ளே சென்றபோது உணவு இல்லை என திருப்பி அனுப்பியதாகவும் அந்த குழந்தைகளும் அந்த செய்தியாளரும் வெளியிட்ட செய்தி தமிழகத்தையே உலுக்கியது.

சாதி ரீதியாக பாகுபாடு காட்டி அவர்கள் உள்ளே மறுக்கப்பட்டதாக குற்றச்சாட்டு எழுந்த நிலையில் உடனடியாக நெல்லையப்பர் கோவில் நிர்வாகம் அதற்கு மறுப்பு தெரிவித்து உணவு தீர்ந்து போனதால் குழந்தைகளுக்கு வழங்க முடியவில்லை என கண்காணிப்பு கேமரா காணொளி பதிவை வெளியிட்டது.

ஆனால் நெல்லையப்பர் கோவில் நிர்வாகம் வெளியிட்ட அந்த காணொளி பதிவைப் பார்த்தால் நரிக்குறவர் சமுதாய குழந்தைகள் சமபந்தி போஜனம் நடைபெறும் இடத்திற்கு அருகில் வருவதற்கு சில நொடிகளுக்கு முன்பு தள்ளு வண்டிகளிலும் பாத்திரங்களிலும் சமபந்தி போஜனம் நடைபெற்ற இடத்திற்குள் ஏதோ கொண்டுச் செல்லப்படுகிறது அது நிச்சயம் உணவு பொருளாகத் தான் இருக்கக்கூடும் அவ்வாறு இருக்கையில் உணவு இல்லை எனக் கூறி குழந்தைகளை திருப்பி அனுப்பிய செயல் மிகுந்த வேதனையான ஒன்றாகும்.

சபாநாயகர் அப்பாவு உள்ளிட்ட அறநிலையத்துறை அதிகாரிகள் திமுக முக்கிய பிரமுகர்கள் பலர் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் நான்கு குழந்தைகளுக்கு கூட உணவு அளிக்காமல் திருப்பி அனுப்பியது மனிதாபிமானமற்ற செயலாக பார்க்கப்படுகிறது.

உண்மையிலேயே உணவு தீர்ந்து போயிருந்தாலும் நான்கு குழந்தைகளுக்கு உணவு வாங்கி கொடுக்காமல் திருப்பி அனுப்பியது பாரபட்சமான செயலாகும். உடனடியாக நெல்லை மாநகர இந்துமுன்னணி இந்த பிரச்சனையில் தலையிட்டு 5.2.2026 அன்று மாலை நரிக்குறவர் சமுதாயத்தைச் சேர்ந்த பெரியவர்கள் குழந்தைகள் என சுமார் 30க்கும் மேற்பட்டவர்களை திருக்கோவில் வாசலில் காவி சால்வை அணிவித்து வரவேற்று அவர்கள் கைகளைப் பிடித்து உள்ளே அழைத்துச் சென்று சுவாமி தரிசனம் செய்ய வைத்து கோவில் அர்ச்சகர் அவர்களுக்கு நெற்றியில் விபூதி பூசி மாலை மரியாதை செய்து பின்னர் திருக்கோவிலில் சர்க்கரை பொங்கல் பிரசாதம் மற்றும் ஆப்பிள் பழங்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டது. எனது தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இந்துமுன்னணி நிர்வாகிகள் பலர் பங்கேற்றனர்.

இந்து மதத்தில் ஏற்றத்தாழ்வுகள் இல்லை நரிக்குறவர் சமுதாயத்தைச் சார்ந்த வள்ளி அம்மையை முருகனின் மனைவியாக தெய்வமாக நாங்கள் வழிபடுகிறோம் இவர்கள் வள்ளியம்மையின் வம்சாவளியினர் இவர்களோடு நாங்கள் இருக்கிறோம் எங்களோடு இவர்கள் இருக்கிறார்கள் நரிக்குறவர் சமுதாய குழந்தைகளுக்கு உணவு மறுக்கப்பட்டதற்கு தமிழக அரசாங்கமும் அந்நிகழ்வில் பங்கேற்ற சபாநாயகரும் திமுக நிர்வாகிகளும் வெட்கி தலை குனிய வேண்டும். திமுக ஆட்சியில் தொடர்ந்து சாதிய பாகுபாடுகள் திமுக மக்கள் பிரதிநிதிகளாலே நடத்தப்பட்டு வருகிறது நாம் செய்திகள் மூலம் பார்க்கிறோம். கடந்த சில மாதங்களுக்கு முன்பு கிறிஸ்தவக் கூட்டத்தில் பேசிய சபாநாயகர் அப்பாவு இந்து மதத்தில் ஏற்றத்தாழ்வு இருப்பதாகவும் கிறிஸ்தவர்கள் வந்து தான் சமநிலையை உருவாக்கியதாகவும் ஒரு பொய் பிரச்சாரத்தை மேற்கொண்டார் அதனை உறுதி செய்வதற்காக இது போன்ற நிகழ்வுகளை சபாநாயகர் பங்கேற்ற நிகழ்வில் நடத்தப்பட்டதா? என்கின்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

நரிக்குறவர் சமுதாயத்தினருடன் இந்துமுன்னணி நிர்வாகிகள் கோவிலில் சென்று தரிசனம் செய்து பிரசாதம் வழங்கிய போது அச்சமுதாயத்தினர் மிகுந்த நிகழ்ச்சியோடு அவர்களுக்கு நன்றி தெரிவித்தனர்.முதலில் கடவுள் மீதே நம்பிக்கையே இல்லாத, கடவுளை இழிவுபடுத்திய அண்ணாதுரை நினைவு நாளுக்கு சமபந்தி போஜனம் என்பதே அயோக்கியத்தனம் அதிலும், பாகுப்பாடு காட்டியது அயோக்கியத்தனத்தின் உச்சம்

# அரசு நிலத்தை ஆட்டையப் போடும் சர்ச்; கண்டுகொள்ளாத அரசு

-மீரா

திருப்பரங்குன்றம் பசுமலையில் 32 ஏக்கர் 96 செண்ட் நிலத்தை 1857ல் அமெரிக்கன் மிஷனரி போர்டு பெயரில் 99 ஆண்டுகள் குத்தைக்கு நிபந்தனையில் பேரில் அன்றைய ஆங்கிலேய கிறிஸ்தவ அரசு வழங்கியது. சுதந்திரத்திற்கு பின் பல்வேறு மிஷனரிகள் ஒருங்கிணைந்து தென்னிந்திய சபை உருவாக்கப்பட்டது. மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை புது நிர்வாகிகள் தேர்வு செய்யப்படுவர். அவர்களுக்கு அரசு நிலம் உரிமை மாற்றம் செய்யப்படும். அந்நிலத்தில் சி.எஸ்.ஐ பசுமலை மேல்நிலை பள்ளி உள்ளது. 99 ஆண்டுகள் குத்தகைக் காலம் 1956ல் முடிந்து விட்டது. அது ஒப்படை அல்லது இனாமாக வழங்கப்பட்ட நிலம் அல்ல. மிஷினரிகளுக்கு வழங்கிய நிலத்தை சி.எஸ்.ஐ.டி.ஏ நிர்வாகிகளுக்கு உரிமை மாற்றம் செய்தது விதிமீறலாகும். குத்தகை நீட்டிப்பும் செய்யவில்லை. உண்மையை மறைத்து சி.எஸ்.ஐ.டி.ஏ பெயரில் பட்டா மாறுதல் செய்து போலி ஆவணம் மூலம் 11 ஏக்கர் நிலம் விற்கப்பட்டுள்ளது. அரசுக்கு 1000கோடி வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. கல்வி பணிக்காக கொடுத்த நிலத்தில் வணிக வளாகத்தை சர்ச் நிர்வாகம் கட்டியுள்ளது.

இந்த முறைகேடுகளை குறிப்பிட்டு, இவற்றை அகற்ற நடவடிக்கை எடுக்கக் கோரி 2025 ஜுலை 10ல் கலெக்டர், திருமங்கலம் ஆர்.டி.ஓ திருப்பரங்குன்றம் தாசில்தார் ஆகியோருக்கு கிறிஸ்தவ சீர்திருத்த சங்கத் தலைவரான திரு தேவசகாயம் மனு அனுப்பினார்.

தாசில்தார், ஆக்ரமிப்புகளை அகற்ற சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று பதிலளித்தார். கலெக்டரும் அதிகாரிகளால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று பதிலளித்தார். ஆனால் இதுவரை ஆக்ரமிப்பை சி.எஸ்.ஐ நிர்வாகம் அகற்றவில்லை. இந்த ஆக்ரமிப்புகளை அகற்ற உத்தரவிட வேண்டும் என்று நீதிமன்றத்தில் திரு தேவசகாயம் வழக்குத் தொடுத்தார். நீதிபதிகள் இது குறித்து அப்போதே கலெக்டருக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டார். ஆனாலும் எந்த நடவடிக்கையும் அதிகாரிகள் எடுக்க வில்லை. இந்த வழக்கு மீண்டும் பிப்ரவரி 11 2026 அன்று நீதிமன்றத்தில் நீதிபதிகள் திரு.ஜெயச்சந்திரன், திரு.இராமகிருஷ்ணன் அமர்வில் வந்தது. அப்போது நீதிபதிகள், ஆக்ரமிப்பை அகற்ற ஆகஸ்ட் 26ல் பிறப்பித்த உத்தரவு அடிப்படையில் மேற்கொண்ட நடவடிக்கையின் தற்போதைய நிலை குறித்து கலெக்டர், ஆர்.டி.ஓ., தாசில்தார் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று கூறி விசாரணையை ஒத்தி வைத்துள்ளனர்.

**ஆக்ரமிப்பை அகற்ற, நீதிமன்றத்தில் உத்தரவிட்டபின்பும் அரசுக்கு ஆக்ரமிப்பை அகற்ற மனம் வரவில்லை. காரணம், கிறிஸ்தவர்கள் மனம் புண்பட்டால் அதை இந்த அரசாங்கத்தால் தாங்க இயலுமா?**

ஆக்ரமிப்பை அகற்ற, நீதிமன்றத்தில் உத்தரவிட்டபின்பும் அரசுக்கு ஆக்ரமிப்பை அகற்ற மனம் வரவில்லை. காரணம், கிறிஸ்தவர்கள் மனம் புண்பட்டால் அதை இந்த அரச ாங்கத்தால் தாங்க இயலுமா? ஆனால், இதுவரை அரசு நிலம் ஆக்ரமிப்பு, நீர் நிலை ஆக்ரமிப்பு என்ற காரணம் காட்டி பல கோவில்களை இடித்துள்ளது இந்த திராவிட மாடல் அரசு.

ஆங்கிலேய ஆட்சியாளர்கள் மிஷனரிகளுக்கு பல ஏக்கர் நிலங்களை தாரை வார்த்துக் கொடுத்துள்ளனர். அதை தவிர இதுப்போன்று பல செ ாத்துக்களை சட்டவிரோதமாக கிறிஸ்தவர்கள் ஆக்ரமித்துள்ளனர். லயோலா கல்லூரியின் சொத்து விவரங்கள் இதுவரை வெளிவராமலேயே இருக்கின்றன என்பதையும் பார்க்கிறோம். மதத்தின் பெயரில் இயங்கும் கிறிஸ்தவ நிறுவனங்கள், தொண்டு, பொதுச் சேவை என்ற பெயரில் அரசு நிலங்களையும், கோயில் சொத்துகளையும் ஆக்கிரமித்து வருவது வாடிக்கையாகிவிட்டது. இந்த சி.எஸ்.ஐ டயோசிகளில் நடக்கும் ஊழல்களையும், அங்கு நடக்கும் வன்முறைகளையும் நாம் பார்த்து வருகிறோம். ஏற்கனவே நீதிமன்றம் கூட கிறிஸ்தவ நிறுவனங்களை வழிநடத்த ஹிந்து சமய அறநிலையத்துறை போன்ற ஒரு அமைப்பை அரசு ஏற்படுத்தலாமே என்ற கருத்தையும் முன்வைத்தது.

எங்காவது குற்றம் தென்படாதா என்று எதிர்பார்த்து காத்திருந்து கோவிலை தன் வசம் கொண்டு வரும் அரசாங்கம், வெளிப்படையாக நில அபகரிப்பு, ஊழல், வன்முறை என்று குற்றச் செயல்களில் ஈடுபடும் கிறிஸ்தவ டயோசிஸ்களை தன் கட்டுப்பாட்டில் கொண்டு வர ஏன் மறுக்கிறது?

# எடப்பாடியில் லேண்ட் ஜிகாத்

-வீர வேலுநாச்சியார்

சேலம் மாவட்டம் எடப்பாடி தாலுக்காவில் இருக்கும் வி.என்.பாளையம் கிராமத்தில் 18பட்டி கோட்டை பெரிய மாரியம்மன் கோவில் அமைந்துள்ளது. இந்த கோவிலையொட்டி எடப்பாடி டூ ஜலகண்டாபுரம் செல்லும் நெடுஞ்சாலை இருக்கிறது. மாரியம்மன் கோவிலுக்கு வெகு அருகிலேயே ஒரு மசூதி மற்றும் தர்காவை கட்டியுள்ளனர் முஸ்லீம்கள்.

மசூதிக்கு அருகில் கடைகள் கட்ட அவர்கள் சொந்தமான நிலத்துடன், நெடுஞ்சாலைதுறைக்குச் சொந்தமான 72செண்ட் நிலத்தையும் இணைத்து கட்ட முயற்சித்துள்ளனர். இந்த விஷயம், பாஜக நிர்வாகியான சந்திரனுக்குத் தெரிய வரவே உடனடியாக அவர் நெடுஞ்சாலைத்துறைக்கு புகார் மனு அனுப்பியுள்ளார்.

நெடுஞ்சாலைத்துறையும் தாசில்தாருக்கு நடவடிக்கை எடுக்க கோரிக்கை விடுத்தது. ஆனாலும், நடவடிக்கை எடுக்காமல் காலந்தாழ்த்தி உள்ளனர். அதன் பின் மீண்டும் திரு சந்திரன் அவர்கள் நெடுஞ்சாலைத் துறைக்கு அழுத்தம் கொடுத்துள்ளார். அதன் விளைவாக, 21.01.2026 அன்று நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள், தாசில்தார் உள்ளிட்ட அதிகாரிகள் காவல்துறையினர் பாதுகாப்புடன் நிலத்தை அளவீடு செய்ய வந்துள்ளனர். அதற்கு முஸ்லீம்கள் தரப்பில் கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். ஆனாலும், நெடுஞ்சாலைத்துறை உறுதியாக நின்று, நிலத்தை அளவீடு செய்து நில அளவைக்கல் உன்றி எச்சரிக்கை பலகையும் வைத்து விட்டு சென்றுள்ளனர். ஆனால், அரசு அதிகாரிகளை பணி செய்ய விடாமல் தடுத்த குற்றத்திற்காக யார் மீதும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

18பட்டி பெரிய மாரியம்மன் கோவிலுக்குச் சொந்தமான இடத்தில் முஸ்லீம்கள் வசிக்கும் பகுதிக்கு போகும் பாதை அமைந்துள்ளது. இந்தப் பாதையில் உள்ளாட்சி நிர்வாகம் சாலையும் அமைத்துக் கொடுத்துள்ளது. இந்த கோவிலின் அருகில் உள்ள பெருமாள் கோவிலின் நிலம் முஸ்லீம்களால் ஆக்ரமிக்கப்பட்டும் உள்ளது. இது தொடர்பாக அறநிலையத்துறை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. 18பட்டி மாரியம்மன் கோவில் சொத்துக்கள் பல ஆக்ரமிப்பில் உள்ளன. இதன் மீது ஏன் நடவடிக்கை இல்லை என்று கேட்டால் இந்த கோவிலே அறநிலையத்துறையின் பட்டியலில் இல்லை என்கிறது அறநிலையத்துறை. இந்த கோவிலுடன் இணைந்த பல திருக்கோவில்கள் அறநிலையத்துறை கட்டுபாட்டில் இருக்கையில் இந்த கோவில் மட்டும் எப்படி இல்லாமல் போனது என்று எழுப்பினார் திரு சந்திரன் அவர்கள். எடப்பாடியைச் சுற்றி பல கோவில் நிலங்கள் முஸ்லீம் ஆக்ரமிப்பில் உள்ளது. எடப்பாடி அரசு மருத்துவமனையின் சொத்தும் இஸ்லாமியர்களால் ஆக்ரமிக்கப் பட்டுள்ளது. இதை மீட்பதை தவிர்க்க சுகாதாரத்துறை உள்ளாட்சி நிர்வாகத்தையும், உள்ளாட்சி நிர்வாகம் வேறு ஒரு துறையும் கையைக் காட்டுகின்றன. சொத்தை மீட்க எந்த துறையும் தயாராக இல்லை.

இன்று எடப்பாடி லேண்ட் ஜிகாத்தில் சிக்குண்டு தவிக்கிறது. எடப்பாடி நகர்மன்றத் தலைவராக இருப்பவர் ஒரு இஸ்லாமியர். இவர் திமுகவைச் சேர்ந்தவர். இவர் கல் குவாரி இருந்த இடத்தை ஈத்கா தொழுகைக்காக முஸ்லீம்களுக்கு கொடுத்துள்ளார். அரசு நிலத்தை ஒரு மத வழிபாட்டுக்கு கொடுப்பது நியாயமா? இவரின் இந்த நடவடிக்கையை எந்த அரசியல் கட்சியும் எதிர்க்கவில்லை. இந்நிலை தொடர்ந்தால் வரும் காலங்களில் எடப்பாடியில் அரசு நிலங்களும், கோவில் சொத்துக்களும் பாதுகாப்பாக இருக்குமா என்ற கேள்வி எழுகிறது. ஹிந்துக்கள் பெரும்பான்மையாக உள்ள அதுவும் முன்னாள் முதல்வர் தொகுதியில் நகர்மன்ற தலைவராக இருப்பவர் இவ்வளவு ஆதிக்கம் செலுத்துகிறார் என்றால் எந்தளவிற்கு லேண்ட் ஜிகாத் முனைப்புடன் திட்டமிட்டு தமிழகத்தில் நடக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு ஊரிலும் ஹிந்துக்கள் விழிப்புடன் இல்லாமல் இருந்தால் அரசு சொத்துக்களும், கோவில் சொத்துக்களும் முஸ்லீம்கள் கைக்குச் சென்றுவிடும். இது தவிர, வக்ஃப் சொத்து என்ற பெயரில் நிலங்கள் கபளீகரம் செய்யப்படுகின்றன. இன்று எடப்பாடியில் தெரிய வந்துள்ள நில மோசடி நம்மை சூழ்ந்திருக்கும் அபாயத்தின் சிறு துளியே!

# அட்லாண்டாவில் சா(தீ) பரவட்டும் என பேசினாரா பட்டிமன்ற ராஜா?

ராயன்

பட்டிமன்றம் மூலம் மிகப் பிரபலமான பேரா.சாலமன் பாப்பையா திருப்பரங்குன்றம் குறித்த கிண்டல் பேச்சு பெரியளவில் சர்ச்சையாகி, அது அடங்குவதற்குள் அடுத்த சர்ச்சையும் அந்த பட்டிமன்ற பண்ணைக்கே வந்து சேர்ந்திருப்பதால் நொந்து போயிருக்கிறார்கள் என்பது என்னவோ உண்மை.தமிழ் சங்கத்தின் சார்பாக அமெரிக்காவின் அட்லாண்டா நகரில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு பட்டிமன்ற நகைச்சுவை பேச்சாளர் ராஜா சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டிருக்கிறார். நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள் சில இடங்களில் உணவு ஏற்பாடு செய்திருக்கின்றனர். அப்படி உணவு பரிமாறிய போது பரிமாறிய பெண்ணிடம் நீங்க எந்த ஊரு? இது செட்டிநாடு உணவு என்பதால் எந்த ஆளுங்க என சாதிய பெயரை தெரிந்து கொள்ள நினைத்தார் என உணவு வழங்கிய பெண்ணின் சகோதரர் சமூகவலைதளத்தில் பதிவிட, இது பெரியளவில் சர்ச்சையானது.முற்போக்கு தமிழ்நாட்டில், மேடைதோறும் சமூகநீதி பேசிடும் ஒரு பேச்சாளர் சாதியை தெரிந்து கொள்ள அப்படி என்ன அவசியம் என்றும், தமிழ் சமூகத்தில் புரையோடிப்போன சாதிய சிந்தனை இன்னும் படிமமாக மறையாமல் தேங்கி நிற்கிறது என்ற விமர்சனக் கணையை அவர்மீது பொழிய ஆரம்பித்து விட்டனர். மற்றொரு புறம் ராஜாவோடு பல முறை பயணப்பட்டிருக்கிறோம், நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டும் இருக்கிறோம், அவர் எக்காலத்திலும் சாதிய எண்ணத்தோடு பேசியதில்லை என அவருக்கு ஆதரவாக கச்சைக்கட்டி எதிர் தாக்குதல் நடத்தி வந்தனர்.

பிரச்சினை விஸ்வரூபம் எடுக்கவே, வேறுவழியின்றி பட்டிமன்ற ராஜாவே 3 நிமிடங்களுக்கு வீடியோவாக பதிலளித்துள்ளார். அதில் பரிமாறப்பட்ட உணவு செட்டிநாட்டு வகையாக, சுவையாக இருந்ததால் செட்டிநாடா? என்று கேட்டதாக நியாபகம், அதை செட்டியார் என புரிந்து கொண்டு இப்படி எழுதுகிறார்களா என புரியவில்லை.மேலும் "தமிழன் என்ற அடையாளத்தை மட்டுமே பெருமையாகக் கருதுபவன் நான். ஒருவரின் சமூகத்தைப் பற்றி யோசிக்கும் அளவுக்குச் சின்ன புத்தி எனக்குக் கிடையாது" என்று அவர் உருக்கமாகக் கூறியுள்ளார். "ராஜாவின் சாதிய விசாரிப்புகளை மேற்கோள்காட்டி திராவிட கழகத்தின் அருள்மொழி தனது பதிவில் பட்டிமன்றம் ராஜா அவர்களின் இந்த செயல் கடுமையான கண்டனத்திற்குரியது". இந்த ஜாதி விசாரணைகள் போன்ற இழிவான ஒரு நடத்தை வேறு இருக்க முடியாது. இதனை வெளிநாடுகளில் குறிப்பாக அமெரிக்காவிலும் ஆஸ்திரேலியாவிலும் சங்கிகளின் அமைப்புகள் மூலம் பள்ளிகளிலேயே கடைப்பிடிக்க முயல்கிறார்கள் என சைக்கிள் கேப்பில் ராஜா பேச்சையும் RSS யும் தொடர்புபடுத்தி பேசும் அயோக்கியத்தனம் வேறு யாருக்கு வரும்.

மேலும் அருள்மொழி, ஆஸ்திரேலிய செனட்டர் டேவிட் ஷூபிரிட்ஜ் அவர்களை கான்பராவில் நாடாளுமன்றத்தில் உள்ள அவரது அறையில் ஆ.இராசா, கவிஞர் சல்மா மற்றும் ஓவியாவுடன் சந்தித்து,வெளிநாட்டிலிருந்து ஆஸ்திரேலியாவிற்குள் நுழையும் போது விமான நிலையத்திலேயே ஒரு Immigration படிவத்தைநிரப்பிக் கொடுக்க வேண்டும். அந்தப் படிவத்தில் உங்களுக்கு தொற்று வியாதி இருக்கிறதா? நீங்கள் சிறைக்குச் சென்றீர்களா? கடத்தல் பொருள் கொண்டு வருகிறீர்களா ? என்று பத்து பனிரெண்டு கேள்விகள் இருக்கும். அதற்கு நாம் அளிக்கும் பதில்களில் எதேனும் பிரச்சனை இருந்தால் அந்த நாட்டிற்குள் அனுமதிக்க மாட்டார்கள். அனுமதித்தபிறகு அந்த நிபந்தனைகளுக்கு மாறாக நடந்து கொண்டால் நாட்டை விட்டு வெளியேற்றவும் செய்வார்கள். அந்தக் கேள்விகளோடு நீங்கள் ஜாதிவேறுபாடு மற்றும் தீண்டாமையைக் கடைப்பிடிக்கிறவரா? என்ற கேள்வியை சேர்க்க வேண்டும். ஆம் என்றால் அவர்களை அந்த நாட்டிற்குள் அனுமதிக்கக் கூடாது. "இல்லை"என்று பதில் சொல்லி விட்டு உள்ளே வந்தபிறகு ஜாதி வேறுபாட்டைக் கடைப்பிடித்தால் நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டும் என்ற கோரிக்கையை வைத்தோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேபோல ஹிந்துஃபோபியா, ஹிந்து எதிர்ப்பு,ஹிந்து கடவுளர்கள் அவமதிப்பு மட்டும் செய்பவரா? என்ற கேள்வியையும் முன்வைக்கலாமே. அதை பரிந்துரைக்கும் தைரியம் திக மற்றும் திராவிட கும்பலுக்கு உண்டா? என்ற கேள்வியைக் கேட்கும் வேளையில் இத்தனை நாள் சன் டிவி பட்டிமன்றம் மூலம் திராவிட பிரச்சாரமும், Demonetization, GST, SIR குறித்தெல்லாம் சம்மந்தமே இல்லாமல் பேசும் போது கைத்தட்டி ரசித்த கோஷ்டிகள், இப்போது வாய்ப்பு கிடைத்த போது உங்களுக்கு எதிராக திடீரென கம்பு சுத்துவது ஏன்? இதற்குப் பின்னால் உள்ள அரசியல் என்ன என்பது, இப்போது ராஜாவுக்கு நற்சான்றிதழ் வழங்கும் சாலமன் பாப்பையா உள்ளிட்டோருக்கு புரியுமா? பார்ப்போம்.

**கடந்த ஆட்சியில போடபட்ட ஒப்பந்தங்களைக் கூட எந்தவித காழ்ப்புணர்ச்சியும் இல்லாமல் செயல்படுத்தி வருகிறோம்னு முதல்வர் சும்மா கெத்தா பேசியிருக்காரே ? அத நீ கேட்டியா தம்பி !**

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

*ஆமாங்க அண்ணா ! எவ்ளோ பெரிய மனசு. அதிமுக ஆட்சியில ஏற்கனவே கமிஷன் வாங்கிருப்பாங்கனு தெரிஞ்சும்... 7.5 % - 10% வாங்கிட்டு அந்த ஒப்பந்தங்களை எல்லாம் அனுமதிச்சிருக்காரு...*

**அரசியலில் இருந்து என்னை ஒழித்துக்கட்ட எதை எதையோ பேசுகின்றனர்னு மருத்துவர் ராமதாஸ் பேசினத கேட்டியா ?**

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

அட போப்பா ! அவர் கண்ணாடி முன்னாடி நின்னு பேசுனத யாரோ ரிப்போர்ட்டர் அப்பிடியே போட்டாரு.




**இம்ரான் கானுக்கு பார்வை இழப்பு மருத்துவக் குழு பரிசோதிக்க பாக். உச்ச நீதிமன்றம் உத்தரவு போட்டிருக்காமே ?**

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

கொஞ்ச நாளைக்கு முன்னாடி பாகிஸ்தான் செய்தித்தாள்ல அவருக்கு ஆ*** மை இழப்பு னு எல்லாம் தகவல் வந்துச்சு... அதுக்கு சேர்த்து குழு போட்ருப்பாங்களோ ( கண்ணா பின்னான்னு யோசிக்கிறதுங்குறது இது தானோ?)

**திமுக தனிப்பெரும் கட்சியாக வெற்றி பெறும்; தமிழ்நாட்டில் கூட்டணி ஆட்சிக்கு வாய்ப்பு இல்லை: இல்லவே இல்லை நம்புங்கப்பா என கம்யூனிஸ்ட் தலைவர் பெ. சண்முகம் சொல்லிருக்காரே ?**

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

விசிக அதிகமா சீட் கேட்குது, காங்கிரஸ் மண்டிபோட்டு நிக்கிது, இதுதான் சந்தர்ப்பம்னு உண்டியலை நச்சுனு தலீவர் கண்ணுல படுறமாதிரி அறிவாலய வாசலில் வச்சாரே அதான் தோழர் திறமை !

**நீங்கள் எங்கள் தாய் பாரத மாதாவை விற்று விட்டீர்கள் னு ராகுல் பாராளுமன்றத்தில பட்டய கிளப்பிருக்காரே ?**

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

மதச்சார்ப்பற்ற கட்சியின் தலைவர், இந்தியாவை நாளை வழிநடத்தக்கூடியவர் னு buildup கொடுக்கக் கூடிய ராகுல் பயன்படுத்திய வார்த்தையை ( பாரத மாதா) அமைதி மார்க்கமும், அன்பு மார்க்கமும் ஏற்குமோ ? கொஞ்ச கேட்டு சொல்லுப்பு....

**தமிழ்நாடு தான் என்னோட வீடு... என்னோட வீட்டில் மொத்தம் 8 கோடி பேர் - விஜய்**

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

ஒரு ரசிகனாக கேட்கிறேன், உங்க வீட்டுல எங்க சங்கீதா அண்ணி இருக்காங்களா அண்ணா ?

**- நா.பாஸ்கரன்**

**காந்தியோ.. ராமரோ.. பெயரா முக்கியம். திட்டம்தான் முக்கியம் னு அதிமுக முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம் முக்கிகிட்டே சொல்லிருக்காரே ?**

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

பொறகு என்ன Dash க்கு அவிங்க ஆட்சியில, அம்மா உணவகம், அம்மா சிமெண்ட், அம்மா குடி தண்ணீர், அம்மா காய்கறி கடை, அம்மா தங்கும் விடுதி, அம்மா மருந்தகம், அம்மா உப்பு, அம்மா திரையரங்கம்... அம்மம்மா..மா...மா.... னு வெச்சாங்களாம்

**தமிழ்நாடு என்றால் மகளிர் நாடு என்பதை தமிழ்நாடு அரசு மீண்டும் உறுதி செய்துள்ளது - உதயநிதி ஸ்டாலின்**

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

சட்டமன்றத்தில் அம்மையார் ஜெயலலிதா அவமானப் படுத்தப்பட்டபோது, அண்ணா யூனிவர்சிட்டி மாணவி பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளானபோது, அக்கா கனிமொழி கலந்துகொண்ட பொதுக்கூட்டத்தில் பெண் காவலர் சீண்டப்பட்டபோது, திமுகதான் ஆட்சியில் இருந்ததுன்னு யாராவது அவருக்கு சொல்லுங்கப்பா.....

# ராகுல் காந்தி - தேசத்தின் கண்ணில் விழுந்த தூசி

அருண்ப்ரபு

சிலர் பேசுவது சிரிப்பாக இருக்கும். சிரிப்பாய்ச்சிரிக்கப் போகிறது அவர்கள் வாழ்வு என்று நாமும் பேசுவோம். ஆனாலும் அவர்களது பிரச்சனை என்பது அவர்கள் முட்டாள்தனமாக நடந்து கொள்கிறார்கள் என்று அவர்களால் புரிந்து கொள்ள முடியாது. அவர்களைச் சுற்றி இருப்பவர்கள் இவர்களைச் சுமந்து கொண்டு சப்பைக்கட்டியே வாழ்க்கையத் தொலைப்பார்கள். அப்படிப்பட்ட பலரில் தேசத்தின் முக்கியப் பதவி ஒன்றில் காற்றில் உயரப்பறந்த காலியான பொட்டலக் காகிதமாய் வந்து சேர்ந்தவர் ராகுல்காந்தி. ஆனால் இந்தக் காலிப் பொட்டலக் காகிதங்களைக் கூர்ந்து கவனித்தால் அவை காற்று போன போக்கில் போவது கண்டு இதை எல்லாம் கவனிப்பது ஒரு வேலையா என்று நம்மை நாமே கடிந்துகொள்ளும் நிலை வரும். கவனிக்காமல் ராகுலை விடவும் முடியாது, ஏனென்றால் தேசத்தின் எதிர்க்கட்சித் தலைவர். விசித்திரமான நிலை.

ராகுல் சமீப காலங்களில் வடிவேலு காமெடிகளில் "நீதான் ஆம்பளயாச்சே அடிச்சுத்தான் பாரு!'' என்று வம்பிழுப்பது போல நடந்து கொள்கிறார். இவ்வாண்டு பாராளுமன்றக் கூட்டத்தொடரில் ஜனாதிபதி உரைக்கு நன்றி தெரிவிக்கும் விவாதத்தில் உரையில் பேசப்பட்ட விஷயங்களை விட்டுவிட்டு முன்னாள் ராணுவத்தளபதி ஜெனரல் நரவனே எழுதி இன்னமும் வெளியிடப்படாத புத்தகத்தில் இருக்கும் விஷயம் என்று ஆரம்பித்தார். வெளிவராத புத்தகங்களை மேற்கோள் காட்டுவது தவறு என்பது உங்கள் முப்பாட்டன் நேரு காலத்தில் இருந்து கடைப்பிடிக்கப்படும் மரபு. வீட்டிலோ கட்சியிலோ யாரும் சொல்லித்தரவில்லையா என்று ஆளும் தரப்பு எகிறியதில் சற்றே அதிர்ந்தார் ராகுலர். வெளியே வந்தவர் மோடி அரசு சீனாக்காரனை அடிக்கக்கூடாது என்று உத்தரவு போட்டதாக்கும் என்று சொன்னார். பின்னர் ஜெனரல் நரவனே ஒரு பேட்டியில் புத்தகம் வெளிவரவில்லை. அதற்கான ராணுவ அமைச்சக அனுமதி வராத நிலையில் அனுமதி பெறுவதும் வெளியிடுவதும் பெங்குயின் நிறுவனத்தின் பாடு என்றார். அரசு நிலைப்பாடு பற்றிக் கேட்ட போது "சீனாக்காரன் எல்லை தாண்டி வந்தால் கள நிலவரத்துக்கு ஏற்ப நீங்களே முடிவெடுத்து நடவடிக்கை எடுங்கள் என்று உத்தரவு.

சுடவேண்டும் என்றாலும் சுட்டுத்தள்ள அனுமதி இருந்தது'' என்றார் நரவனே அவர்கள். ஆனால் ராகுல் அந்தப் புத்தகத்தின் அட்டை போட்ட ஒரு புத்தகம் காட்டி இதோ புத்தகம் என்று கூவினார். பெங்குவின் நிறுவனமோ நாங்கள் சாராம்சம் கூட வெளியிடவில்லை. இந்தப் புத்தகத்தை நாங்கள் வெளியிடாத நிலையில் ராகுல் கையில் உள்ள புத்தகம் எப்படி வந்தது என்று தெரியவில்லை என்றது. தில்லி போலீஸ் வழக்குப் பதிந்தது. உடனே ராகுல் "தளபதி நரவனே அவர்களின் கூற்றை மதிக்கிறேன்" என்று பல்டி அடித்தார். அவர் காட்டிய புத்தகம் வெற்றுக் காகிதங்களை பைண்டு செய்து வைத்த போலி என்று சில விடியோக்கள் காணத் தருகின்றன. விசாரித்தால் உண்மை வரும்.

சீனாக்காரன் எல்லை தாண்டி வந்தால் கள நிலவரத்துக்கு ஏற்ப நீங்களே முடிவெடுத்து நடவடிக்கை எடுங்கள் என்று உத்தரவு. சுடவேண்டும் என்றாலும் சுட்டுத்தள்ள அனுமதி இருந்தது என்றார் நரவனே அவர்கள்.

பிறகு அமெரிக்காவுடன் வணிக ஒப்பந்தம் கையெழுத்திடத் தயார் என்ற தகவல் வெளியானது. உடனே "நம் நாட்டு பழ விவசாயிகள், சோயா







விவசாயிகள், காய்கறி, இன்னபிற விவசாயிகளை மோடி அரசு வஞ்சித்துவிட்டது" என்றார். ஆனால் அமெரிக்க ஒப்பந்தத்தில் தெளிவாக நம் நாட்டுக்கு அமெரிக்க விவசாயப் பொருட்கள் இறக்குமதி கிடையாது என்று எழுதி வாங்கியிருப்பதை அவர் அறியவில்லை பாவம். அல்லது அவரை ஆட்டுவிக்கும் ஆட்களுக்குத் தெரியவில்லையா என்பது நமக்குத் தெரியவில்லை. இந்நிலையில் நம் வணிகத்துறைச் செயலர் அமெரிக்க அரசுக்குக் கொடுத்த அழுத்தத்தில் வெள்ளை மாளிகை விஷமத்தனமாக "விவசாயப் பொருட்கள் 500 பில்லியன் டாலர் அளவுக்கு வியாபாரம் செய்ய எதிர்காலத்தில் வாய்ப்புள்ளது" என்ற புளுகு உள்ளிட்டவற்றைச் சரிசெய்து அசல் ஒப்பந்தப் புள்ளிகளுடன் அறிக்கை அளித்தது. இதிலும் 1000 வாட்ஸ் குண்டு பல்பு வாங்கினார் ராகுல் காந்தி. ஆனாலும் மோடிஜி விவசாயிகளுக்கு துரோகம் செய்துவிட்டார் என்று கூவுகிறார். படியளக்கும் ஃபாரின் முதலாளி கூப்பிட்டு நிறுத்தச் சொன்னால் நிறுத்துவார் போலிருக்கிறது.

இது போதாதென்று காங்கிரஸ் பெண் எம்பிக்கள் பிரதமர் இருக்கைக்கு அருகே சென்று கலகம் செய்ய முற்பட்டதாகவும் அதைத் தாம் தெரிந்து கொண்டதால் மக்களவையில் ஜனாதிபதி உரை மீது பிரதமர் நன்றி தெரிவித்துப் பேசாமலேயே முடித்து வைக்கப்பட்டது. இதை எதிர்த்துக் காங்கிரஸ் கட்சி "நாங்கள் அப்படியா" என்று கூச்சலிட்டது. ஆனால் காங்கிரஸின் கரூர் எம்பி சோதிமணி பிரதமரின் இருக்கைக்கு அருகே நின்றுகொண்டு மற்ற எம்பிக்களை வாருங்கள் வாருங்கள் என்று கைகாட்டி அழைக்கும் காணொளி வெளியானது. அது பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. தள்ளுமுள்ளு ஏற்படுத்தி இவர்களே ஒரு கலகம் செய்து ஆடைகளை அலங்கோலப்படுத்திக் கொண்டு பிரதமர் மீதும் ஆளும் தரப்பின் மீதும் பழிபோடத் திட்டம் என்று தகவல் வந்ததாகச் சொல்கிறார் சபாநாயகர் பிர்லா. மேலும் சபாநாயகர் அறையில் இந்த எதிர்க்கட்சி எம்பிக்கள் வலுக்கட்டாயமாக நுழைந்து கெட்ட வார்த்தைகளில் திட்டி நடந்துகொண்டதையும் விடியோவாக வெளியிட்டுள்ளார் அமைச்சர் ரிஜிஜு. குறிப்பாக பிரியங்கா காந்தியும் கேசி வேணுகோபாலும் பேசிய பேச்சுகள் அவை மரியாதைக்கு ஒவ்வாதவை என்றும் அவர் சொன்னார்.

**பாஜக எம்பி நிஷிகாந்த் துபே வெளிநாட்டு சக்திகளுடன் தொடர்பில் இருந்துகொண்டு நாட்டு நலனுக்கு எதிராகச் செயல்படுகிறார் ராகுல்காந்தி. அவரைப் பதவி நீக்கம் செய்து தேர்தலில் நிற்கத் தடை விதிக்க வேண்டும் என்று பாராளுமன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்துள்ளார்.**

இன்றைய நிலவரப்படி சபாநாயகர் மீது காங்கிரஸ் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுத்துள்ளது. பதிலடியாக பாஜக எம்பி நிஷிகாந்த் துபே வெளிநாட்டு சக்திகளுடன் தொடர்பில் இருந்துகொண்டு நாட்டு நலனுக்கு எதிராகச் செயல்படுகிறார் ராகுல்காந்தி. அவரைப் பதவி நீக்கம் செய்து தேர்தலில் நிற்கத் தடை விதிக்க வேண்டும் என்று பாராளுமன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்துள்ளார். இதை விவாதித்தால் ராகுலின் வண்டவாளங்கள் பாராளுமன்றத் தண்டவாளத்தில் ஏறும். இது தவிர நேஷனல் ஹெரால்டு வழக்கை விரைந்து நடத்தி ராகுலுக்குத் தண்டனை பெற்றுத்தரலாம். ராகுலின் பிரித்தானிய குடியுரிமை விவகாரத்தை விசாரித்து நடவடிக்கை எடுக்கலாம். அவரது வெளிநாட்டுத் தொடர்புகள் பற்றி விசாரித்துப் பண விவகாரங்களைப் பேசி நடவடிக்கை எடுக்கலாம். நமக்கே இவ்வளவு தெரியும்போது அரசில் இருப்பவர்களுக்குத் தெரியாதா? ஏன் நடவடிக்கை இல்லை?

பாகிஸ்தானை நேரு தொடங்கி மன்மோகன் அரசு வரை நடத்தியது போல கையறு நிலையிலா மோடி அரசு இருக்கிறது? இல்லை. ஆனாலும் ராகுல் மீது ஒரு நடவடிக்கை கூட ஏன் எடுக்கப்படவில்லை? ராகுலை உள்ளே தள்ளிவிட்டால் தங்கள் கட்சிக்காகப் பிரச்சாரம் செய்து வெற்றிபெறச் செய்ய மோடி மட்டுமே நட்சத்திரப் பிரச்சாரகராக இருப்பார். அவரது பணிப்பளு கூடும் என்பதனால் ராகுலை விட்டு வைத்திருக்கிறார்களா? பாஜக மேலிடத்துக்கே வெளிச்சம். வந்தே மாதரம்!

# ஆன்லைன் கேமிங்ல் பொதிந்திருக்கும் ஆபத்துகள்; பெற்றோர்களுக்கு ஓர் எச்சரிக்கை

- ப்ரியா வெங்கட்

ஆன்லைன் கேம் என்பது பொழுதுபோக்கிற்கான ஒரு அம்சம் என்பதைத் தாண்டி பல ஆபத்துக்களை உள்ளடக்கியதாக மாறி வருகிறது. அதிலும் குறிப்பாக இளைய சமுதாயம் இதில் சிக்கி சின்னாபின்னமாகி வருவது அன்றாட நிகழ்வாக மாறி விட்டது. கடந்த மாதம் பிப்ரவரியில் உத்தரப்பிரதேச மாநிலத்தில் இருக்கும் காஜியாபாத்தில் 3 சகோதரிகள் ஆன்லைன் கேமிற்கு அடிமையாகி 9-ஆவது மாடியிலிருந்து விழுந்து தற்கொலை செய்து கொண்டார்கள் என்ற செய்தி வெளி வந்தது. ஏற்கனவே பல ஆன்லைன் கேம்கள் இது போன்று தற்கொலைக்குத் தூண்டுவதாக உள்ளது என்று தடை செய்யப்பட்டிருந்தாலும் கூட இன்னும் இந்த ஆபத்து இருக்கத்தான் செய்கிறது.

இந்த சம்பவத்தில் இந்த 3 சகோதரிகளும், கொரோனா தொற்று சமயத்தில் இது போன்ற கேம்களுக்கு அடிமையாகி குறிப்பாக ஒரு கொரியன் ஆன்லைன் கேமிற்கு அடிமையாகினர். ஒரு கட்டத்தில் இந்த கேமைத் தொடர்ந்து பல மணி நேரம் விளையாடத் தொடங்கியுள்ளனர். அதாவது இந்த கேம்கள் ஒரு வேலையை (task) செய்யக் கட்டளையிடும். அதை முடித்தால் அடுத்த டாஸ்க். இப்படி 50 டாஸ்க் கொண்ட கேம் இது. அப்படி இந்த கேம்மின் ஒரு டாஸ்க் தற்கொலை செய்து கொள்வது அதனடிப்படையில் அவர்கள் தற்கொலை செய்துகொண்டுள்ளனர் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.

> **பயங்கரவாத மூளைச் சலவை, மதமாற்றம், போதை பழக்கத்திற்கு அடிமையாக்குதல் போன்றவை இந்த ஆன்லைன் கேம் வாயிலாக நடைபெறுகிறது என்பது அந்த ஆபத்து.**

இது போன்ற உயிரை பலி வாங்கும் சம்பவங்கள் தவிர உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்டு பல மாணவர்கள் தங்கள் கல்வியை மறந்து மனநோயாளியாக மாறி அவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகி வருவதையும் பார்த்து வருகிறோம், இதிலிருந்து தங்கள் குழந்தைகளை காப்பது என்பது பெற்றோர்களுக்கு பெரும் சவாலாக உள்ளது.

இந்த கேம்கள் வாயிலாக இளைஞர்கள் மனநோயாளியாவது, தற்கொலைக்கு ஆளாவது என்ற ஆபத்துகளில் சிக்கிக்கொள்வது ஒருபுறம் என்றால் மற்றுமொரு மிகப்பெரிய ஆபத்தும் புதியதாக முளைத்துள்ளது. அது என்னவென்றால் பயங்கரவாத மூளைச் சலவை, மதமாற்றம், போதை பழக்கத்திற்கு அடிமையாக்குதல் போன்றவை இந்த ஆன்லைன் கேம் வாயிலாக நடைபெறுகிறது என்பதே அந்த ஆபத்து.

**இதற்கு உதாரணமாக சில செய்திகளைப் பார்க்கலாம்.**

பிப்ரவரி 6 2026 அன்று குஜராத்தில் உள்ள அகமதாபாத் வெஜல்பூரில் 16வயது ஹிந்து சிறுமியிடம் ஆன்லைன் கேம் வாயிலாக நட்புக் கொண்ட ஆசிக் என்கிற முகமத் அஞ்கர் அந்தப் பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்ததோடு அவளை கடத்திச் சென்றபோது காவல்துறையினர் அவனைக் கைது செய்து சிறுமியை மீட்டுள்ளனர்.

பாகிஸ்தானைச் சேர்ந்த பயங்கரவாதக் குழுக்கள், ஆன்லைன் விளையாட்டுகள் மற்றும் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி ராஜஸ்தான் மாநிலம் பில்வாராவைச் சேர்ந்த 23 வயது இளைஞரைத் தங்கள் வலையில் வீழ்த்தி, ஜிஹாதி பிரச்சாரங்கள் மூலம் அவரை பயங்கரவாத பாதைக்கு மாற்றியுள்ளனர். தனது அடையாளத்தை 'முஜாஹித்' என்று மாற்றிக்கொண்ட அவர், இணையத்தில் பயங்கரவாத கருத்துகளைப் பரப்பியதுடன், ஜெய்ஷ்-இ-முகமது போன்ற பயங்கரவாத அமைப்புகளுடனும் தொடர்பில் இருந்தாகக் கூறி காவல்துறையினர் கைது செய்துள்ளதாக கடந்த 13 ஜூலை 2025ல் செய்தி வெளியானது.

இதே போன்று, ஜூன் மாதம் 2023ம் வருடம் ஆன்லைன் கேம் ஆப்பான Fortnite வாயிலாக இளைஞர்கள் மற்றும் சிறுவர்களை குறிவைத்து மதமாற்றியுள்ளார்கள் என்ற செய்தி வெளிவந்தது. இது தொடர்பாக, காவல்துறையினர் வெளியிட்ட செய்தியில், காஜியாபாத், ஃப்ரிதாபாத் மற்றும் சண்டிகர் மாநிலங்களைச் சேர்ந்த 4 சிறுவர்கள் இந்த கேம் ஆப் மூலமாக மதமாற்றப்பட்டுள்ளனர். இவர்களை மதமாற்ற FortNite என்ற கேம் ஆப்பை பயன்படுத்தியுள்ளனர்.

ஃபோர்ட்நைட் (Fortnite) விளையாட்டு 2017-இல் அமெரிக்காவைச் சார்ந்த ஒரு கேமிங் நிறுவனத்தால் தொடங்கப்பட்டது. இந்த விளையாட்டில், விளையாடுபவர் Virtual Islandல் இருப்பார். எதிரிகளை அழித்து விளையாட்டை வெல்வதற்காக அவருக்கு ஆயுதங்கள் வழங்கப்படும். முதலில் விளையாட நினைப்பவர் இதில் பதிவு செய்ய வேண்டும். விளையாட்டுத் தொடங்கியதும், ஒரு குழு உருவாக்கப்பட்டு அனைவரும் ஒன்றாக விளையாடுவார்கள். இருப்பினும், தன்னுடன் விளையாடுபவர்கள் உண்மையான




அடையாளத்துடன் இருக்கிறார்களா அல்லது போலி அடையாளமா என்பதை விளையாடுபவரால் அறிய முடியாது.

விளையாட்டின் போதே வீரர்கள் ஒருவருக்கொருவர் உரையாடிக்கொள்வார்கள். அங்கேயே மூளைச்சலவை (Brainwashing) செய்யும் செயல்முறை தொடங்குகிறது. "நீ இந்த விளையாட்டில் வெற்றி பெற வேண்டுமென்றால் சில வசனங்களை ஓத வேண்டும் மற்றும் நமாஸ் செய்ய வேண்டும். இறைவன் மிகவும் சக்திவாய்ந்தவர்," என்று விளையாடுபவர்களிடம் கூறப்படுகிறது.

காவல்துறையினர் இது குறித்து கூறுகையில், குழுவாக விளையாடும் வீரர்களே பொதுவாக குறிவைக்கப்படுகிறார்கள். யாராவது விளையாட்டில் தோற்றால், அவர்கள் குர்ஆனில் உள்ள சில வசனங்களைப் படிக்க வைக்கப்படுகிறார்கள். அதன் பிறகு அவர்கள் விளையாட்டில் வெற்றி பெற வைக்கப்படுகிறார்கள். இது குர்ஆன் மீதான அவர்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்துவதற்காகச் செய்யப்படுகிறது. முஸ்லிம் தனிநபர்கள், இந்துப் பெயர்களைப் பயன்படுத்தி இந்து இளைஞர்களுடன் உரையாடி, அவர்களைப் படிப்படியாக இஸ்லாமிய சடங்குகளைப் பின்பற்றத் தூண்டுகிறார்கள். நட்பு ஏற்பட்டவுடன், அவர்களை மூளைச்சலவை செய்வது எளிதாகிறது என்கின்றனர்.

குஜராத்தின் மும்ப்ராவைச் சேர்ந்த 400 பேர் இது போன்ற கேமிங் செயலி மூலம் மதம் மாற்றப்பட்டதாக காசியாபாத் காவல்துறைக்குத் தகவல் கிடைத்துள்ளது. இதற்கான புகைப்படங்கள் மற்றும் வீடியோ ஆதாரங்களும் போலீசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

விசாரணையில், ஒரு சிறுவன் பாகிஸ்தானைச் சேர்ந்த 'யூத் கிளப்' (Youth Club) என்ற யூடியூப் சேனலுடன் தொடர்பில் இருந்தது தெரியவந்தது. இந்தச் சேனலுக்கு 1.3 மில்லியன் பின்தொடர்பவர்கள் உள்ளனர். மேலும், இஸ்லாமிய மதமாற்றத்தில் ஏற்கனவே ஈடுபட்டிருந்த சில கிறித்தவ சிறுவர்களும் இத்தகைய கேமிங் செயலிகள் மற்றும் யூடியூப் சேனல்களுடன் தொடர்பில் இருப்பது கண்டறியப்பட்டது. இப்படிப்பட்ட ஒரு மிகப்பெரிய ஆபத்து நம் நாட்டில் ஏற்பட்டுள்ளது.

இதுப் போன்று மூளைச்சலவை செய்யப்பட்டவர்கள் ஐ.எஸ்.ஐ.எஸ்க்கு ஆதரவாக கருத்துக்களை பரப்பும் நபர்களாக மாறி கைது செய்யப்பட்ட சம்பவம் சிங்கப்பூரில் நடந்துள்ளது. இந்தப் பிரச்சினை நம் நாட்டில் மட்டுமல்ல சர்வதேச அளவில் மிகப்பெரிய பிரச்சினையாக உருவெடுத்து வருகிறது. நம் நாட்டில் உலவும் கேம் ஆப்களின் தன்மையைக் கண்டறிந்து அவற்றை செயல்பட அனுமதிக்கலாமா என்பதை உறுதி செய்ய வேண்டும். சந்தேகத்திற்குரிய செயலிகளை தடை செய்ய வேண்டும். பாதுகாப்பானதா என்ற கண்ணோட்டத்தில் ஆய்வுக்கு உட்படுத்தவேண்டும், ஏனென்றால் இதில் தேச பாதுகாப்பும் அடங்கியுள்ளது.

அரசாங்கம் இதுபோன்ற ஆபத்தான கேம்களுக்கு தடைவிதித்தாலும் கூட, நம் குழந்தைகளை நாம் கண்காணித்து இதிலிருந்து காப்பாற்ற வேண்டிய பொறுப்பு நமக்கும் இருக்கிறது. குழந்தைகளின் மென்மையான மனது இத்தகைய சதிகளுக்கு எளிதில் இலக்காவதால், பெற்றோர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று மனநல நிபுணர்கள் வலியுறுத்துகின்றனர். இதில், வீட்டில் தனிமையாக உணர்வது அல்லது புறக்கணிக்கப்படுவதால் குழந்தைகள் Virtual World நோக்கித் திரும்புகிறார்கள் என்றும் மனநல நிபுணர்கள் கருதுகின்றனர். குறிப்பாக 8-9 வயதுடைய குழந்தைகளின் ஆர்வங்கள் எதில் உள்ளன என்பதைப் பெற்றோர்கள் கவனிக்க வேண்டும். ஆரம்பத்திலேயே தவறுகளைக் கண்டறிந்தால், முறையான தலையீடு மூலம் அவர்களை நல்வழிப்படுத்த முடியும் என்பதே அவர்களின் கருத்தாக உள்ளது.

ஆகையால் நம் குழந்தைகள் யாருடனும் பழகாமல் தனித்து செல்கிறார்களா? அதிக நேரம் மொபைலிலேயே இருக்கிறார்களா? மொபைலில் என்ன அவர்கள் பார்க்கிறார்கள்? என்ன மாதிரியான Appகளை உபயோகிக்கிறார்கள் என்பதையெல்லாம் கண்காணிக்க வேண்டிய பொறுப்பு நமக்கு நிச்சயம் இருக்கிறது. அதே போன்று இந்தமாதிரியான கேம்களில் இருக்கக் கூடிய ஆபத்துக்களை அவர்களிடம் எடுத்துக்கூறி விழிப்புணர்வையும் ஏற்படுத்த வேண்டும். நம் குழந்தைகள் விளையாடும் கேம்மிங் ஆப்பில் சந்தேகப்படும்படியான விஷயங்கள் இருப்பின் அதை காவல்துறைக்கு தெரியப்படுத்தத் தயங்க கூடாது.

விழிப்போடு இணைய சேவைகளை பயன்படுத்துவோம்! நம் குழந்தைகளையும் பாதுகாப்பாக பயன்படுத்த அறிவுறுத்துவோம்!

# பாராளுமன்றத்தில் நரவானே புத்தக குறிப்பு
# ராகுல் செய்த தவறு

பிபிந்தரா

முன்னாள் ராணுவத் தளபதி ஜெனரல் மனோஜ் முகுந்த் நரவனே (ஓய்வு) எழுதியதாகக் கூறப்படும், இன்னும் வெளியிடப்படாத "ஃபோர் ஸ்டார்ஸ் ஆஃப் டெஸ்டினி" (Four Stars of Destiny) புத்தககத்தில் இருந்த சில பகுதிகளை ராகுல் காந்தி மக்களவையில் குறிப்பிட்டது, நடைமுறை ரீதியாக பிழையானது மற்றும் நிறுவன ரீதியாக பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது.

இந்தியாவின் சிவில்-ராணுவ நெறிமுறைகள், நாடாளுமன்றப் பண்பாடு மற்றும் தேசிய பாதுகாப்பு உணர்திறன் ஆகியவற்றின் அடிப்படையில், இந்த தலையீடு இந்திய ஜனநாயகம் பல தசாப்தங்களாக கவனமாக மதித்து வந்த பல எல்லைக்கோடுகளைத் தாண்டியுள்ளது.

அடிப்படை மட்டத்தில், இந்தப் பிரச்சனை நம்பகத்தன்மையிலிருந்து தொடங்குகிறது. பொதுவெளியில் வெளியிடப்படாத, ஆசிரியர், பதிப்பாளர் அல்லது பாதுகாப்பு அமைச்சகத்தால் உறுதிப்படுத்தப்படாத ஒரு கையெழுத்துப் பிரதியை சரியான ஆதாரமாகக் கருத முடியாது. நாடாளுமன்ற விவாதம் என்பது செவிவழிச் செய்திகளையோ அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட கசிவுகளையோ சார்ந்தது அல்ல; அவை ஆவணப்படுத்தப்பட்ட உண்மைகளைச் சார்ந்திருக்க வேண்டும்.

வெளியிடப்படாத, நம்பகத்தன்மை உறுதி செய்யப்படாத ஒரு புத்தகத்தின் வரிகளைப் பயன்படுத்தியதன் மூலம், எதிர்க்கட்சித் தலைவர் நிரூபிக்க முடியாத தகவல்களையே நம்புகிறார் என்று தானே அர்த்தம் கொள்ள முடியும். இது நாடாளுமன்ற விவாதங்களின் கண்ணியத்தைக் குலைப்பதோடு, வருங்கால விவாதங்களுக்கு ஒரு மோசமான முன்மாதிரியாக அமைந்துவிடும்.

மிக முக்கியமாக, ஒரு முன்னாள் ராணுவத் தளபதியின் வெளிவராத புத்தக நினைவுக்குறிப்புகளைத் துணைக்கு அழைப்பது, எப்போதும் அரசியலுக்கு அப்பாற்பட்டதாக இருக்கும் ராணுவத்தை, உள்நோக்கத்துடன் அரசியலுக்குள் இழுப்பதாகும்.

இந்தியாவின் ராணுவத் தலைமை (பணியில் இருப்பவர் அல்லது ஓய்வு பெற்றவர்), மூலோபாய முடிவுகள் அரசியல் களத்திற்கு வரும்போது பாரம்பரியமாக அமைதியைக் கடைபிடிக்கிறது. இந்த சுயக்கட்டுப்பாடு இந்தியாவின் நிலையான சிவில்-ராணுவ உறவுகளுக்கு அடித்தளமாகும். ஒரு ஓய்வுபெற்ற ஜெனரலின் தனிப்பட்ட கருத்துக்களை அரசியல் ஆதாயத்திற்காகப் பயன்படுத்துவது, இந்த நீண்டகால மரபைச் சிதைக்கும் அபாயத்தைக் கொண்டுள்ளது மற்றும் எதிர்கால ராணுவத் தலைவர்கள் தங்கள் அனுபவங்களை வெளிப்படையாகப் பதிவு செய்யத் தயங்குவதற்குக் காரணமாகலாம்.

உறுதிப்படுத்தப்படாத தனிப்பட்ட கருத்துகளை, இராணுவம் மற்றும் தேசியப் பாதுகாப்பு போன்ற முக்கிய விவகாரங்களில் அதிகாரப்பூர்வ ஆதாரங்களாகக் காட்டுவது தவறானது. இது இந்தியாவின் கூட்டு முடிவெடுக்கும் முறையைத் தவறாகச் சித்தரிப்பதோடு, தேசியப் பாதுகாப்பு ரீதியாகவும் மிகுந்த கவலைக்குரியது. தேசிய பாதுகாப்பு கண்ணோட்டத்தில், இந்தச் சம்பவம் இன்னும் கவலையளிக்கிறது.

முன்னாள் படைத்தளபதிகளின் புத்தகங்கள், முக்கியமான இராணுவ ரகசியங்கள் கவனக்குறைவாகக் கசிந்துவிடக் கூடாது என்பதற்காக, வெளியீட்டிற்கு முன்பாகக் கடுமையான சட்ட மற்றும் பாதுகாப்புத் தணிக்கைகளுக்கு உட்படுத்தப்படுகின்றன. இத்தகைய சரிபார்ப்புகள் முடிவதற்கு முன்னரே, புத்தகத்தில் இருப்பதாகக் கூறப்படும் தகவல்களைப் பகிரங்கமாக விவாதிப்பது அந்தப் பாதுகாப்பு வளையத்தைச் சிதைப்பதாகும்.

வெறும் யூகங்களின் அடிப்படையில் பேசப்படும் தகவல்கள்கூடத் தவறான செய்திகள் பரவவும், எதிரி நாடுகளின் பொய்ப் பிரச்சாரங்களுக்கு வாய்ப்பாகவும் அமைந்துவிடும்; மேலும், கடந்த கால இராணுவ நெருக்கடிகள் குறித்த பொதுமக்களின் புரிதலையும் இது திசைதிருப்பும்.

அரசின் இராணுவத் திட்டங்கள் அல்லது வியூகங்களைக் கேள்வி எழுப்ப விரும்பினால், அதிகாரப்பூர்வ அறிக்கைகள், நாடாளுமன்றக் குழுக்களின் கண்டுபிடிப்புகள்,ரகசியத்தன்மை நீக்கப்பட்ட ஆவணங்கள், பதிவு செய்யப்பட்ட சாட்சியங்கள் ஆகியவற்றின் அடிப்படையிலேயே அந்த விவாதங்கள் அமைந்திருக்க வேண்டும். ஆனால் இவைகளுக்கு நேர்மாறாக நடந்திருப்பது பொறுப்பற்ற அரசியலை காண்பிக்கிறது.

சுருக்கமாகச் சொன்னால் ராகுல் காந்தி உறுதிப்படுத்தப்படாத ஒரு புத்தகத்தை ஆதாரமாகக் கொண்டது நாடாளுமன்ற மரபுகளைக் குறைத்துவிட்டது. இராணுவ விவகாரங்களில் ஜனநாயக ரீதியிலான விமர்சனங்கள் தேவைதான் என்றாலும், அவை அரசியலற்ற தன்மையுடனும், முறையான அரசு ஆவணங்களின் அடிப்படையிலுமே முன்வைக்கப்பட வேண்டும்

**செய்**
**சிந்த**

**செய்தி:**

**வந்தே மாதரம் கட்டாயம் - எதிர்க்கும் இஸ்லாமிய அமைப்புகள்**

**சிந்தனை**

அல்லாவைத் தவிர யாரையும் வணங்க மாட்டோம் என்ற மத அடிப்படைவாதம். அரபு நாடுகளில் தேசியக் கொடியை வணங்குபவர்களும், பாகிஸ்தான் தேசியக் கொடியை வணங்குபவர்களும் முஸ்லீம்கள் இல்லையா? சர்வதேச இஸ்லாம் விதைக்கும் தேச விரோத விதை!

**செய்தி:**

**இனி** ATS **இருக்கக்கூடாது** - Welfare Party **யின் கோரிக்கை**

**சிந்தனை**

பயங்கரவாதிகளை சிறையிலிருந்து விட வேண்டும்.பயங்கரவாத தடுப்புச் சட்டங்களை நீக்கவேண்டும் என்ற கோரிக்கை வைப்பவர்கள் பாதுகாப்புத் தடுப்பு படையே தேவை இல்லை என்று கோரிக்கை வைக்கும் அளவிற்கு சென்று விட்டார்கள். சிறுபான்மை ஓட்டிற்காக சட்டத்தை மீறி செயல்படும் அரசும் அரசியல் கட்சிகளும் இருப்பதால் எழும் கோரிக்கை இது!

**செய்தி:**

**கன்னிமராவில் கார்ல் மார்க்ஸ் சிலை**

**சிந்தனை**

கார்ல் மார்க்ஸுக்கும் தமிழகத்துக்கும் என்ன தொடர்பு? நூலகத்தில் சிலை வைப்பது இடதுசாரி சித்தாந்தம் மட்டுமே முற்போக்குத்தனமானது என்று காட்டத்தான். முரண்டு பிடிக்கும் கம்யூனிஸ்ட்டுகளை முட்டாசைக் காட்டி ஏமாற்றும் நாடகமே!

**செய்தி:**

**கடற்படைக்கு ஜெயலலிதா வ**
**பெற்றதால் சென்னை பாதுகா**

**சிந்தனை**

தேசியத்தில் நம்பிக்கையில்லாத
அரசு தேசப்பாதுகாப்பை சீ
விஷயம் இல்லை. ஆயுதக்கட
என்று பல சவால்களை சந்
அமைவதைத் தடுக்கும் செயல்
செயல்படும் திராவிட சதியின்

**செய்தி:**

**மயிலாடுதுறையில்**
**எதிர்ப்பு தெரிவித்த**

**சிந்தனை**

ஹிந்து இன அழிப்
அரசு. குற்றவா
சிறையில் தள்ளி
துடிக்கும் அரசு!
குடிமக்களாக நடத்

# ...திகள்
# ...னைகள்

**...ழங்கிய நிலத்தை அரசு திரும்பப்**
**...ப்பு கேள்விக்குறி**

...் பிரிவினைவாதத்தை ஊக்குவிக்கும்
...ர்குலைப்பது ஆச்சர்யபடுவதற்கான
...த்தல், போதைக்கடத்தல், ஊடுருவல்
...திக்கும் கடற்பகுதியில் கடல்தளம்
... அந்நிய படையெடுப்பிற்கு ஏதுவாக
...அங்கமே!

**... முஸ்லீம் மதப்பிரச்சாரம் -**
**...வர் கைது**

...பை பகிரங்கமாக செய்து வரும்
...ளிக்காக பாதிக்கப்பட்டவனை
... சிறுபான்மை ஆதரவை பெறத்
... ஹிந்துக்களை இரண்டாம் தர
...தும் அரசு!

**செய்தி:**

ECR **மேம்பாலப் பணியை** Black List **நிறுவனத்திற்கு வழங்கிய டெண்டருக்கு தடை - நீதிமன்றம் அதிரடி உத்தரவு**

**சிந்தனை**

அரசு டெண்டர் எடுக்க ஊழல் முன் அனுபவம் அவசியம் என்பதை நிலைநாட்டிய அரசுக்கு கிடைத்த சவுக்கடி! பொறுப்புணர்ச்சியும், கடமையுணர்ச்சியும் உள்ள அரசுக்குத் தான் மான அவமானம் இருக்கும். பல தீர்ப்புகள் வந்தபின்னும் முறைகேடுகளை ஊக்குவிக்கும் திராவிட மாடல் அரசு! காலத்தின் கொடுமை

**செய்தி:**

**பட்டாதாரி ஆசிரியர் தகுதி தேர்வில் 2.75 லட்சம் பேர்களும், இடைநிலை ஆசிரியர் தகுதி தேர்வில் 50% சதவீதம் பேர் தோல்வி**

**சிந்தனை**

தேர்வினை எளிதாக்கிய பின்னரும் தேர்ச்சி விகதம் குறைவென்றால் தமிழகத்தின் கல்வித் தரம் கவலைக்குரியதாக இருக்கிறது. ஆசிரியர் தரமே இப்படியென்றால் மாணவர்களின் நிலை என்ன? தமிழகத்தில் வருங்காலம் என்னவாகும்?

**செய்தி:**

**பட்டியல் சமூக அதிகாரி பணி செய்த அலுவலகத்தை மாட்டுச்சாணம் பூசி சுத்தம் செய்த திமுக தொழிற்சங்க நிர்வாகி**

**சிந்தனை**

திராவிட மாடல் அரசின் உண்மையான முகம் இதுவே! பட்டியலின சமுதாயத்தைத் தொடர்ந்து அடிமைகளாக வைத்திருக்கும் சித்தாந்தமே திராவிடம்! சமத்துவம், சமூக நீதி என்று மக்களை ஏமாற்றி தீண்டாமையை வளர்க்கும் தீய சக்தி திராவிடம்!

# இந்திய - அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் - யாருக்கு லாபம் ?

**வெள்ளய்யன்**




இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையே வர்த்தக ஒப்பந்தம் முடிவாகியுள்ளது. இதன் அடிப்படையில், இந்தியாமீது அமெரிக்காவிதித்திருந்த சிறப்பு வரிவிதிப்புகள் நீக்கப்பட்டன என்று டிரம்ப் அறிவித்தார். அத்துடன் நில்லாமல், இந்தியா ரஷ்யாவிடமிருந்து கச்சா எண்ணெய் வாங்காது, இந்தியா அமெரிக்காவிடமிருந்து 500 பில்லியன் டாலர்களுக்கு பொருட்கள் வாங்கும், அமெரிக்கப் பொருட்கள் மீது முற்றிலுமாக வரியை நீக்கும் என்றும் தெரிவித்தார். ஆனால் இந்திய அரசோ, எங்கள் தேவைக்கு யாரிடம் வேண்டுமென்றாலும் கச்சா எண்ணெய் வாங்குவோம் என்று உறுதிபட தெரிவித்தது. 500 மில்லியன் டாலர் அளவிற்கு பொருட்களை அமெரிக்காவிடமிருந்து இந்தியா வாங்கும் என்ற வாசகம், இந்தியா வாங்கும் நோக்கத்தில் உள்ளது என்று திருத்தம் செய்யப்பட்டது. அமெரிக்காவிலிருந்து இந்தியா வாங்கும் பொருட்கள் பட்டியலிலிருந்து விவசாய விளைப்பொருட்கள் நீக்கப்பட்டுள்ளன. டிஜிட்டல் சர்வீசஸ் வரி குறித்த அறிவிப்பும் நீக்கப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் முழுமையான அம்சங்கள் வெளிவரவில்லை, ஆனால் இதுவரை வெளியான தகவல்களின் அடிப்படையில் இந்த ஒப்பந்தத்தால் இந்தியாவிற்கு லாபமா? இந்தியப் பொருட்களுக்கான வரியை 50% இருந்து 18% ஆக குறைத்துள்ளது அமெரிக்கா. இது, நம் அண்டை நாடுகளான பாகிஸ்தான், சீனா, வங்கதேசம் ஆகிய நாடுகளைவிடக் குறைவு. மேலும் பாகிஸ்தான், வங்கதேசம் ஆகிய நாடுகளுடன் ஒப்பிடுகையில், நம் நாட்டில் உற்பத்திச் செலவும் குறைவு, தரமும் உயர்ச்சி. இதனால் இந்தியப் பொருட்கள், அமெரிக்கச் சந்தையில் ஆதிக்கம் செலுத்தும்.

**டொனால்ட் டிரம்ப், வெனிசுவேலாவில் கச்சா எண்ணெய் எடுக்க இந்தியாவிற்கு அழைப்பு விடுத்துள்ளார். இது இந்தியாவிற்கு கிடைத்த அரிய வாய்ப்பு.**

அமெரிக்காவிலிருந்து விமானங்கள், உயர்நுட்ப இயந்திரங்கள், வாகனங்கள், ரசாயனங்கள், மருத்துவ உபகரணங்கள் போன்றவற்றிற்கான வரியை இந்தியா குறைக்கும். இப்போது, இந்தியாவில் இந்தப் பொருட்களை விற்கும் நாடுகளாக ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகள், ஜப்பான், இங்கிலாந்து ஆகியவைகள் உள்ளன. இதே சலுகையை இந்தியா சமீபத்தில் ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகளுக்கு வழங்கியுள்ளது. இதனால் இந்தப் பொருட்களை இந்தியாவிற்கு விற்கும் போட்டி அதிகரிக்கும். இது விலை வீழ்ச்சிக்கு வழிவகுக்கும். இந்தியாவில் உற்பத்தித் துறையில் முதலீடு செய்ய பல பன்னாட்டு நிறுவனங்கள் முற்படும்.

இந்த ஒப்பந்தத்தை அறிவித்த டொனால்ட் டிரம்ப், வெனிசுவேலாவில் கச்சா எண்ணெய் எடுக்க இந்தியாவிற்கு அழைப்பு விடுத்துள்ளார். இது இந்தியாவிற்கு கிடைத்த அரிய வாய்ப்பு. வெனிசுவேலாவில் எடுக்கப்படும் கச்சா எண்ணெய் சல்பர் அளவு அதிகமாகக் கொண்டது, இதன் திடத்தன்மையும் அதிகமாக இருக்கும். இந்த கச்சா எண்ணெய்யை சுத்திகரிக்கும் ஆற்றல், அமெரிக்கா, சீனா, இந்தியா ஈரான் ஆகிய நாடுகளில் மட்டுமே உள்ளது. ஈரான், சீனா ஆகிய நாடுகளை அமெரிக்கா எதிரி நாடுகளாகப் பார்க்கிறது. அமெரிக்காவால் மட்டுமே, வெனிசுவேலா எண்ணெய் உற்பத்தியை போதிய அளவு செய்ய முடியாது. வெனிசுவேலாவின் வளத்தைக் குறிவைத்துக் கைப்பற்றிய அமெரிக்காவிற்கு, இந்தியாவின் உதவி அத்தியாவசியமாகியுள்ளது. இந்த வாய்ப்பை பயன்படுத்தி, இந்தியா வெனிசுவேலாவில் எண்ணெய் உற்பத்தித் துறையில் ஆதிக்கம் செலுத்த முடியும். இந்தியப் பொருளாதாரத்தை தலைகீழாக மாற்றும் வாய்ப்பை இந்தியா பெற்றுள்ளது.

இந்தியா மீது வர்த்தகக் கட்டுப்பாடுகளை விதித்து, இந்தியாவைப் பணிய வைக்கலாம் என்று தப்புக் கணக்குப் போட்டார் டிரம்ப். மோடிக்கு உள்நாட்டில் அரசியல் நெருக்கடி கொடுக்க, இந்தியா-பாகிஸ்தான் போரை அவர் நிறுத்தியதாகப் புளுகினார். ரஷ்யாவிடமிருந்து எண்ணெய் வாங்குவதால் ரஷ்யாவின் போருக்கு இந்தியா உதவுவதாகக் குற்றம்சாட்டி 25% சிறப்பு வரி விதித்தார். சில இந்திய முதலாளிகள் லாபம் அடையவே மோடி, ரஷ்யாவிடம் எண்ணெய் வாங்குகிறார், அமெரிக்க ஒப்பந்தத்தில் கையெழுத்திடவில்லை என்று இந்திய எதிர்கட்சிகள் குற்றம்சாட்டினர். இந்த துஷ்பிரச்சாரத்தின் பின்னணியில், அமெரிக்க உளவு நிறுவனங்கள் வேலை செய்தன. இந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு இந்திய அரசு, வலிமையாக எதிர்வினையாற்றவில்லை. அமெரிக்காவுடன் ஒருபுறம் பேச்சு நடத்தியது, ரஷ்யாவிடமிருந்து கச்சா எண்ணெயும் தொடர்ந்து வாங்கிவருகிறது. பிரதமர் மோடியிடம் பேச டிரம்ப் பலமுறை முற்பட்டு தோல்வியடைந்தார். டிரம்ப்பிடம் கொஞ்சம் அனுசரித்தால் வர்த்தக ஒப்பந்தம் நிறைவேறும், கடும் வரி விதிப்பிலிருந்து இந்தியா தப்பிவிடலாம் என்று யோசனை சொன்னார் அமெரிக்க வெளியுறவுத்துறை செயலர் ரூபியோ. இந்தியாவிற்கு எந்த அவசரமுமில்லை, டிரம்ப் பதவிக்காலத்திற்குப் பின்னர் பார்த்துக்கொள்ளலாம் என்று தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் பதிலளித்தார்.

இந்தப் பேச்சுவார்த்தைகளுக்கிடையில், இந்தியாவோ, இங்கிலாந்து, நியூசிலாந்து, ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகளுடன் வர்த்தக ஒப்பந்தங்களை உறுதி செய்தது. உயர் தொழில் நுட்பம், விமானங்கள், வாகன உற்பத்திப் போன்ற துறைகளில் அமெரிக்காவிற்கு போட்டியாக இந்த நாடுகள் உள்ளதால், இந்த நாடுகளின் நிறுவனங்கள் இந்தியச் சந்தையைக் கைப்பற்றிவிடும் என்ற அச்சம் அமெரிக்காவிற்கு வந்தது. உலக உற்பத்தி வளர்ச்சியில் அமெரிக்காவை இந்தியா பின்னுக்குத் தள்ளியதுடன், உலகின் நான்காவது பொருளாதார வல்லரசாக உள்ளது. இந்நிலையில், இந்தியாவைப்



**விரைந்து வளரும் உலகப்பொருளாதாரமாக மட்டுமில்லாமல், உலகப் பொருளாதார விதியை மாற்றி எழுதவல்ல ஒரு நாட்டை இழந்தால் யாருக்கு நஷ்டம் என்று சிந்தித்த அமெரிக்கா, வேறு வழியின்றி இந்தியாவுடன் ஒப்பந்தம் செய்யவேண்டி வந்துள்ளது.**

புறக்கணித்தால், அது அமெரிக்காவிற்குத்தான் நஷ்டம் என்பதை அமெரிக்கா உணர்ந்தது. அமெரிக்கா தடைகள் பல விதித்தபின்னும், இந்தியப் பொருளாதாரத்தில் எந்த சலசலப்பும் இல்லை மாறாக வளர்ச்சியையே பதிவு செய்தது.

அமெரிக்க அதிபர் டிரம்ப், கனடா, ஐரோப்பிய நாடுகள் என்று நட்பு நாடுகளைப் பகைத்துக் கொண்டார். அமெரிக்க பாதுகாப்பில் இயங்கும் ஐக்கிய அமீரகம் சௌதி அரேபியா நாடுகளுக்கிடையிலான தாக்குதல்களை டிரம்பால் தடுக்க முடியவில்லை. அமெரிக்காவின் வலிமை கொண்டு போர்களை நிறுத்துவேன் என்று சொல்லி, டிரம்ப் தலையிட்ட பிரச்சினைகள் எதுவும் முடிவுக்கு வரவில்லை. உலகினை ஆட்டிப்படைத்த அமெரிக்க சர்வாதிகாரத்தின் வீழ்ச்சியே இது. இதை உணர்ந்த பல உலக நாடுகள், குறிப்பாக பிரேசில் போன்ற நாடுகள், எங்களுக்கு மோடி மீது நம்பிக்கையுள்ளது, டிரம்ப் மீது இல்லை என்று பகிரங்கமாக அறிவித்தது. இந்த சர்வதேச அரசியல் மாற்றங்களுக்கிடையே, டாலரை இந்தியா பல நாடுகளுடன், அந்நாட்டு செலாவணியில் வர்த்தகம் செய்யும் ஒப்பந்தங்களை உறுதி செய்தது. யூபிஐ போன்ற பணப்பரிமாற்ற முறைகளை வெற்றிகரமாக உலகமயமாக்கியது. இந்த நகர்வுகளால், டாலரைச் சார்ந்த அன்னிய வர்த்தகத்தை முடிவுக்குக் கொண்டுவரத் தொடங்கியது. இது டாலரை வலுவிழக்கச் செய்தது. டாலருக்கு பதிலாகத் தங்கத்தில் தன் சேமிப்பை உயர்த்தியது இந்தியா. இதுவும் டாலருக்கு அழுத்தத்தைக் கொடுத்தது. இந்த யுக்தியைப் பல நாடுகள் பின்பற்றத் தொடங்கியதால், அமெரிக்காவிற்கு அச்சம் ஏற்படத் தொடங்கியுள்ளது. விரைந்து வளரும் உலகப்பொருளாதாரமாக மட்டுமில்லாமல், உலகப் பொருளாதார விதியை மாற்றி எழுதவல்ல ஒரு நாட்டை இழந்தால் யாருக்கு நஷ்டம் என்று சிந்தித்த அமெரிக்கா, வேறு வழியின்றி இந்தியாவுடன் ஒப்பந்தம் செய்யவேண்டி வந்துள்ளது. உலக நாடுகளைத் தன் வழிக்குக் கொண்டு வரும் அமெரிக்காவை, நம் வழிக்குக் கொண்டுவந்த இந்தியப் பிரதமரின் சாதுரியத்தையும், திறனையும், தேச பக்தியையும், பொறுமையையும் பாராட்டுவோம் !

# படம் சொல்லும் பாடம்

- தொகுப்பு : சி.பாண்டிக்குமார்






# பொருளாதாரம்

கோ. ரமேஷ், பொருளாதார நிபுணர்.

**டெக்னிக்கல் அனாலிசிஸ் எப்போது தேவை?**

பொதுவாக, காளைச் சந்தையில் பங்குகளின் விலை ஏறிக் கொண்டிருக்கும். இதில், எந்த நிலையில் வாங்கினாலும் சிறிது லாபத்தையாவது சம்பாதித்துவிட முடியும். அப்போது தொழில்நுட்ப ஆய்வின் தேவை பெரிய அளவில் இருக்காது. அதே நேரத்தில், கரடி சந்தையில் பங்குகளின் விலை இலக்கு இல்லாமல் இறங்கி கொண்டிருக்கும் போது தொழில்நுட்ப ஆய்வு மிகவும் அவசியம்.

பொதுவாக, கடன் மற்றும் வைப்புத் தொகைகளுக்கான வட்டி விகிதம், பணவீக்க விகிதம், கச்சா எண்ணெய் விலை போன்றவற்றை சார்ந்து பங்குச் சந்தை மற்றும் பங்குகளின் செயல்பாடு இருக்கும்.

இந்நிலையில் தொழில்நுட்ப ஆய்வு மூலம் சில விசயங்களை கணிக்க முடியும்.

★ ஒரு பங்கை எந்த விலையில் வாங்க வேண்டும் அல்லது விற்க வேண்டும் என்பதை தொழில்நுட்ப ஆய்வு சுட்டிக் காட்டும்.

★ பங்குச் சந்தை மற்றும் பங்குகளின் எதிர்கால போக்கு எப்படி இருக்கும்.?

தொழில்நுட்ப ஆய்வில் முக்கியமாக கவனிப்பது, வாங்குவோர் - விற்பவர்களின் எண்ணிக்கை தான். தேவையும் அளிப்பும்தான் விலையைத் தீர்மானிக்கும்.

**அடிப்படை பகுப்பாய்வு ஏன் அவசியம்?**

அடிப்படை ஆய்வை ஏன் பார்க்க வேண்டும் என்பதற்கு ஒரு சிறு சான்று.

ஒரு பங்கின் விலை வேகமாக ஏறுகிறது. அப்பங்கில் முதலீடு செய்தால் நிச்சயம் லாபம் என்கிற நிலை. ஆனால், பாரம்பரியமில்லாத, ஏற்கெனவே சிக்கலில் இருக்கும் அந்த நிறுவனம் மோசடி நிறுவனம்; திடீரென இழுத்து மூடப்பட்டுவிட்டால் என்னவாகும். முதலுக்கு மோசம்? அதனால்தான் வலுவான ஃபண்டமென்டல் உள்ள நிறுவனங்களை தேர்ந்தெடுத்துவிட்டு, அதன் பிறகு அந்த நிறுவனப் பங்கின் விலையை தொழில்நுட்ப ஆய்வின் மூலம் அணுகுவதே லாபகரமாக இருக்கும்.

**இரட்டை - ஆர்டர் விதிமுறை**

பங்கை வாங்க ஒரு ஆர்டர் போடும் அதே நேரத்தில் முதலீடு அல்லது வர்த்தகத்தில் நுழைந்தவுடன் 'ஸ்டாப் லாஸ்' என்கிற ஆர்டர் போடுவது அவசியம். இந்த இரட்டை ஆர்டர் பற்றி கடந்த 1922ம் ஆண்டிலேயே தாமஸ் டெம்பிள் ஹாய்ன் (Thomas Temple Hoyne) என்பவர் தன் ஊக வணிகம் (Speculation: Its sound principles and rules for its practice) தொடர்பான புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கிறார். இதை அவர் இரட்டை-ஆர்டர்' விதிமுறை என்று சொல்லி இருக்கிறார்.

சந்தை என்பது எதிர்பாராத விதமாக மேலே அல்லது கீழே எப்படி வேண்டுமானாலும் போக வாய்ப்பு இருக்கிறது. சந்தை இப்படித்தான் போகும்; இல்லை, அப்படித்தான் போகும் என்று யாராலும் உறுதியாக அறுதியிட்டுக் கூறமுடியாத நிலை என்பதால் 'ஸ்டாப் லாஸ்' ஆர்டரை போட்டு வைத்துவிட்டால் நிம்மதியாக பங்குச் சந்தையில் முதலீடு அல்லது வர்த்தகம் செய்யலாம்.

சந்தையின் அல்லது பங்கின் போக்கு நிலை

சந்தையின் புள்ளி அல்லது பங்கின் விலை எந்த திசையில் செல்கிறது என்பதைத்தான் 'போக்கு நிலை' என்கிறோம். இதை ஆங்கிலத்தில் 'டிரெண்ட்'(Trend) என்கிறோம்.

சந்தை ஒரு வரம்பு அல்லது எல்லைக்குள் வர்த்தமாகிக் கொண்டிருந்தால் (டிரேடிங் ரேஞ்ச்) அதை சாதாரணமாக அனைவராலும் சுலபமாகக் கண்டு பிடித்துவிட முடியும். அதாவது, ஒரு பங்கின் விலை, ஒரு நிலைக்குச் சென்று விட்டு மீண்டும் வெகு சீக்கிரத்திலே பழைய நிலைக்கே வந்துவிடுவது, 'ரேஞ்ச் டிரேடிங்' எனப்படும்.

பங்குச் சந்தை, டிரேடிங் ரேஞ்சில் இருக்கும்போது அதிக அனுபவம் கொண்ட முதலீட்டாளர்கள் மற்றும் வர்த்தகர்களால் மட்டுமே வர்த்தகம் செய்து லாபம் சம்பாதிக்க முடியும். காரணம், ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஏற்படும் விலை மாற்றம் என்பது பல நேரங்களில் தரகு கட்டணத்துக்குக் கூட கட்டுபடியாகாமல் போய்விடும்.

சந்தை அல்லது பங்கின் விலை, டிரேடிங் ரேஞ்சில் இல்லாதபட்சத்தில் இறக்கம் அல்லது ஏற்றத்தில் இருக்கும். ஆனால், தொடர்ந்து பங்கின் விலை அல்லது சந்தையின் புள்ளிகள் எந்த பாதையில் போகிறது என்பதைக் கண்டுபிடிப்பது கடினமான காரியம். இதை தொழில்நுட்ப ஆய்வை பயன்படுத்திக் கண்டறிய முடியும்.


வெற்றிகரமாக மற்றும் லாபகரமாக முதலீடு மற்றும் வர்த்தகம் செய்ய 'போக்கு நிலை' உருவாவதை அது ஏற்படும்போதே கண்டுபிடிப்பது அவசியம்.

மூன்று விதமான சந்தையின் போக்கு நிலைகள்

பொதுவாக சந்தை மற்றும் பங்கின் போக்கு மூன்று விதமான போக்குகளில் இருக்கும்.

அவையாவன

1. ஏறும் போக்கு நிலை




2. இறங்கும் போக்கு நிலை.

3. ரேஞ்ச் ஃபவுண்ட் போக்கு நிலை (குறிப்பிட்ட புள்ளி அல்லது விலை எல்லை வரம்பிற்குள் வர்த்தகமாவது)

இதில் முதல் வகையான ஏறும் போக்கு நிலையில் சந்தையின் புள்ளி அல்லது பங்கின் விலை இருக்கும்போது வருமானம் ஈட்டுவது எளிது.

ஏறும் போக்கு நிலைதான் பங்கை - வாங்குவதற்கான சரியான நேரமாக இருக்கும்.

இரண்டாம் வகையான இறங்கும் போக்கு நிலையில் சந்தையின் புள்ளி அல்லது பங்கின் விலை இருக்கும்போது வருமானம் சம்பாதிப்பது சுலபம்.

இறங்கும் போக்கு நிலையை விற்பதற்கான நிலையாக எடுத்துக் கொள்ளலாம்.

ஏறும் போக்கு நிலையா? அல்லது இறங்கும் போக்கு நிலையா? என்பதை முதலில் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்கேற்றபடி முதலீட்டு/ வர்த்தக முடிவை எடுப்பது நிச்சய லாபத்துக்கு உறுதியாக அமையும்.

அதே நேரத்தில், மூன்றாம் வகையான சந்தையின் புள்ளி அல்லது பங்கின் விலை போக்கு நிலை, ரேஞ்ச் ஃபவுண்ட் நிலையில் இருக்கும்போது மிகவும் எச்சரிக்கையாக செயல்படாவிட்டால் லாபம் என்பது குதிரைக் கொம்பாகிவிடும். காரணம், மிகக் குறுகிய நேரத்திலேயே குறுகிய ஏற்ற இறக்கங்கள் நடந்து முடிந்துவிடக் கூடும்.

லாபம் உறுதியாக கிடைக்கப் போகிற போக்கு நிலையை சரியாக கணிப்பது சாதாரண வேலை இல்லை. அதற்கு தொடர்ந்து சந்தை புள்ளிகள் மற்றும் பங்கின் விலை போக்கை கவனித்துக் கொண்டிருக்க வேண்டும். நிறுவனத்தின் உள்ளே மற்றும் வெளியே, சர்வதேச தொழில் மற்றும் பொருளாதார நிகழ்வுகள் மற்றும் அவற்றின் விளைவுகளை கருத்தில் செயல்பட வேண்டும். மேலும் பல்வேறு தொழில்நுட்ப ஆய்வு அனாலிஸ் முறைகளை தெரிந்துக் கொள்வது அவசியம். சில தொழில்நுட்ப ஆய்வுகள் காளைச் சந்தையிலும் சில தொழில்நுட்ப ஆய்வுகள் கரடிச் சந்தையிலும் சரியாக செயல்படும்.

இந்தத் தொழில்நுட்பங்களை எல்லாம் தெரிந்துக் கொள்வது என்பது ஒரே நாளில் நடந்து விடாது. இன்றைக்கு கோடீஸ்வரர்களாக இருக்கும் யாரும் ஒரே நாளில் அந்த நிலையை அடைந்திருக்க முடியாது. அது போல் தான் பங்குச் சந்தையிலும் லாபம் பார்ப்பது என்பது. முதலீடு அல்லது வர்த்தகம் பழகும் வரைக்கும் காகித வர்த்தகம் மேற்கொள்வது நல்லது.அது தான் பணத்துக்கும் பாதுகாப்பாக அமையும்.

சந்தையின் போக்கு அல்லது பங்கின் விலை போக்கு நிலை, உருவாவது பற்றி தெரிந்துகொள்ள முடியாத வர்த்தகர்களால் லாபம் சம்பாதிக்க முடியாது.

சந்தை புள்ளிகளின் போக்கு அல்லது பங்கின் விலை போக்கை கண்டுபிடிக்கப் பல வழிமுறைகள் இருக்கின்றன.

சந்தையில் பல விதமான தொழில்நுட்ப பகுப்பாய்வு முறைகள் இருந்துக் கொண்டிருக்கின்றன.

பல முறைகள் இருக்கும்போது எது சரி என்று எடுத்துக் கொள்வது? ஒரு குறிப்பிட்ட போக்கு நிலை இருப்பதாக பெரும்பான்மையான தொழில்நுட்ப ஆய்வுகள் குறிப்பிடும் போது அதை என்று எடுத்துக் கொள்ளலாம்.

அதே நேரத்தில் ஒரு தொழில்நுட்ப ஆய்வு முறை குறிப்பிடுவதற்கு மாறாக மற்றொரு ஆய்வு முடிவு குறிப்பிட்டால் என்ன செய்வது? அதாவது ஏறும் போக்கு நிலை என்று ஒரு தொழில்நுட்ப ஆய்வு சொல்லும் போது மற்றொரு தொழில்நுட்ப ஆய்வு இறங்கும் போக்கு நிலை என்றால் எந்த முடிவுக்கு வருவது? அது போன்ற நேரங்களில் தொழில்நுடப் பகுப்பாய்வை மட்டும் நம்பி வர்த்தக முடிவுவை எடுக்காமல், அடிப்படை ஆய்வையும் துணைக்கு சேர்த்துக் கொள்வது லாபத்தை சேர்க்கும்.

இந்த சார்டில் ஃபெபோனாசி மூவிங் ஆவரேஜ், பங்கை வாங்கச் சொல்கிறது. அதே நேரத்தில், 20 நாள் மூவிங் ஆவரேஜ் விற்கச் சொல்கிறது. இந்த நேரத்தில், அடிப்படை ஆய்வின் அடிப்படையில்தான் பங்கு முதலீட்டு முடிவை எடுக்க வேண்டும்.

# சரித்திரம் படைப்போம் சரித்திரத்தை முறியடிப்போம்



- வெங்கட் பிரசாத், D.
அரசியல் மற்றும் விளையாட்டு ஆய்வாளர்



இந்தக் கட்டுரையில் இந்தியாவில் நடைபெற்று வரும் டென்னிஸ் டேவிஸ்கோப்பை முதற் சுற்றுகளை பற்றியும், 2026 டி20 வேர்ல்ட் கப்பின் தற்போதைய நிலை பற்றியும் விரிவாகக் காணலாம்.

**டேவிஸ் கோப்பை:**

டென்னிஸ் உலகின், உலக கோப்பைக்கு நிகராக பார்க்கப்படும் இந்த போட்டியின் முதல் சுற்று இந்தியாவில் Feb 5-8 ஆம் தேதி வரை நடைபெற்று வந்தது. 26 அணிகள் பங்கெடுக்கும் இந்த போட்டியில் 13 அணிகள் அடுத்த சுற்றுக்கு முன்னேறும். தக்ஷினேஸ்வர் சுரேஷ் என்ற தமிழகத்தைச் சேர்ந்த 25 வயதான வீரரின் அற்புதமான ஆட்டத்தால் இந்தியா அடுத்த சுற்றுக்கு முன்னேறி உள்ளது. பிப்ரவரி 8ஆம் தேதி ஒரே நாளில் இரண்டு ஒற்றையர் ஆட்டத்தையும், ஒரு இரட்டையர் ஆட்டத்தையும் விளையாடி மூன்றிலும் வெற்றி பெற்றார் தக்ஷினேஸ்வர். சர்வதேச டென்னிஸ் தொடரில் ஒரே நாளில் ஒரு இந்திய வீரர் மூன்று ஆட்டங்களை வென்றிருப்பது கடைசியாக 2004இல் லியாண்டர் பேஸ் செய்த சாதனையாகும் அதன் பிறகு அப்படி ஒரு அற்புதத்தை இப்போது நிகழ்த்தியுள்ளார் தக்ஷனேஷ்வர். ஆனால் டிவி சமையல் நிகழ்ச்சி நடிகர்களையும் கிரிக்கெட்டில் சஞ்சு சம்சனைப் பற்றி காட்டும் அக்கறை கூட தமிழர்கள் தக்ஷனேஸ்வரை கொண்டாடுவதில் காட்டவில்லை என்பது நாம் நம்மை மாற்றிக் கொள்ள வேண்டிய விஷயம் இவரைப் பற்றி இதில் படிக்கும் நீங்கள் யாவரும் பலருக்கும் எடுத்துரைக்க வேண்டும் என்பதை எங்களது வேண்டுகோள். கிட்டத்தட்ட மூன்று மணி நேரத்திற்கும் மேலாக விளையாடிய போதும், கடைசி ஒற்றையர் ஆட்டத்தில் 6-4, 7-6(4) என்ற நேர் செட்களில் வெற்றி பெற்று தலை நிமிர வைத்தார் தக்ஷனேஸ்வர். இதில் 15 Aceகள் அடங்கும். அவருக்கு நம் மனமார்ந்த பாராட்டுக்கள்.

**டி20 உலக கோப்பை 2026:**

தன் முதல் ஆட்டத்தில் இந்தியா யுஎஸ்ஏ வை 29 ரன்கள் வித்தியாசத்தில் தோற்கடித்தது. பந்து வீச்சாளர்களுக்குச் சாதகமாக இருந்த வான்கடே ஆடு களத்தில் முதலில் பேட் செய்த இந்திய அணி 77 க்கு 6 விக்கெட்டுகளை கொடுத்து கொஞ்சம் தடுமாறியது, ஆனால் நெடிய பேட்டிங் வரிசை கொண்டிருப்பதால் அணித் தலைவர் சூரியகுமார் யாதவும், பல நேரங்களில் விமர்சனத்திற்கு உள்ளானாலும் பிரச்சனை நேரங்களில் ஆபத்பாந்தவனாக பலமுறை விளங்கிய அக்சர் பட்டேலும் இணைந்து 31 ரன்கள் எடுத்து, தடுமாற்றத்தை சரி செய்தனர். பிறகு பந்துவீச்சாளர்களுடன் நின்று அதிரடியாக ஆடி 161/9 என்ற மரியாதைக்குரிய இலக்கிற்கு கொண்டு சென்றார் அணித்தலைவர்.

பிறகு ஆடிய யூஎஸ் அணி ஆரம்பகட்டத்திலேயே மூன்று விக்கெட்டுகளை பறி கொடுத்த போதிலும், மிலிந்த் குமார் மற்றும் தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த சஞ்சய் கிருஷ்ணமூர்த்தி ஆகிய இருவரும் நன்றாக விளையாடி சரிவை சமாளித்த போதும் வருண் சக்கரவர்த்தி கூகுளி வீச மிலிந்த் அவுட் ஆக அதன் பிறகு அடுத்தடுத்து விக்கெட்டுகளை பறிகொடுத்து 132/8 கௌரவமான கணக்கை பதிவு செய்து, தோற்றது யுஎஸ்ஏ அணி

இந்தியா 77/6 என்ற நிலை வந்தது பலருக்கு கவலை கொடுத்திருக்கலாம் ஆனால் வான்கடே பந்துவீச்சாளர்களுக்கு உகந்ததாக இருந்தும், ஆரம்ப விக்கெட்டுகளை சொற்ப ரன்களுக்கு பறிகொடுத்தும் 160 என்ற இலக்கை இந்தியா எட்டியது பாராட்டுக்குரியதே. ஆனால் திலக் வர்மா மற்றும் ஹர்திக் சற்று கவனம் செலுத்த வேண்டும், மேலும் இஷான் கிஷன் விக்கெட் கீப்பிங் மேம்படுத்த வேண்டும் என்பதே நமது பார்வை.

பிப்ரவரி 12 நமீபியாவையும், பிப்ரவரி 15 பாகிஸ்தானையும் இந்தியா வீழ்த்தும் என்பதே நமது கணிப்பு. யுஎஸ்ஏவிடம் பாகிஸ்தான் 191 ரன்கள் எடுத்திருக்கலாம் ஆனால் இந்தியாவின் திறன்மிகு பந்து வீச்சிற்கு எதிராக பாகிஸ்தானால் 160 தாண்ட முடியாது என்பதே நமது கணிப்பு, பிழையின்றி பந்துவீசி சரியாக பில்டிங் செய்தால் 130 குள்ளேயே பாகிஸ்தானை சுருட்டி விடலாம். உலக அரசியல் அழுத்தத்தைத் தவிர வீரர்கள் கவலை கொள்ள வேறு எந்த தேவையும் இல்லை என்பதே நிதர்சனம்.

# சங்கத் தமிழில் சனாதனம்

— பத்மன்



## அத்தியாயம் 5 : பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்

பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் என்பவை, 18 நூல்களின் தொகுப்பாகும். இவை காலத்தால் சற்று பிந்தையவை. அக்காலத்தில் அறத்தை வலியுறுத்திச் சொல்ல வேண்டிய தேவை எழுந்ததால், இந்நூல்களில் பெரும்பாலானவை நேரடியாக அறத்தை வலியுறுத்தும் நீதி நூல்களாகவே உள்ளன. **சனாதனம் என்பது தேங்கி நிற்பதல்ல. பழைமையின் தொடர்பு அறுந்துவிடாமல், காலவோட்டத்துக்கு ஏற்ப தன்னைத் தகவமைத்துக் கொள்வதே சனாதனம். அதற்கேற்ப, முற்காலத்தில் மக்களின் இயல்பாக இருந்த கள் அருந்துதல், இறைச்சி உண்ணுதல், பரத்தையர் தொடர்பு ஆகியவை, இப்பிற்கால நூல்களில் கடுமையாகக் கண்டிக்கப்பட்டுள்ளன.**

பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் எவை என்பதை நினைவில் நிறுத்த உதவும் வெண்பா :

**நாலடி, நான்மணி,நா நாற்பது, ஐந்திணை,முப்**
**பால்,கடுகம், கோவை, பழமொழி, மாமூலம்,**
**இன்னிலைய காஞ்சியோடு, ஏலாதி என்பவே,**
**கைந்நிலைய வாம்கீழ்க் கணக்கு.**

நாலடியார், நான்மணிக்கடிகை, நான்கு நாற்பது அதாவது இன்னா நாற்பது, இனியவை நாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பது; ஐந்து திணைகளை கூறும் ஐந்து அதாவது ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமொழி நூற்றைம்பது, ஐந்திணை அறுபது எனப்படும் கைந்நிலை; முப்பால் என்ற சிறப்புப் பெயர் கொண்ட திருக்குறள், திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி நானூறு, சிறப்புடைய சிறுபஞ்சமூலம், இனிய நிலையை எடுத்துரைக்கும் முதுமொழிக் காஞ்சி, ஏலாதி ஆகியவையே அந்த 18 நூல்கள்.

இவற்றில், களவழி நாற்பது மட்டும் புறத்திணை நூல் ஆகும். கார் நாற்பது, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமொழி நூற்றைம்பது, ஐந்திணை அறுபது (கைந்நிலை) ஆகிய 6 நூல்கள் அகத்திணை நூல்கள். எஞ்சிய 11 நூல்களும் அறவுரை கூறும் நீதி நூல்கள் ஆகும்.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் திருக்குறளும், நாலடியாரும் சனாதனம் வலியுறுத்தும் புருஷார்த்தங்களில் அதாவது வாழ்வியல் விழுமியங்களில் அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றையும் நேரடியாகக் கூறுவதோடு, அவற்றின் ஊடே இறுதி இலக்கான முக்தி எனப்படும் வீடுபேற்றையும் வலியுறுத்துகின்றன. பழங்காலந்தொட்டே இவற்றுக்கு இருக்கும் மதிப்பை, "ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி" என்ற பழமொழி பறைசாற்றுகிறது.

இரண்டே அடிகள் கொண்ட குறள் வெண்பாக்களால் ஆன **திருக்குறள்,** உலகப் பொதுமறை என்றும் போற்றப்படுகிறது. இதனுள் பொதிந்திருக்கும் சனாதனக் கூறுகளை, உரிய பகுதிகளில் பின்னர் காண்போம். திருவள்ளுவர் இயற்றியிருக்கும் இந்நூலில் 1,330 குறட்பாக்கள் உள்ளன. ஒவ்வோர் அதிகாரத்துக்கும் 10 குறள்கள் வீதம் 133 அதிகாரங்களில் இவை தொகுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் கடவுள் வாழ்த்து உள்ளிட்ட 38 அதிகாரங்கள் அறத்துப்பாலிலும், 70 அதிகாரங்கள் பொருட்பாலிலும், 25 அதிகாரங்கள் காமத்துப்பாலிலும் உள்ளன.

திருக்குறளைப் போலவே முப்பாலை உரைக்கும் மற்றொரு நூல், **நாலடியார்.** இந்நூலில் உள்ள 400 வெண்பாக்களை 400 சமண முனிவர்கள் இயற்றினார்கள் என்றும் பதுமனார் என்ற புலவர் தொகுத்ததாகவும் கூறப்படுகிறது. தலா 10 வெண்பாக்களைக் கொண்ட 40 அதிகாரங்களில், அறத்துப்பாலில் 13 அதிகாரங்களும், பொருட்பாலில் 26 அதிகாரங்களும், காமத்துப்பாலில் ஒரேயோர் அதிகாரமும் உள்ளன. நான்மணிக் கடிகை என்பதற்கு நான்கு ரத்தினத் துண்டங்கள் என்று பொருள். பெயருக்கு ஏற்ப ஒவ்வொரு பாடலிலும் ஒளிவீசும் 4 சிறப்புப் பொருள்களைக் கொண்ட 104 வெண்பாக்கள் இதில் உள்ளன. இதனை இயற்றியவர், புலவர் விளம்பி இளநாகனார்.

கார்காலம் எனப்படும் மழைக்காலத்தின் தோற்றத்தைக் கூறும் **கார் நாற்பது** என்ற நூலை மதுரை கண்ணன் கூத்தனார் இயற்றியுள்ளார். கோச்செங்கோட் சோழனுக்கும் சேரன் கணைக்கால் இரும்பொறைக்கும் இடையே நடைபெற்ற போர் பற்றிய தகவல்களைக் கூறும் **களவழி நாற்பது** என்ற நூலை இயற்றிய புலவரின் பெயர், பொய்கையார். துன்பம் ஏற்படுத்தும் விஷயங்களை விலக்குமாறு

அறிவுறுத்தும் 40 பாடல்களைக் கொண்ட **இன்னா நாற்பது** நூலை கபிலதேவர் இயற்றியுள்ளார். இதேபோல் வாழ்வில் இனிமையான 40 விஷயங்களைப் பற்றி எடுத்துரைக்கும் **இனியவை நாற்பது** என்ற நூலை, மதுரைத் தமிழாசிரியர் மகனார் பூதஞ்சேந்தனார் என்ற புலவர் எழுதியிருக்கிறார்.

**ஐந்திணை ஐம்பது** நூலை மாறன் பொறையனார், **ஐந்திணை எழுபது** நூலை மூவாதியார், **திணைமொழி ஐம்பது** நூலை கண்ணன் சேந்தனார், **திணைமொழி நூற்றைம்பது** நூலை கணிமேதாவியார், **கைந்நிலை** என்ற ஐந்திணை அறுபது நூலை புல்லங்காடனார் ஆகியோர் இயற்றியுள்ளனர். உடல் நலத்தைப் பேணும் சுக்கு, மிளகு, திப்பிலி போல் உள்ளத்தின் நலனைப் பேணும் மூன்று தகவல்களைக் கொண்ட 101 பாடல்களைக் கொண்ட **திரிகடுகம்** நூலை நல்லாதனார் படைத்துள்ளார். இதேபோல், உடல் நலம் பேணும் நெருஞ்சி வேர் உள்ளிட்ட 5 வேர்களைப் போல, வாழ்க்கைக்கு நலன் தரும் 5 பொருள்களைப் பற்றிக்கூறும் 102 பாடல்கள் அடங்கிய **சிறுபஞ்சமூலம்** நூலை காரி ஆசான் இயற்றியுள்ளார். உடலுக்கு உறுதுணையாகும் ஏலம் உள்ளிட்ட 6 பொருள்களைப்போல் உயிருக்கு உறுதுணைபுரியும் 6 பொருள்களை எடுத்துரைக்கும் **ஏலாதி** என்ற நூலையும், கணிமேதாவியார் எழுதியுள்ளார்.

கயத்தூர் பெருவாயின் முள்ளியார் என்ற புலவர் இயற்றிய நூல் **ஆசாரக்கோவை.** ஆபத்ஸ்தம்ப தர்ம சூத்திரம், போதாயன தர்ம சூத்திரம், கௌதம சூத்திரம், மனு ஸ்மிருதி, உசனஸ சம்ஹிதை உள்ளிட்ட ஸ்மிருதி நூல்களைப் பின்பற்றி இந்நூல் எழுதப்பட்டிருப்பதாக மூத்த தமிழறிஞர் எஸ். வையாபுரி பிள்ளை குறிப்பிட்டுள்ளார். 400 பழமொழிகளைக் குறிப்பிடும் பழமொழி நானூறு நூலை, முன்றுரை அரையனார் இயற்றியுள்ளார். வாழ்க்கையின் நிலையாமையை எடுத்துரைக்கும் **முதுமொழிக் காஞ்சி** நூலை, மதுரைக் கூடலூர் கிழார் படைத்துள்ளார்.

**பழம்பெரும் இலக்கண நூலான தொல்காப்பியம்**

இலக்கை இயம்புவது அதாவது எடுத்துரைப்பது இலக்கியம் என்றால், அந்த இலக்கை இயம்புவதற்கான வழிமுறைகளை அணுக்கமாக அதாவது நெருக்கமாகவும், அழகாகவும், அணைபோன்ற கட்டுக்கோப்புடனும் உரைப்பது இலக்கணம் ஆகும். ஆகையால் சங்க இலக்கியங்களைப் போலவே, தற்போதுள்ள தமிழ் இலக்கணங்களிலேயே மிகப் பழைமையானதான தொல்காப்பியம் குறித்தும் நாம் சற்று அறிந்துகொள்ள வேண்டும்.

தொல்காப்பியர் என்ற பெருந்தமிழ்ப் புலவரால் இயற்றப்பட்டது தொல்காப்பியம். அவர் இயற்றிய நூல் என்பதால் இதற்குத் தொல்காப்பியம் என்ற பெயர் வந்ததாகக் கூறப்படுவதுண்டு. அதேநேரத்தில், தொல்+காப்பு+இயம் = தொல்காப்பியம், தொன்மையான இலக்கணத்தைக் காத்து இயம்பியுள்ளதால் இந்நூலுக்குத் தொல்காப்பியம் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது என்றும், இந்த நூலின் அடிப்படையில்தான் அதன் ஆசிரியருக்குத் தொல்காப்பியர் என்ற பெயர் ஏற்பட்டது என்றும் கூறுவார் உண்டு.

தொல்காப்பியர் என்ற இயற்பெயருக்கான விளக்கத்திலும் வெவ்வேறு கருத்துகள் நிலவுகின்றன. சீர்காழிக்கு அருகேயுள்ள தொன்மையான காப்பியக்குடி என்ற ஊரைச் சேர்ந்தவர் என்பதால் தொல்காப்பியர் எனப் பெயர் ஏற்பட்டதாக ஒரு சாரார் கூறுகின்றனர். காப்பிய (காவிய) கோத்திரத்துப் பிராமணர் என்பதால் தொல்காப்பியர் என்ற பெயர் ஏற்பட்டதாக மற்றொரு சாரார் கூறுகின்றனர். பொ.பி. 14-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தொல்காப்பிய உரையாசிரியர் ஆன நச்சினார்க்கினியர், தொல்காப்பியரின் இயற்பெயர் திரணதூமாக்னி என்றும், ஜமதக்னி முனிவரின் மகனான அவர் அகத்தியரின் சீடர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தொல்காப்பியர் வாழ்ந்த காலம் குறித்தும் பல்வேறு கருத்துகள் நிலவுகின்றன. தெ.பொ. மீனாட்சிசுந்தரனார், இலக்குவனார் போன்ற தமிழறிஞர்கள், தொல்காப்பியர் பொ.மு. 7-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர் என்று கருதுகின்றனர். ஆனால், தமிழறிஞர் எஸ். வையாபுரிப் பிள்ளை, தொல்காப்பியரின் காலத்தை பொ.பி. 3-ஆம் நூற்றாண்டு என்று கூறியுள்ளார். அதை மறுத்து, தொல்காப்பியர் பொ.மு. 4-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்பது மற்றொரு தமிழறிஞரான இராசமாணிக்கனார் தெரிவித்துள்ளார்.

எழுத்து அதிகாரம், சொல் அதிகாரம் மற்றும் பொருள் அதிகாரம் ஆகிய மூன்று அதிகாரங்களின் கீழ், மொத்தம் 1,610 சூத்திரங்களை அதாவது நூற்பாக்களைத் தொல்காப்பியம் கொண்டுள்ளது.

அடுத்ததாக, சனாதனத்தின் ஆணிவேராகத் திகழும் வேதம் குறித்து சங்க இலக்கியங்கள் என்ன சாற்றுகின்றன என்பதைப் பார்ப்போம்....

**(தொடரும்)**


# நமக்கான USER MANUAL




இரா. முகுந்த கிருஷ்ணன்,
Wellness Centre for Yoga & Holistic Yogic Healing.

## தோலும் ஜனனேந்திரியமும்.

ஜனனேந்திரியம் என்ற சம்ஸ்க்ருத வார்த்தை தமிழில் பிறப்புறுப்பு என்று சொல்லப்படுகிறது. “ஜனன” என்றால் பிறப்பு. “இந்திரியம்” என்றால் உறுப்பு. இந்த இரண்டு வார்த்தைகளும் சேரும்போது ஜனனேந்திரியம் என்று உச்சரிக்கப்படுகிறது. உயிர்கள் பிறக்கும் உறுப்பு என்று இதற்கு பொருள். இருபாலாரின் பிறப்புறுப்பையும் குறிப்பிடவேண்டிய அவசியம் நேரும்போது பொதுப்படையாக ஜனனேந்திரியம் அல்லது பிறப்புறுப்பு என்று சொல்லப்படுகிறது. ஆண்களுடைய பிறப்புறுப்பு லிங்கம் அல்லது ஆண்குறி என்றும் பெண்ணின் பிறப்புறுப்பு யோனி என்றும் குறிப்பிடப்படுகிறது.



பத்து மாத காலம் தாயின் வயிற்றில் வளர்ந்து வெளியே ஒரு குழந்தையாக பிறக்கும் போது தான் பிறப்பு நேர்கிறது என்று நாம் நினைக்கின்றோம். உண்மையில் உடலுறவின் போது ஆணின் உடலிலிருந்து விந்து வெளியேறுவதும் ஒரு பிறப்பு தான். அந்த ஆணின் பரம்பரையைச் சேர்ந்த முன்னோர்கள் அவனது உடலில் உயிராக நிலைகொண்டுள்ளார்கள். அவன் குழந்தையாக இருந்து அவனது தாயிடம் பால்குடித்து பின்னர் படிப்படியாக வளர்ந்து திருமணம் செய்துகொள்ளும் காலம் வரையில் அவன் உண்ணும் உணவின் சாரத்தை அந்த உயிர்களும் உண்டு அவனுடனேயே சேர்ந்து வளர்கிறார்கள். பின்னர் அவன் மனைவியுடன் சாந்திமுகூர்த்தத்தில் சேரும்போது லிங்கத்தின் வழியாக விந்துவுடன் வெளியேறி பெண்ணின் கர்ப்பத்தில் புகுந்துகொள்கிறார்கள். இவ்வாறு விந்து உருவத்தில் ஆணின் உடலிலிருந்து வெளியேறுவதே ஒரு பிறப்புதான். பின்னர் கர்ப்பத்தில் பத்துமாதகாலம் கர்ப்பவாசம் செய்து உருவத்தோடு மீண்டும் பிறக்கிறார்கள்.

முந்தைய காலங்களில் இன்றுபோல் ஒரு குழந்தை அரைக்குழந்தையெல்லாம் பெற்றுக்கொண்டு நானும் குடும்பம் நடத்துகிறேன் என்று சொல்லமாட்டார்கள். குடும்பம் என்றால் வம்ச பரம்பரை என்று பெயர். வம்சம் என்றால் மூங்கில் என்று பொருள். மூங்கில் என்றுமே ஒற்றை மூங்கிலாக வளராது. மூங்கில் காடாகத் தான் வளரும். வம்சமும் குடும்பமும் அப்படித்தான். ஒவ்வொரு குடும்பத்திலும் 8 முதல் 10 குழந்தைகள் என்பது சர்வசாதாரணம். ஆனால் இன்றைய நாகரீக தலைமுறைதான் அரைகுறையாக பெற்றுக்கொள்கிறார்கள். பின்னர் வாழும்போதும் அனாதைகளாகவும் மடிந்தபின்னரும் எள்ளுத்தண்ணீருக்கும் வழியின்றி அனாதைகளாவும் திரிகின்றார்கள். அதிலும் ஆடிசம் குழந்தையாகப் பிறந்துவிட்டால் பின்னர் அடுத்த குழந்தையே பெற்றுக்கொள்வதில்லை என்ற நிலை பெரும்பாலும் நிலவுகிறது.

தோலுக்கும் பிறப்புறுப்புக்குமான தொடர்பைப் பற்றிய இந்த பகுதி சற்று நீளமானதாக இருக்கலாம். எனவே அடுத்தத் தொடர் வரும்போது இதையும் அத்துடன் சேர்த்து வாசித்துக்கொண்டால் ஓரளவுக்கு முழுமையாகப் புரியும். இந்த பிறப்புறுப்பு என்பது எல்லா உயிரினத்துக்கும் பொதுவானது. பல்லி, பறவையினங்கள், ஆமை போன்ற உயிரினங்கள் முட்டையிட்டு குஞ்சு பொரிந்து பிறவி ஏற்படுகிறது. ஏனையவை அனேகமாக பெண்ணினத்தில் பிறப்புறுப்பான யோனியின் வழியாக கர்ப்பத்திலிருந்து வெளியே தள்ளப்பட்டு பிறக்கின்றன. இந்தியாவில் மட்டும் தற்காலங்களில், அதாவது கடந்த 30, 40 ஆண்டுகளாக வயிற்றை கிழித்து பிறக்கும் பிறவிகள் அதிகரித்துள்ளன. கர்ப்பம் தரிக்கும்போது யோனி வழியாகவும் பிள்ளை பெறும்போது வயிற்றை அறுத்தும் பிறக்கின்றன. அதாவது யோனி என்ற உறுப்பு உடலுறவின் சுகம் அனுபவிப்பதற்காக மட்டுமே, இயற்கையான முறையில் பிள்ளைப்பேறுக்காக முயற்சிக்கும்போது யோனியின் கட்டுக்குலைந்துவிடும் என்பதாலும், மேலும் பிரசவவலி தாங்கமுடியாதது என்பதாலும் பெரும்பாலும் வயிற்றைக் கிழித்துத்தான் பிரசவம் செய்கிறார்கள். சுகப்பிரசவத்திற்கு முயலும் ஒரு சிலரையும் தாய்-சேய் உயிருக்கு ஆபத்து நேரிடலாம் என பல தனியார் மருத்துவமனைகளில் அதைரியப்படுத்திவிடுகிறார்கள். இந்நிலை ஆரோக்கியமான விதத்திலே மாறவேண்டும்.

(தொடரும்)

# பொறுமையாக கேளுங்க

வ ரங்கநாதன்,
ஆளுமைத் திறன் பயிற்றுநர்

மனச் சோர்வில் தவித்த பெண் தனது சர்ச்சு பாதிரியாரிடம் ஆலோசனை கேட்கச் சென்றாள். இந்தப் பெண் சொல்வதை முழுமையாக் கேட்காமல் பாதிரியார் பைபிள் வசனங்களை சுட்டிக் காட்டி புத்திமதி சொல்லி அனுப்பினார். பெண்ணுக்கு அது ஆறுதலைத் தரவில்லை.




பெண்ணின் நண்பி அந்த ஊருக்கு வந்திருந்த சுவாமிஜியிடம் ஆலோசனை கேட்க அழைத்துச் சென்றாள்.

சுவாமிஜியிடம் இந்தப் பெண் தன் துக்கத்தைக் கொட்டினாள். சுவாமிஜி கண்களை மூடியபடி முழுமையாகக் கேட்டுக் கொண்டிருந்தார். பெண் சொல்லி முடித்ததும் "சரி. நான் பகவானிடம் பிரார்த்திக்கிறேன். எல்லாம் சரியாகி விடும்'' என்று உறுதி தொனிக்கச் சொன்னார். அந்தப் பெண்ணுக்கு மனதில் தெம்பு பிறந்தது.

தீர்வு கிடைத்து விட்டதாக பெண் நினைத்ததற்கு என்ன காரணம்? பாதிரி புத்திமதியை அள்ளி வீசினார். சுவாமிஜியோ பரிவுடன் பொறுமையாகப் பேசுவதைக் கேட்டார். அதுவே நல்ல பலனைத் தந்தது.

**அறிவு நிறைந்த தலையை விட பரிவு நிறைந்த இதயத்தையே மக்கள் தேடுகிறார்கள்.**

தேர்தல் வியூகவியலாளர் பிரஷந்த் கிஷோர் பாண்டே மோடிஜியைப் பற்றி என்ன சொல்கிறார் என்றால் "மோடி சிறந்த பேச்சாளர் மட்டுமல்ல; யார் அவரிடம் பேசச் சென்றாலும் கவனமாக முழுமையாக பொறுமையோடு கேட்பார். அதனால் நாம் சொன்னதை மட்டுமல்ல; சொல்ல வருவதையும் யூகித்துப் புரிந்து கொள்வார்''

சீரான உறவு வேண்டுமென்றால் கூர்ந்து கேட்கும் குணம் வேண்டும்.

கம்யூனிகேஷன் எனச் சொல்லப்படும் பேச்சுறவாடலில் மிக முக்கியம் பேசுவதை விட கேட்பதே ஆகும். யார் காது கொடுத்துக் கேட்கும் திறனை வளர்த்துக் கொள்கிறர்களோ அவர்களும் மோடி போல மக்களால் விரும்பப்படுவார்கள்.

நட்பு, உறவுகளோடு பொழுது போக அரட்டை அடிக்கும்போது எப்படி வேண்டுமானால் பேசிக் கொள்ளலாம்.

வாழ்க்கை நிகழ்வுகளைப் பற்றிய கருத்துப் பரிமாற்றத்தின்போதோ, உறவில் உரசலோ விரிசலோ ஏற்படும்போதோ பேச்சுறவாடலில் மிகுந்த கவனம் தேவை. அப்போது அதிகம் கவனமாகக் கேட்பவராக இருந்தால் நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வர முடியும் நீங்கள் சொல்ல நினைப்பதை சொல்ல முடியும்; சூழலை வெல்ல முடியும்.

பேசித் தீர்க்கக் கூடிய பல பிரச்சனைகளில் காது கொடுத்துக் கேட்டாலே பாதி தீர்ந்து விடும்

தன்னை யாராவது புரிந்து கொள்ள மாட்டார்களா என்றுதான் மக்கள் ஏங்குகிறார்கள்

வாயால் வில்லங்கம் வந்ததாக வரலாறு உண்டே தவிர காதால் பிறருக்கு கஷ்டம் வந்ததாக வரலாறு இல்லைதானே?

**கூர்ந்து கேட்கும் திறனைக் கூட்டுவது எப்படி?**

**மதித்தல் :** பேசுபவர் யாராக இருந்தாலும் அவரை மதிக்க வேண்டும்.

**பொறுமை :** அவர் சொல்லி முடிக்கும் வரை கவனமாக கேட்க வேண்டும் என்ற மன உறுதி கொண்டால் படிப்படியாக கூர்ந்து கேட்கும் திறன் கூடும்

**ஏற்புடைமை :** அவர் கருத்து உங்களோடு மாறுபட்டாலும் அது அவர் கருத்து என்று அங்கீகரிக்க வேண்டும் அவரின் மாறுபட்ட கருத்து உங்கள் மதிப்பை குறைக்கவில்லை என்ற மனவுறுதி கொள்ளவேண்டும்.

**கடவுளிடம் முறையிட்டால் ஏன் குறை தீருகிறது?**

நீங்க கத்திக் கதறி முறையிட்டாலும் சாமி குறுக்கப் பேசாம அமைதியாக கேட்கிறார் அல்லவா? அதுபோல நீங்களும் கூர்ந்து கேட்டு தெய்வம் ஆகலாம்

பேசுபவரை விட கூர்ந்து கேட்பவரே வலிமையானவர்

# ஆர்.எஸ்.எஸ். 100
# இந்த நாடு ஹிந்து நாடு (பகுதி 8)

இராம . வெங்கடாத்ரி

**வேற்றுமையில் ஒற்றுமை ஹிந்துதர்ம சாதனை**

நூற்றாண்டு விழா காணும் ஆர்.எஸ்.எஸ்.- ன் அடிப்படை சித்தாந்தம் இந்த நாடு ஒரு ஹிந்து ராஷ்ட்ரம் என்பதே. இமயம் முதல் குமரி வரை இந்த நாடு கலாச்சார அடிப்படையில், ஆன்மிக மரபுகளால் ஒன்றாகப் பிணைக்கப்பட்டுள்ளது. பல வண்ண மணிகளைப் பிணைத்து இணைக்கும் நூல் போல ஹிந்துப் பண்பாட்டின் கூறுகள் பன்னெடுங்காலமாக இந்த கலாச்சார பாரதத்தை இணைத்து வருகின்றன.

**காசித் தமிழ்ச் சங்கமம்:**

புண்ணிய பூமியான காசிக்கும்தமிழகத்திற்கும் இடையில் தொன்றுதொட்டு வரும் பிணைப்புகளைப் பாரத மக்களுக்கு உணர்த்தும் வகையில் காசித்தமிழ்ச்சங்கமம் நிகழ்ச்சி இந்திய அரசின் கல்வி அமைச்சகத்தால் சிறப்பான வகையில்தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. இது குறித்து நிறைய ஆவணங்கள், நூல்கள் செம்மொழி ஆய்வு மையத்தால் வெளியிடப்பட்டுள்ளன.

**காசித் தமிழ்ச் சங்கமத்தில் பிரதமர் மோதியின் உரை:**

2025 நவம்பர் 18 ஆம் நாள் காசித்தமிழ்ச் சங்கமத்தில் மாண்புமிகு பாரதப்பிரதமர் அவர்கள்ஆற்றிய உரையில், "பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக இயல்பான கலாச்சார ஒற்றுமையுடன் வாழ்ந்து வருவதே இந்தியாவின் பண்பாடு." சௌராட்டிரத்தில் உள்ள சோமநாதர் முதல் இராமேசுவரம்வரை 12 ஜோதிர்லிங்கங்களை நாள்தோறும் காலையில் நினைவு கூர்தலைக் கடமையாகக்கொண்டுள்ளோம். அதேபோல்நீராடி வழிபடும்போது, கங்கை, யமுனை முதல் கோதாவரி, காவேரி வரை உள்ள அனைத்து நதிகளும்நமது நீரில் குடியிருக்கட்டும்என்றே மந்திரங்களை ஓதுவோம்! அதாவது, இந்தியாவின்அனைத்து நதிகளிலும்குளிப்பது போல்உணர்கிறோம்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளின் இந்தப் பழமை, பாரம்பரியத்தை வலுப்படுத்திச் சுதந்திரத்திற்குப்பிறகு நாட்டின் ஒற்றுமை இழையாக மாற்றியுள்ளோம். இவை நமது கடமைகளை உணர்த்துவதோடு, தேசிய ஒருமைப்பாட்டை வலுப்படுத்துவதற்கான ஆற்றலாக இருக்கும். இந்தக்காசித் தமிழ்ச் சங்கமத்தில் இருந்து வரும் அமுதத்தை இளைஞர்களின் ஆராய்ச்சிக்காக முன்னெடுத்துச் செல்ல வேண்டும். இந்த விதைகள்தேசிய ஒருமைப்பாட்டின் ஆலமரமாக மாற வேண்டும் எனத்தம்உரையில்கூறினார்.

**பிணைக்கும் நதிகள்**

பிரதமர் மோடி அவர்கள் உரையில் குறிப்பிட்டது பின்வரும் ஸ்லோகத்தைத் தான்:

கங்கே ச யமுனே சைவ
கோதாவரி சரஸ்வதி
நர்மதே சிந்து காவேரி
ஜலேஸ்மின் சன்னிதம் குரு

இதன் பொருள்: ஏ கங்கையே, ஏ யமுனையே, ஏ கோதாவரியே, ஏ சரஸ்வதியே, ஏ நர்மதையே, ஏ சிந்துவே, ஏ காவேரியே நீங்கள் அனைவரும் நான் வைத்துள்ள இந்த நீரில் இணைந்து என்னைப் புனிதமாக்குங்கள்.

இந்த 7 நதிகளும் பாரத நாட்டின் புண்ணிய நதிகள். இந்த 7 நதிகளும் பாயும் பகுதி பாரதத் திருநாடு. ஸ்நான மந்திரம் என்று அழைக்கப்படும் இதை பாரத நாட்டின் மகான்கள் தினசரி குளிக்கும்போது சொல்லி இந்த நதிகள் அனைத்தையும் தான் குளிக்கும் நீரில் ஆவாஹனம் செய்து தங்களைப் புனிதப்படுத்திக் கொள்கிறார்கள்.

**புண்யாகவசனம்**

"புண்ய" என்றால் மங்களகரம், 'ஹவசனம்' என்றால் மந்திரங்களை ஓதுதல். புண்யாகவாசனம் திருமணங்கள், புதுமனை புகும் விழாக்கள், பண்டிகைகள் போன்ற நிகழ்வுகளுக்கு முன்பும், குழந்தை பிறந்த பிறகும், இறப்புச் சடங்குகளை முடித்த பிறகும் மற்றும் புதிய வீடு அல்லது கோவிலை சுத்திகரிக்கவும் செய்யப்படுகிறது. புண்யாக வசனத்தில் தெளிக்கப்படும் கலச நீரின் முன்பு கங்கே சயமுனே சைவ என்ற மந்திரம் ஓதப்பட்டு, பாரத நாடு முழுவதும் உள்ள 7 புண்ணிய நதிகளை அந்த கலசத்து நீரில் வரவழைத்து அது புனித நீராக ஆக்கப்படுகிறது.

**குடமுழுக்கு**

நாட்டின் பல பகுதிகளிலும் நடக்கும் கோவில் கும்பாபிஷேகங்களின் போது நாடு முழுவதும் உள்ள இந்த 7 புண்ணிய நதிகளின் தீர்த்தத்தால் அபிஷேகம் நடைபெறும். அந்த நிகழ்வின்போதும் இந்த ஸ்லோகம் ஓதப்படுகிறது.

**ஸ்லோகத்தின் மூலம்**

கங்கே ச யமுனே சைவ என்ற 7 நதிகளைப் பற்றிய ஸ்லோகம் நாரத புராணம், பிரம்ம வைவர்திக புராணம், அஹ்னிக சூத்ராவளி போன்ற பல்வேறு நூல்களில் காணப்படுகிறது. நாரத புராணம் 8ஆம் நூற்றாண்டிலும், பிரம்ம வைவர்திக புராணம் 7ஆம் நூற்றாண்டிலும் எழுதப்பட்டதாக ஆய்வுகள் கூறுகின்றன. இதிலிருந்து கடந்த 1400 ஆண்டுகளுக்கும் மேலாக இந்த 7 புண்ணிய நதிகளும்

நமது பாரத நாட்டை ஆன்மீக ரீதியில் பிணைத்து வருகின்றன என்பதை அறியலாம்.

**கும்பமேளாவும் புஷ்கரமும்**

கும்பமேளா என்பது இந்துக்களின் பாரம்பரியமான மரபு. இந்த தேசத்தை ஆன்மிகத்தின் அடிப்படையில் பிணைக்கும் ஓர் வானவியல் கணக்கீடு. வானில் 12 நட்சத்திரத் தொகுப்புகள் நிலை பெற்றுள்ள இடமே ராசி எனப்படுகிறது. வியாழன் ஒரு ராசிக்கு நேராக வர 12 வருடம் ஆகிறது. ஒவ்வொரு 12 வருடத்திற்கு ஒரு முறை இந்த அடிப்படையிலேயே கும்பமேளாவும், புஷ்கரமும் கொண்டாடப்படுகிறது. புஷ்கர விழா இந்தியா முழுவதும் உள்ள 12 புண்ணிய ஆறுகளில் கொண்டாடப்படுகிறது. ஒவ்வொரு ஆறும் ஒவ்வொரு ராசியுடன் தொடர்புடையது

**ஆன்மிகப் பிண்ணனி**

12 ஆண்டுக்கு ஒருமுறை இந்த வரம் பெற்றநதிகள் குருவின் பார்வையில் புதுசக்தி பெறும் வேளையில் நீராடினால் குருவருள் கூடும், குரு அறிவும் தெளிவும் தரும் கிரகம். தெளிந்த அறிவுடன் கூடிய அமைதியான மனதுடனும் ஞானம் அடைந்து இறைவனை உணரவும், இந்நாட்டு மக்களை ஆன்மீக அடிப்படையில் ஒருங்கிணைக்கவும் உள்ள ஏற்பாடே இந்த கும்பமேளா மற்றும் புஷ்கர வைபவங்கள்.

| குரு நிற்கும் ராசி | நதி | புஷ்கரம் | கொண்டாடப்படும் இடங்கள் |
|---|---|---|---|
| **மேஷம்** | கங்கை | கங்கா புஷ்கரம் | காசி, ஹரித்வார், ரிஷிகேஷ் (உத்தரபிரதேசம்) |
| **ரிஷபம்** | நர்மதை | நர்மதா புஷ்கரம் | நர்மதா நதி (மத்தியப் பிரதேசம் |
| **மிதுனம்** | சரஸ்வதி | சரஸ்வதி புஷ்கரம் | குருசேத்திரம் (ஹரியானா), சோம்நாதபுரம் (குஜராத்) |
| **கடகம்** | யமுனை | யமுனா புஷ்கரம் | யமுனோத்ரி, ஹரித்வார், மதுரா, பிரயாகை (உத்தரபிரதேசம்) |
| **சிம்மம்** | கோதாவரி | கோதாவரி புஷ்கரம் | நாசிக் (மகாராஷ்ட்ரா), கோதாவரி (ஆந்திரா) |
| **கன்னி** | கிருஷ்ணா | கிருஷ்ணா புஷ்கரம் | விஜயவாடா (ஆந்திரா) |
| **துலாம்** | காவிரி | காவிரி புஷ்கரம் | தமிழ் நாடு |
| **விருச்சிகம்** | தாமிரபரணி | பீமா மற்றும் தாமிரபரணி புஷ்கரம் | பீமாசங்கரம், பண்டரிபுரம் (மகாராஷ்ட்ரா) தாமிரபரணி (தமிழ்நாடு) |
| **தனுசு** | பிரம்மபுத்ரா | பிரம்மபுத்ரா புஷ்கரம் | பிரம்மபுத்ரா நதி (அஸ்ஸாம்) |
| **மகரம்** | துங்கபத்ரா | துங்கபத்திரா புஷ்கரம் | சிருங்கேரி, மந்த்ராலயம் (கர்னாடகா) |
| **கும்பம்** | சிந்து | சிந்து புஷ்கரம் | சிந்து நதி பாயும் ஜம்மு, காஷ்மீர், பஞ்சாப் |
| **மீனம்** | பிராணஹிதா காதாவரியின் உப நதி) | பிராணஹிதா புஷ்கரம் | காலேஸ்வரம் (தெலுங்கானா) |

12 ஆண்டிற்கொரு முறை அந்தந்த நதிக்கரையில் மேலே குறிப்பிட்டுள்ளபடி நடைபெறும் இந்த புஷ்கர விழாக்களில், நாடு முழுவதும் உள்ள எல்லாப் பகுதி மக்களும் காலம் காலமாகக் கலந்துகொண்டு புனித நீ ராடி, அந்தப் புனித நீரினை தங்கள் பகுதிக்கு எடுத்துச் சென்று கொண்டிருக்கின்றனர்.

**நதிகளை வைத்து திராவிடம் பிரிவினை பேசு கிறது. ஆனால் இந்நாட்டின் ஆன்மீக வாழ்வியல் அதே நதிகளால் இந்த நாடு முழுவதையும் இணைக்கிறது.**

# இரண்டாம் பாரதியின் எழுச்சி கீதங்கள் - பகுதி 6




- ஏழுமலை

**இரண்டாவது பாரதியார்**

"மகாகவி சுப்ரமணிய பாரதியாருக்குப் பிறகு, சுதந்திர பாரதத்திலே தமிழிலே அதிகமான தேசபக்திப் பாடல்களை எழுதிய தேசியக் கவி, இரண்டாவது பாரதி என்று அழைக்கப்படுபவர் இந்து முன்னணி நிறுவனர் வீரத்துறவி இராம.கோபாலன்ஜி அவர்கள்.

**இரவு கழிந்தது இரவி எழுந்தான்**

அவர் எழுதிய பாடல்களிலே இரவு கழிந்தது இரவி எழுந்தான் என்ற பாடல் வரிகளைப் பற்றி கடந்த சில தொடர்களில் பார்த்து வருகிறோம். நமது நாடு சுதந்திரம் அடைந்த காலகட்டத்தில் அவர் எழுதியது இந்தப் பாடல். சுதந்திர பாரதம் எப்படி இருக்க வேண்டும் என்ற தனது அபிலாஷைகளை அந்தப் பாடலில் வரும் ஒவ்வொரு வார்த்தைகளிலும், வரிகளிலும் வெளிப்படுத்தியிருக்கிறார் இராம கோபாலன் ஜி. அந்தப் பாடலில் வரும்

**அனுமனின் பக்தி...**

**மீண்டும் இந்நாட்டில் உலவுதல் காண்பாய்**

என்ற வரிகளை பற்றி இந்தக் கட்டுரையில் ஆய்வோம்.

**அனுமனின் பக்தர் இராம கோபாலன்**

இராம கோபாலன் அவர்களின் இஷ்ட தெய்வம் அனுமார். அவர் தினசரி அனுமனை வழிபடுவார். சென்னை அசோக் நகரில் உள்ள அனுமன் ஆலயம் போல் அவரது ஊக்கத்தால் உருவான அனுமன் ஆலயங்கள் பல. அத்திமர அனுமனுக்கு அவர் தனுஷ்கோடியில் வரலாற்றுச் சிறப்பு மிக்க வழிபாடு நடத்தினார். அப்படிப்பட்ட அனுமனின் பக்தனான இராம கோபாலன் ஜி இந்தப் பாடலில் அனுமனுக்கு பல ஆலயங்கள் நாடெங்கிலும் அமைய வேண்டும் என்று கூறாமல், "அனுமன் மீண்டும் இந்நாட்டில் உலவ வேண்டும்" என்று கூறியுள்ளது கவனிக்கப்பட வேண்டும். அதாவது அனுமனை வழிபடும் கடவுளாக மட்டும் அல்லாமல், அனுமனின் குணாதிசயங்களை ஏற்று வாழும் மனிதர்கள் இந்த நாட்டில் இருக்க வேண்டும் என்பதே அவரது அவா.

**அனுமனின் குணாதிசயங்கள்**

பின்வரும் ஸ்லோகம் அனுமனது குண நலன்களை விவரிக்கிறது.

**புத்திர் பலம் யசோ தைர்யம் நிர்பயத்வம் அரோகதா**
**அஜாட்யம் வாக்படுத்வம் ச ஹனுமத் ஸ்மரணாத் பவேத்**

இதன் பொருள்: அறிவு, வலிமை, புகழ், துணிவு, அச்சமில்லாமை, நோய் இல்லாத வாழ்வு, செயல்படுவதில் ஊக்கம், வாக்கு வன்மை இப்படிப்பட்ட நற்பண்புகளின் வடிவமாக உள்ளவர் அனுமன். அனுமனின் இத்தன்மைகளை நினைவு கூறுபவர்க்கு இப்பண்புகளை அனுமன் அருளுவார் என்பதாகும். இந்த சுலோகத்தில் கூறப்பட்டுள்ள பண்பு நலன்களை விரிவாகக் காண்போம்.

**புத்தி**

எல்லாவற்றிற்கும் முதலில் வேண்டியது "புத்தி", அதாவது அறிவு. புத்தியின் வழிகாட்டுதலில் வாழ்க்கை நடத்துபவன் புத்திமான். அறிவு என்பது வெறுமனே பல தகவல்களைப் படித்து மூளைக்குள் இட்டு நிரப்புவது அல்ல - நல்லது எது, கெட்டது எது என்று பகுத்து அறிந்து, தூய அறிவின் வழிகாட்டுதலின்படி வாழ்க்கை நடத்துபவன் புத்திமான்.

**பலம்**

அறிவுக்கு அடுத்து "பலம்" அதாவது உடல் பலம். பின்வரும் திருமூலர் செய்யுளில்,

**உடம்பார் அழியில் உயிரார் அழிவர்**
**திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவு மாட்டார்**
**உடம்பை வளர்க்கும் உபாய மறிந்தே**
**உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே**

என்கிறார். வலிவு படைத்தவனே வாழ்வுக்குரியவன் என்பது பழமொழி. அறிவுக்கு அடுத்தபடியாக வலிமையான உடல் தேவை. ஒரு மலையையே அனாயாசமாக தூக்க வல்ல வலிமையான உடலுக்கு அனுமன் ஒரு முன் உதாரணம்.

**யசஸ்**

அடுத்ததாகச் சொல்லப்படும் அனுமனின் குணம் யசஸ். யசஸ் என்றால் நல்ல கீர்த்தி அதாவது புகழ். அறிவும், உடல் வலிமையும் உள்ளவனுக்கு அடுத்து தேவைப்படும் குணம் கீர்த்தி. ராவணன், ஹிட்லர் போன்றவர்கள் பலவான்களாக இருந்தாலும் அவர்களுக்கு யசஸ் இல்லாததால் அவர்களைத் திட்டுகிறோம். ஆகையால் புத்தி, பலம் ஆகியவற்றை பயன்படுத்தி ஒருவன் இசைபட வாழ வேண்டும். தன்னுடைய சிறப்புகள் அனைத்தையும் பரநலத்திற்காகவே பயன்படுத்தி நிகரில்லா கீர்த்தி பெற்றவர் அனுமான்.

**தைரியமும் நிர்பயமும்**

சவால்களை எதிர்கொள்ளும் மன நிலை, வீரம், மனோதிடம், துணிவு ஆகியன தைரியம் என்ற பொருளுக்குரிய சொற்கள். தைரியத்துடன்

சேர்த்து "நிர்பயம்'' என்கின்ற அஞ்சாமையும் தனியாகச் சொல்லப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது.

**"அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே**
**உச்சி மீது வான் இடிந்து வீழுகின்ற போதிலும்....**
**இச்சகத்துளோர் எல்லாம் எதிர்த்துநின்ற போதிலும்...**
**அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே''**

என்ற மகாகவி பாரதியாரின் வரிகள் அஞ்சாமைக்கு இலக்கணம் கூறுகின்றன. உலகம் முழுவதும் சேர்ந்து எதிர்த்தாலும் கொண்ட கொள்கையை விடாது கடை பிடிப்பது அச்சமற்ற தன்மை என்கிறார் பாரதியார்.

திருநாவுக்கரசர், "நாமார்க்கும் குடி அல்லோம் நமனை அஞ்சோம்'' என்ற பாடலில் தனது அச்சமின்மையை வெளிப்படுத்துகின்றார். அச்சமற்ற தன்மையால், நாம் பெறுவது "இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை'' என்கிறார் திருநாவுக்கரசர். இத்தகைய தைரியத்திற்கும், அச்சமற்ற தன்மைக்கும் நம் கண் முன்னே உதாரணமாகத் திகழ்பவர் அனுமன்.

**அரோகம்**

அனுமனின் அடுத்த பண்பு அரோகதா. அரோகம் என்றால் நோயற்ற நிலை. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பது பழமொழி. உடல் மற்றும் மனத்தைக் கட்டுப்பாட்டில் வைத்து முறைப்படி வாழ்பவனுக்கே ஆரோக்கியம் என்னும் செல்வம் வாய்க்கப்பெறும்.

**அஜாட்யம்**

"அஜாட்யம்" என்றால் "ஜடமாக இல்லாத தன்மை"என்று அர்த்தம். புத்தி மந்தித்து சோம்பேறியாக மசமசவென்று இருப்பதும், செயல்படாத தன்மையும் ஜடத்தன்மை. சுறுசுறுப்போடும், உத்சாகத்துடனும் இருக்கும் தன்மை அஜாட்யம். எல்லாத் திறன்களும் இருந்தும் செயல்படாத தன்மையால் போர்க்களத்தில் சோர்ந்து இருந்தான் அர்ஜுனன். அர்ஜுனனின் "ஜாட்யம்'' நீங்கிய பின்பே அவனது வீர்யம் புலப்பட்டது. "யாக்குந்தேந்து'' எனத் தொடங்கும் சரஸ்வதி வந்தனத்தில், "நிச்சேஷ ஜாட்யாபஹா, என்று கூறும் முகத்தான், "செயலற்ற தன்மையை'' நீங்குவதே அறிவின் இலக்கணமாகக் கூறப்படுகிறது.

கொஞ்சம்கூடக் களைப்பு, சோம்பலே இல்லாமல் தர்மத்துக்காக எப்போதும் உழைத்தவர் அனுமன். கடலைத் தாண்டிப் போகும்போது சுரஸை, மைனாக மலை, ஸிம்ஹிகை, லங்கிணி என்று விதம் விதமான தடைகள் வரும்போதும் ஒவ்வொரு தடையையும் ஒவ்வோரு விதமாக எதிர் கொள்கிறார். இப்படிப்பட்ட presence of mind, அறிவு பளிச்சென்று விழிப்பு நிலையில் இருக்கும் தன்மையே அஜாட்யம்! கார்யத்திலேயே கண்ணாக, கொஞ்சம் கூட களைப்பு, சலிப்பு என்கின்ற ஜாட்யம் இல்லாத விழிப்புத் தன்மைக்கு அனுமன் முன்னுதாரணம்.

**சொலல் வல்லன்**

"வாக்படுத்வ'' என்ற சிறந்த பேச்சாற்றலுக்கு உதாரணமாக விளங்கக் கூடியவர் அனுமன். "சொல்லின் செல்வர்'' என ஸ்ரீராம பிரானாலேயே பாராட்டப்பட்டவர். "கண்டேன் சீதையை" என்ற இரண்டே வார்த்தைகள் அனுமனின் சொல்லாட்சிக்கு உதாரணங்கள்.சொலல் வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை இகல் வெல்லல் யார்க்கும் அரிதுஎன்ற குறளில் கூறப்பட்டுள்ள சொலல் வல்லன் (வாக்படுத்வ), சோர்விலன் (அஜாட்ய), அஞ்சான் (நிர்பய) ஆகிய அருங்குணங்களின் பிரதிநிதி அனுமன்.

**செயற்கரிய செய்பவர் அனுமன்**

அனுமனின் இன்னொரு சுலோகம்:

**அசாத்ய சாதக ஸ்வாமிந், அசாத்யம் தவகிம்வத!**
**ராம தூத க்ருபாசிந்தோ, மத் கார்யம் சாதய ப்ரபோ**

சாத்தியமே இல்லை, நடக்கவே நடக்காது என்ற கைவிடும் செயல்களையும் சவாலாக எடுத்து செய்து சாத்தியமாக்கிச் செய்து காட்டுபவர் அனுமன் என்று கூறுகிறது.

**மெய் வருத்தம் பாரார், கண் துஞ்சார்,**
**எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்**
**செவ்வி அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்**
**கருமமே கண்ணாயினார்**

என்ற செய்யுள் வரிகள் அனுமனின் இயல்பை அப்படியே பிரதிபலிக்கின்றன. தான் எடுத்த காரியத்தை விட்டு வேறு எதிலும் சிந்தை செலுத்தாது, அதை நிறைவேற்றியே தீரும் திட சித்தம் அனுமனிடம் இருந்து நாம் ஒவ்வொருவரும் படிக்க வேண்டிய நற் பண்பு.

அனுமனின் பண்புகளைத் தனது வாழ்வில் கடைபிடிக்கும் வல்லவர்களாக பாரதவாசிகள் இருக்க வேண்டும் என்பதையே இந்தப் பாடல் வரிகளில் திரு.ராம கோபாலன் ஜி வெளிப்படுத்தி உள்ளார்.

**இந்தப் பாடலின் இசை**
**வடிவத்திற்கு இந்த QRCODE**
**SCAN செய்யவும்.**

# வெளிச்சம் படாத வேர்கள்

## வருணகுலத்தான், புத்தூர் மலப்பன்

யா.சு. கண்ணன்

***1)வருணகுலத்தான் கெம் நாயக்***

*தமிழகத்தின் மறக்கப்பட்ட மாபெரும் கடற்படைத் தளபதியும், காலனித்துவ எதிர்ப்பின் முன்னோடியுமான **வருணகுலத்தான்** வரலாற்றினைப் பார்ப்போம்.*

*இந்திய மண்ணில் ஐரோப்பியர்களின் ஆதிக்கம் வேரூன்றத் தொடங்கிய 17-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், அவர்களைத் துணிச்சலுடன் எதிர்த்து நின்றவர்களில் தஞ்சாவூர் நாயக்கர் அரசின் படைத்தளபதி வருணகுலத்தான் மிக முக்கியமானவர். போர்த்துகீசியர்களின் ஆவணங்களிலேயே "பேரரசின் மிகப்பெரிய எதிரி" என்று வர்ணிக்கப்பட்ட பெருமை இவருக்கு உண்டு.*

***தஞ்சை நாயக்கர் அரசில் வருணகுலத்தான்:***

*கி.பி. 1600 முதல் 1634 வரை தஞ்சாவூரை ஆண்ட ரகுநாத நாயக்கரின் நம்பிக்கைக்குரிய தளபதியாக வருணகுலத்தான் திகழ்ந்தார். இவர் "வருணகுலத்தான்" என்று அழைக்கப் பட்டதற்குக் காரணம், இவர் நெய்தல் நிலத்தைச் சேர்ந்த கடற்படை வீரர்களின் தலைவராக இருந்ததே ஆகும். இவருடைய இயற்பெயர் "கேம் நாயக்" என்று போர்த்துகீசியக் குறிப்புகளில் காணப்படுகிறது. சோழ மண்டலக் கடற்கரையின் பாதுகாப்பும், கடற்படைப் பிரிவும் இவருடைய முழுக் கட்டுப்பாட்டில் இருந்தன.*

***யாழ்ப்பாணத்துடனான பிணைப்பு***

*ஈழத்தின் யாழ்ப்பாணப் பகுதிக்கும் தமிழகத் திற்கும் இடையிலான வரலாற்று உறவில் வருணகுலத்தானின் பங்கு அளப்பரியது. யாழ்ப்பாண மன்னர் **இரண்டாம் சங்கிலி** (சங்கிலி குமாரன்), போர்த்துகீசியர்களின் மத மாற்றக் கொள்கைகளுக்கும் ஆக்கிரமிப்பிற்கும் எதிராகப் போராடினார். அவருக்கு இராணுவ உதவி தேவைப் பட்டபோது, தஞ்சை மன்னர் ரகுநாத நாயக்கர் தனது தளபதி வருணகுலத்தான் தலைமையில் ஒரு பெரும் படையை அனுப்பினார்.*

***போர்த்துகீசிய எதிர்ப்புப் போர்கள் (1616 – 1621)***

*வருணகுலத்தான் ஒருமுறை அல்ல, பலமுறை போர்த்துகீசியர்களை நிலத்திலும் நீரிலும் எதிர்கொண்டார்.*

***1.வண்ணார்பண்ணை யுத்தம் (1619):*** *யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற முற்பட்ட போர்த்துகீசிய தளபதி பிலிப் டி ஒலிவேராவுக்கு எதிராக வருணகுலத்தான் போர் புரிந்தார். போர்த்துகீசியர்களின் நவீன பீரங்கிப் படைகளைத் தனது பாரம்பரியப் போர் முறைகளால் எதிர்கொண்டார். இருப்பினும், போரின் ஒரு கட்டத்தில் சங்கிலி குமாரன் சிறை பிடிக்கப்பட்டார். வருணகுலத்தான் மீண்டும் படை திரட்டுவதற்காகத் தஞ்சாவூர் திரும்பினார்.*

***2. கடற்படைத் தாக்குதல்கள்:*** *வருணகுலத்தான் ஒரு சிறந்த கடற்படை மேதை. இவர் சிறிய மற்றும் வேகமான படகுகளைப் பயன்படுத்தி போர்த்துகீசியர்களின் பெரிய கப்பல்களை நடுக்கடலில் தாக்கி அழித்தார். இதனாலேயே இவரை போர்த்துகீசியர்கள் "**வங்காள விரிகுடாவின் சுறா**" (Shark of the Bay of Bengal) என்று அழைத்தனர்.*

***அச்சுவேலிப் போர் மற்றும் வீரமரணம்:***

*1620-ஆம் ஆண்டின் இறுதியில், வருணகுலத்தான் சுமார் 2,000 வீரர்களுடன் மீண்டும் யாழ்ப்பாணம் சென்று போர்த்துகீசியர்களுக்கு எதிரான கிளர்ச்சியைத் தொடங்கினார். இது வரலாற்றில் நான்காவது புரட்சி என்று அழைக்கப்படுகிறது.*

***1621 பிப்ரவரி** 11 அன்று, யாழ்ப்பாணத்தின் **அச்சுவேலி** என்ற இடத்தில் போர்த்துகீசிய தளபதி அந்தாவோ டா மோட்டா கல்வா என்பவனின் படைகளுக்கும் வருணகுலத்தானின் படைகளுக்கும் இடையே ஒரு தீர்க்கமான போர் நடந்தது. இந்தப் போரில் வருணகுலத்தான் மிகக் கடுமையான காயமுற்றார். இறுதியில், வீரச் சொர்க்கம் அடைந்தார். இவருடன் இணைந்து போரிட்ட பல தமிழ் வீரர்களும் அங்கேயே மடிந்தனர். இவருடைய மரணம் யாழ்ப்பாணத்தில் போர்த்துகீசிய எதிர்ப்புப் போராட் டத்திற்கு ஒரு பெரும் பின்னடைவாக அமைந்தது.*

***வரலாற்று முக்கியத்துவம்***

*வருணகுலத்தான் வெறும் போர் வீரன் மட்டுமல்ல, ஆக்கிரமிப்பாளர்களுக்கு அஞ்சாத ஒரு தேசபக்தர்.*

- ***மதப் பாதுகாப்பு:*** *போர்த்துகீசியர்கள் ஈழத்தில் சைவக் கோயில்களை இடித்தபோதும், மக்களைக் கட்டாய மதமாற்றம் செய்தபோதும், அதைத் தடுத்த நிறுத்த இவர் பெரும் முயற்சி எடுத்தார்.*
- ***தமிழக - ஈழ உறவு:*** *தமிழக வீரர்கள் ஈழத்தின் விடுதலைக்காகத் தங்கள் உயிரைத் தியாகம் செய்ததற்கான வரலாற்றுச் சான்றாக இவர்*

விளங்குகிறார்.

● **மறக்கப்பட்ட வரலாறு:** போர்த்து கீசியர்களின் வரலாற்று ஆசிரியர் ஃபாதர் குயிரோஸ் (Father Queyroz) தனது நூல்களில் வருணகுலத்தானின் வீரத்தைப் பற்றிப் பக்கம்பக்கமாக எழுதியுள்ளார். ஆனால், துரதிர்ஷ்டவசமாக இந்திய மற்றும் தமிழக வரலாற்றுப் பாடப்புத்தகங்களில் இவருக்கு உரிய இடம் கிடைக்கவில்லை.

2026-ஆம் ஆண்டான இவ்வருடத்தோடு வருணகுலத்தான் வீரமரணம் அடைந்து 405 ஆண்டுகள் நிறைவடைகின்றன. கடலிலும் நிலத்திலும் காலனித்துவத்தை எதிர்த்துப் போராடிய இந்த மாவீரனின் வரலாறு, பிற்காலத்து வீரபாண்டிய கட்டபொம்மன் மற்றும் மருது சகோதரர்களுக்கு முன்னோடியாகத் திகழ்கிறது. கடலரசன் வருணகுலத்தானின் வீரமும், தியாகமும் தமிழர்களின் வரலாற்றில் என்றும் நிலைத்திருக்கும்.

**2. புத்தூர் மலப்பன்:**

**புத்தூர் மலப்பன் 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனிக்கு எதிராக நடைபெற்ற தென்னிந்தியப் புரட்சியில் (1800-1801) மிக முக்கியமான பங்காற்றிய ஒரு வீரர் ஆவார்.** மருது பாண்டியர்கள் வெளியிட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க **ஜம்புத்தீவு பிரகடனம் (1801)** ஏற்படுத்திய எழுச்சியின் காரணமாக, வட தமிழகத்தில் மலப்பன் போன்ற தலைவர்கள் ஒன்று திரண்டு ஆங்கிலேயர்களை எதிர்க்க வலுவான அடித்தளம் அமைத்தனர்.

● **பங்கு மற்றும் தலைமை:** 1801-ஆம் ஆண்டு வாக்கில் தென்னிந்தியப் புரட்சி வட தமிழக மாவட்டங்களுக்கும் பரவியது. அப்போது மருது பாண்டியர்களுடன் இணைந்து வட மாவட்டப் பகுதிகளில் (**Northern Provinces**) புரட்சிப் படைகளுக்கு மலப்பன் தலைமை தாங்கினார்.

● **தென்னிந்தியக் கூட்டமைப்பு:** மருது பாண்டியர்கள், திண்டுக்கல் கோபால நாயக்கர், மலபார் கேரள வர்மா மற்றும் மைசூர் கிருஷ்ணப்ப நாயக்கர் ஆகியோரை உள்ளடக்கிய ஒரு மாபெரும் கூட்டணியில் மலப்பனும் ஒரு முக்கிய அங்கமாக இருந்தார்.

● **முக்கியப் போராட்டம்:** 1801 மே மாதத்தில் பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிரான கிளர்ச்சி உச்சகட்டத்தில் இருந்தபோது, வட தமிழகப் பகுதிகளில் மருது பாண்டியர்களுடன் இணைந்து இவர் மிகத் தீவிரமான தலைமைப் போராட்டத்தை முன்னெடுத்தார்.

● **மறைக்கப்பட்ட வரலாறு:** 1801-ஆம் ஆண்டு மருது பாண்டியர்கள் மற்றும் ஊமைத்துரை போன்ற தலைவர்கள் கைது செய்யப்பட்டு தூக்கிலிடப்பட்டபோது, அந்த மாபெரும் கிளர்ச்சியில் பங்கேற்ற பல வீரர்கள் வரலாற்றில் அதிகம் பதிவு செய்யப்படவில்லை. அதில் ஒருவராக புத்தூர் மலப்பன் விளங்குகிறார்.

## தமிழகத்தில் பாளையக்காரர் முறை மற்றும் ஜமீன்தாரி முறை குறித்த தகவல்கள்:

*பாளையக்காரர் முறை (1529 - 1801)*

●**அறிமுகம்:** மதுரையை ஆண்ட விஸ்வநாத நாயக்கர், தனது அமைச்சர் அரியநாத முதலியாரின் ஆலோசனையின்படி, 1529-ஆம் ஆண்டில் பாளையக்காரர் முறையை அறிமுகப்படுத்தினார்.

●**தோற்றம்:** இம்முறை ஆந்திராவில் காகதீய வம்சத்தினர் பின்பற்றிய முறையை அடிப்படையாகக் கொண்டது.

●**நிர்வாகம்:** மதுரை மண்டலம் 72 பாளையங்களாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொன்றும் ஒரு பாளையக்காரரின் கட்டுப்பாட்டில் இருந்தது.

●**கடமைகள்:** பாளையக்காரர்கள் நாயக்கர்களுக்குத் தேவைப்படும்போது ராணுவ உதவி செய்வதுடன், நிலவரியை வசூலித்து அதில் மூன்றில் ஒரு பகுதியை நாயக்கர்களுக்கு வழங்கினர்.

ஜமீன்தாரி முறையால் மாற்றப்பட்ட காலம் (1801 - 1802)

●**நீக்கம்:** 1799 மற்றும் 1801-ஆம் ஆண்டுகளில் நடந்த பாளையக்காரர் கிளர்ச்சிகளுக்குப் பிறகு, ஜூலை 31, 1801 அன்று கையெழுத்தான கர்நாடக உடன்படிக்கையின்படி, ஆங்கிலேயர்கள் தமிழகத்தின் நேரடி நிர்வாகப் பொறுப்பை ஏற்றனர். இதனால் பாளையக்காரர் முறை ஒழிக்கப்பட்டது.

●**ஜமீன்தாரி முறை அறிமுகம்:** 1802-ஆம் ஆண்டு வாக்கில், பாளையக்காரர்களின் ராணுவ அதிகாரங்கள் பறிக்கப்பட்டு, அவர்கள் நிலப்பிரபுக்களாக அல்லது ஜமீன்தார்களாக மாற்றப்பட்டனர்.

**முக்கிய மாற்றம்:** பாளையக்காரர்கள் அனுபவித்த நீதி மற்றும் காவல் அதிகாரங்கள் நீக்கப்பட்டு, அவர்கள் வெறும் வரி வசூலிக்கும் அமைப்புகளாக (நூச்ட்டிணஞீச்ணூண்) மட்டும் செயல்பட அனுமதிக்கப்பட்டனர்.

**இறுதியாக**, 1947 ஏப்ரல் 2 அன்று கொண்டு வரப்பட்ட சட்டத்தின் மூலம் இந்த ஜமீன்தாரி முறையும் முற்றிலுமாக ஒழிக்கப்பட்டது.

மஹான்களின் தரிசனம்

# சிவாம்ச ஸம்பூதர்: ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதேந்த்ரர்

- நிதீஸ்வரன்

"**அப்பய்ய தீக்ஷிதேந்த்ரான் அஸஷ வித்யா குரூன் அஹம் வந்தே**" - என்று பட்டோஜி தீக்ஷிதர் யாரை "ஸகல வித்யைகளுக்கும் குரு" என்று போற்றினாரோ, அந்த மஹான் ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதேந்த்ரரின் திவ்ய சரிதத்தை சிந்திப்பதே மிகப் புண்யத்தை தரும்.

**அவதார ரஹஸ்யம்:**

கயிலாயத்தில் பரமேஸ்வரன் அம்பிகையிடம், "பூவுலகில் வேத மார்க்கத்தையும், சைவத்தையும் நிலைநாட்ட நானே ஒரு தீக்ஷிதனாக அவதரிக்கப் போகிறேன்" என்று மஹா இதிஹாஸமான 'சிவரஹஸ்ய'த்தில் வாக்களித்தபடி, பாரத்வாஜ கோத்ரத்தில், ரங்கராஜாத்வரிக்கு மகனாக, சிதம்பரம் நடராஜருடைய ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதர் அவதரித்தார். இவருடைய இயற்பெயர் விநாயக ஸுப்ரஹ்மண்யன். ஆனால் க்ருஹத்தில் எல்லோரும் ஆசையோடு இவரை அப்பா அப்பய்ய என்றெல்லாம் அழைக்க அதுவே இவருடைய பெயராக ப்ரஸித்தமாகிவிட்டது. "**ஸர்வதந்திர ஸ்வதந்த்ரர்**" என்றும், "**சதுரதிகச தப்ரபந்த-கர்த்தா**" (104 நூல்களை இயற்றியவர்) என்றும் இவர் போற்றப்படுகிறார்.

இன்றும் தீக்ஷிதர் என்றால் அப்பய்ய தீக்ஷிதர் என்றே நினைவிற்கு வரும் அளவிற்கு தீக்ஷிதர் என்றே ப்ரஸித்தி ஏற்பட்டுள்ளது.

பிதாவே இவருக்கு உபநயனம் செய்வித்து இவருக்கு ஸகல வித்யாப்யாஸங்களையும் செய்துவைத்து இவருக்கு காலத்தில் கன்யகாதானமும் செய்துவைத்தார். அதன் பிறகு அக்ன்யாதானம் செய்து ஜ்யோதிஷ்டோம அக்னிஷ்டோமம் வாஜபேயம் முதலான க்ரதுக்களை அனுஷ்டித்து அக்னிஹோத்ரத்தை அனுஷ்டித்து வந்தார்.

இவ்வாறு இருந்து வருகையில் இவர் சின்னபொம்ம பூபாலன் ஸபையில் அமைச்சராக இருந்து சிவ பக்தியை எல்லோரிடமும் வளர்த்து வந்தார். இவ்வாறு இவர் ப்ரஹ்ம ஸூத்ரத்திற்கு ஸ்ரீகண்டர் அருளிய பாஷ்யத்தை விளக்கி **சிவார்க்கமணி தீபிகை** என்ற மஹத்தான க்ரந்தத்தை தீக்ஷிதர் எழுத அதை அறிந்த மன்னன், தீக்ஷிதரைத் தராசுத் தட்டில் அமர்த்தி, அவருக்குச் ஸமமான எடையுள்ள தங்கத்தால் "கனகாபிஷேகம்" செய்து போற்றினான். ஆனால், அந்தப் பொற்குவியலைத் தன் வீட்டுக்கு எடுத்துச் செல்லாமல், அப்போதே "அடையப்பலம்" கிராமத்தில் காலகண்டேஸ்வரர் ஆலயத் திருப்பணிக்காக அர்ப்பணித்தார். இப்படி எப்போதும் வைராக்யத்துடன் இருந்து பரமேஸ்வரனை உபாஸனை செய்து வந்தார்.

**உன்மத்த நிலையிலும் சிவத்யானம்:**

பக்தனுக்கு விழிப்பு நிலையில் பக்தி இருக்கலாம். ஆனால், சித்த ஸ்வாதீனம் இல்லாத போதும் பக்தி இருக்குமா? இதைத் தனக்குத்தானே சோதிக்க விரும்பினார் தீக்ஷிதர். ஊமத்தை ரஸத்தை உட்கொண்டால் புத்தி பேதலிக்கும். அந்த "உன்மத்த" நிலையில், தான் என்ன பேசுகிறோம் என்பதைக் குறித்துக் கொள்ளுமாறு சீடர்களிடம் சொல்லிவிட்டு அதை உட்கொண்டார்.

மயக்கம் தலைக்கேறியது. ஆனால், அந்த நிலையிலும் அவர் வாக்கிலிருந்து வெளிவந்தது "**ஆத்மார்ப்பண ஸ்துதி**" (உன்மத்த பஞ்சாசத்) என்ற உயர்ந்ததான 50 ஸ்லோகங்கள். அதில் உள்ள ஒவ்வொரு ஸ்லோகமும் சிவபக்தி ரஸமாக விளங்குகிறது.

ஹரி-ஹர அபேத தத்துவம்: பரம சிவபக்தரான தீக்ஷிதர், வைஷ்ணவத்வேஷி அல்லர். வேதாந்த தேசிகரின் **யாதவாப்யுதயம்** என்ற காவியத்திற்கு உரை எழுதினார். மேலும் ஹரிஹர அபேத ஸ்தவம் என்ற ஸ்துதியையும் இயற்றினார்.

**சிதம்பரத்தில் நடராஜருடன் ஐக்யம்:**

இவ்வாறு சிவபக்தியுடன் தீர்த்தயாத்ரைகள் பல செய்து கடைசியில் சிதம்பர க்ஷேத்ரத்தில் வசித்து வந்தார். 72-வது வயது முடிந்து 73வது வயதில், பூவுலக வாழ்வை நிறைவு செய்ய சிதம்பரம் திருத்தலத்தை அடைந்தார். "சிதம்பரம் இதம் புரம்" என்று தொடங்கும் ஸ்லோகத்தைச் சொல்லி, இனி எனக்கு வேண்டியது சிவபதம் ஒன்றே என்று வைராக்கியம் பூண்டார்.

சித்ரா பௌர்ணமியன்று விடியற்காலையில் நடராஜப் பெருமானுக்குக் கற்பூர நீராஜனம் நடக்கும் வேளையில், "சித்ஸபேசருடைய பாதத்தாமரை என் மனதிலே உதயமாகிவிட்டது" (**ஆபாதி ஹாடக ஸபா நடபாத பத்ம...**) என்று கூறிக்கொண்டே, அந்த ஜோதியோடு ஜோதியாகக் கலந்தார்.

வேத, ஆகம, சாஸ்த்ரங்களின் ஸாரமாக வாழ்ந்து காட்டிய அந்த மஹானின் திவ்ய சரிதத்தைப் படிப்பதும், கேட்பதும் நம்மைப் பிறவிப் பெருங்கடலிலிருந்து கரையேற்றும். **சிவாய நமஹ. சிவ க்ருபை. சிவார்ப்பணமஸ்து.**

அப்பய்ய தீக்ஷிதர் இயற்றியுள்ள க்ரந்தங்களில்



முக்கியமான சிலவற்றை இங்கு காண்போம்.

அப்பய்ய தீக்ஷிதர் (1520-1593) அத்வைதம், சைவ சித்தாந்தம், மீமாம்சம் மற்றும் அலங்கார சாஸ்திரம் ஆகியவற்றில் 100-க்கும் மேற்பட்ட கிரந்தங்களை எழுதியுள்ளார்.

**முக்கிய கிரந்தங்கள்:**

1. சிவார்க்கமணி தீபிகா - ஸ்ரீகண்ட சிவாச்சாரியாரின் பிரம்மசூத்ர பாஷ்யத்திற்கு எழுதப்பட்ட மிகச்சிறந்த உரை.

2. பரிமளம் - அத்வைத வேதாந்தத்தின் கல்பதருவிற்கு எழுதப்பட்ட விரிவான வியாக்யானம்.

3. சித்தாந்தலேச சங்கிரகம் - அத்வைத வேதாந்தக் கோட்பாடுகளைத் தொகுத்து எழுதப்பட்ட முக்கியமான நூல்.

4. குவலயானந்தம் - அலங்கார சாஸ்திரத்தில் (அணி இலக்கணம்) புகழ்பெற்ற நூல்.

5. துர்கா சந்திரகலா ஸ்துதி - அம்பாள் துதி மற்றும் துர்க்கை சந்திரகலா ஸ்துதி.

**வேதாந்த மற்றும் சைவ படைப்புகள்:**

1. சிவதத்துவ விவேகம் - சைவ சித்தாந்தத்தை வலியுறுத்தும் நூல்.

2. சிகரிணி மாலை - சிவ தத்துவத்தை விளக்கும் மற்றொரு நூல்.

3. நியாய ரக்ஷாமணி - பிரம்ம சூத்திரங்களை அத்வைத நோக்கில் விளக்கும் நூல்.

4. சிவ கர்ணாம்ருதம் - சிவனைப் போற்றும் பக்தி நூல்

5. பிரம்மா தர்க்க ஸ்தவம் - சைவ அத்வைதக் கொள்கையை நிறுவும் நூல்.

**இதர முக்கிய படைப்புகள்:**

1. வரதராஜ ஸ்தவம் - காஞ்சி வரதராஜ பெருமாள் மீது பாடப்பட்ட பக்திப் பாடல்.

2. மார்கபந்து ஸ்தோத்திரம் - சிவனை வேண்டிப் பாடிய புகழ்பெற்ற ஸ்தோத்திரம்.

3. சித்ரமீமாம்ஸா - இலக்கிய அலங்கார சாஸ்திர நூல்.

4. விதிரசாயனம் - மீமாம்ச சாஸ்திரத்தின் விதிமுறைகளை விளக்கும் நூல்.

5. ஆத்மார்பண ஸ்துதி - சிவனை ஆத்ம சமர்ப்பணம் செய்து பாடப்பட்ட பாடல்.

**ஹரிஹர ஸ்துதி:**

சிதம்பரம் எனும் புண்ணிய க்ஷேத்திரத்தில், மூடப்பட்டிருந்த வைணவக் கடவுளான ஸ்ரீ கோவிந்தராஜப் பெருமாளின் ஆலயம், விஜயநகரப் பேரரசின் பிரதிநிதியான ராமராயரின் காலத்தில், தொட்டாச்சார்யார் என்ற வைணவ குருவின் முயற்சியால் மீண்டும் வழிபாட்டிற்காகத் திறக்கப்பட்டது.


சிவன் மற்றும் விஷ்ணுவுக்கு இடையே எவ்வித வேறுபாடும் காணாத ஸ்ரீ அப்பைய தீட்சிதர், இந்த நிகழ்வை முழுமனதுடன் வரவேற்றார். அந்த மகத்தான நிகழ்வின் நினைவாக அவர் 'ஹரிஹர ஸ்துதிசுயை இயற்றினார். இது பத்து ஸ்லோகங்களைக் கொண்டது. இதில் ஒவ்வொரு ஸ்லோகத்திலும் சிவனும் விஷ்ணுவும் மாறி மாறிப் போற்றப்படுகிறார்கள்.

அந்த வகையில் அப்பய்ய தீக்ஷிதரின் படைப்புகள் அத்வைதம் மற்றும் சைவத்திற்கு இடையே உள்ள ஒற்றுமைகளை உணர்த்துவதாகவும், சிவனையும் விஷ்ணுவையும் சமமாகப் போற்றுவதாகவும் அமைந்துள்ளன.

அப்பய்ய தீக்ஷிதர் வேதாந்தத் தலைப்புகளில் 25 படைப்புகள், சிவாத்வைதக் கோட்பாடுகளில் 26 படைப்புகள், மீமாம்சையில் 7 தொகுதிகள், காவ்ய வ்யாக்யானம் மற்றும் வ்யாகரண வ்யாக்யானத்தில் தலா ஒன்று, அலங்கார சாஸ்திரத்தில் 3, பக்தி நெறி சார்ந்த 26 படைப்புகள் மற்றும் இதர வகைகளில் 15 படைப்புகள் என மொத்தம் 104 படைப்புகளை எழுதியுள்ளார்.

**வித்தைகளுக்கு அதிபதியே! ரகஸ்யங்களை அடக்கியிருக்கும் தேவர்களால் என்ன பயன்? புராணங்களால் என்ன பயன்? மனித அறிவினால் ஒன்றுபடுத்த முடியாத முரண்பட்ட கருத்துக்களை உடைய தந்திரங்கள் முதலியவற்றால் என்ன பயன்? அல்லது வீணான வாக்கு வாதத்தை ப்ரதானமாகக் கொண்ட சாஸ்திரங்களால்தான் என்ன பயன்? உன்னிடம் மனத்தைச் செலுத்தியவர்கள் உன் அருளால் மட்டுமே ஞானத்தை அடைகிறார்கள்.**

- ஆத்மார்ப்பண ஸ்துதி, 27



# கொன்றை வேந்தன் கதைகள்

## அப்பா கொடுத்த மரியாதை

கலாவதி

சக்தியும் அவனது தங்கை யாழினியும் படிக்கும் பள்ளியில் தொடர்ந்து நான்கு நாட்கள் விடுமுறை. இருவரும் விளையாடிக் கொண்டிருந்தபோது அவர்களின் அப்பா பக்கத்தில் வந்தார். "சக்தி, யாழினி… ரெண்டு பேருக்கும் பொழுது போகணுமா? வாங்க, நம்ம கடைக்கு போவோம்" என்று அழைத்தார்.

அப்பா கடைக்கு போகும் போதெல்லாம் அவர்கள் கேட்டதையெல்லாம் தருவார். நிறைய பேர் வந்து பேச்சு கொடுப்பார்கள். நேரம் போவதே தெரியாது. அதனால், இருவரும் உற்சாகமாக அப்பாவுடன் கிளம்பினார்கள்.

அது சின்ன மளிகைக்கடைதான். ஆனால், அப்பா ரொம்ப வருஷமாக கடை வைத்திருப்பதால், அப்பகுதியில் ரொம்பவே பிரபலம். இவர்களிடம் பேசவே அப்பாவுக்கு நேரமில்லை. இவர்களும் கடையில் இருந்த பொருட்களை வாடிக்கையாளர்களுக்கு எடுத்துக் கொடுத்து உதவிக் கொண்டிருந்தனர்.

கொஞ்ச நேரம் கழித்து கூட்டம் குறைந்த நேரம், அவர்களின் குமார் சித்தப்பா வந்தார். "அண்ணா, ஒரு ஆயிரம் ரூபாய் கிடைக்குமா?" என்று கெஞ்சினார். அவரைப் பார்த்து சக்தியும் யாழினியும் சிரித்தார்கள். "பணம் என்ன மரத்துலயா காய்க்குது? ஏதாவது வேலைக்குப் போன்னு சொன்னா கேட்க மாட்டியா? பணம் கொடுக்க முடியாது. போ" என்று அப்பா விரட்டினார். இவர்களுக்கு பாவமாக இருந்தது. "அப்பா, சித்தப்பா கொஞ்ச நேரம் எங்க கூட இருக்கட்டுமே?" என்று யாழினி சிணுங்க, "அவனுக்கு வேலை இருக்கும்மா. போயிட்டு வருவான்" என்று தனது தம்பியை துரத்துவதிலேயே அப்பா குறியாக இருந்தார்.

குமார் சித்தப்பா முகத்தை தொங்கப் போட்டுக் கொண்டு சென்றதைப் பார்க்க இருவருக்கும் பாவமாக இருந்தது.

மூன்று பேரும் சில நிமிடங்கள் அரட்டையடிக்க, மீண்டும் வாடிக்கையாளர்கள் வர தொடங்கினர். அடுத்த பத்து நிமிடங்களில் கடை பரபரப்பானது.

கூட்டத்தின் நடுவே, வெள்ளை வேட்டி, கலர் சட்டையுடன் நெற்றியில் சந்தனம் அணிந்த ஒருவர் கடைக்கு வந்தார். கூட்டமிருக்கவே ஓரமாக நின்றார்.

அவரை அப்பா பார்த்ததும்தான் தாமதம். "ஐயா ஒரு அஞ்சு நிமிஷம்" என்று சொல்லிவிட்டு, வாடிக்கையாளர்களுக்கு வேண்டியதைக் கொடுத்து அனுப்பினார் அப்பா.

பரபரப்பு ஓய்ந்ததும் "என்ன பாலா, வியாபாரமெல்லாம் எப்படி இருக்கு?" என்று விசாரித்தார். நலன் விசாரித்த பிறகு, "ஐயா, எதுக்கு வந்திருக்கீங்க?" என்று அப்பா கேட்டார்.

"ஒண்ணுமில்லப்பா, ஒரு பையனை படிக்க வைக்கணும். அம்பதாயிரம் ரூபா செலவாகுது. 45 புரட்டிட்டேன். உன்னால முடிஞ்ச ஆயிரம், ரெண்டாயிரம் போதும்" என்றார் வந்தவர்.

"அதுக்கென்னய்யா, இந்தாங்க அஞ்சாயிரம் நானே தரேன்" என்று அப்பா நீட்ட, அவர் புறப்பட்டு சென்றார்.

இப்போது சக்தியும் யாழினியும் குழப்பதோடு பார்த்தார்கள். "மத்த எல்லோருக்கும் உதவுவாங்க, சொந்தகாரங்களுக்கு உதவ மாட்டாங்கன்னு சொல்றது உண்மைதான்போல" என்று சக்தி சொல்லியே விட்டான்.

அப்பா சிரித்தார். "உங்க குமார் சித்தப்பா வெறும் செலவுக்குத்தான் கேட்பான். அதுவும் வெட்டியா கரைப்பான். ஆனால், இவர் மத்தவங்ககிட்ட பிச்சையெடுத்து வசதி இல்லாதவங்கள படிக்க வைக்கிறார். நானும் சின்ன வயசுல இப்படி மத்தவங்க கொடுத்ததுல படிச்சவன் தான்" என்றார் நிதானமாக.

சக்திக்கும், யாழினியும் நன்றாகவே புரிந்தது.

***ஐயன் புகினும் செய்வன செய்!***



# நல்ல தொண்டில் நல்ல உள்ளம் முப்பெரும் இயக்கங்கள் - முத்தான விழா

**ஆல் போல் வளர்ந்து அருகு போல் வேரோடி**

வேத விஞ்ஞான ஆராய்ச்சி மையம், அனன்யா பவுண்டேஷன் மற்றும் சிருங்கேரி மடம் தி நகர் இணைந்து சென்னையில் கல்விப்பணி, கணிப்பொறி, பெண்கள் திறன் மேம்பாடு, மருத்துவப் பணி, பேரிடர் மேலாண்மை போன்ற பல நலப்பணிகளைத் தொடர்ந்து செயலாற்றி வருகின்றன. 24 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு இடத்தில் மாலை நேர வகுப்பாக சிறிய அளவில் தொடங்கப்பட்ட இந்தப் பணி ஒவ்வொரு ஆண்டாக வளர்ந்து இன்று பல்வேறு துறைகளில் பரிணமித்து வருகிறது.

**கல்விப் பணி:**

தினசரி 2 மணி நேரம் (மாலை 6மணி முதல் 8 மணி வரை) நடைபெறும் இலவச மாலை நேர வகுப்புகளில் சுமார் 350 மாணவ மாணவிகள் கலந்து கொண்டு பயன் பெற்று வருகிறார்கள். தற்போது சென்னையில் 20 இடங்களில் மாலை நேர வகுப்புகள் உள்ளன. துறை வாரியான ஆசிரியர்கள் மூலமாக 10,11,12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கான சிறப்பு மாலை நேர வகுப்புகளும், காலை நேரத்தில் குழந்தைகளுக்கான ஹிந்தி பயிற்சி வகுப்புகளும் நடத்தப்பட்டு வருகின்றன. இந்தப் பயனாளிகளில் பலர் அரசுப்பள்ளி மாணவர்கள் மற்றும் முறை சாராத் தொழிலாளர்களின் குழந்தைகள் என்பது கவனிக்கத்தக்கது.

**பண்பாட்டுக் கல்வி:**

ஒவ்வொரு டியூசன் மையத்திலும் வாரத்தில் 5 நாட்கள் பள்ளிக்கூடக் கல்வியும், வாரம் ஒரு நாள் பண்பாட்டுக் கல்வியும் சொல்லித் தரப்படுகிறது.

பண்பாட்டுக் கல்வி வகுப்புகளில் சமய வகுப்பு, புராணக் கதைகள், தேசபக்தர்களின் வரலாறு, இராமாயணம், மகாபாரதம், ஸ்லோகங்கள், பஜனைப் பாடல்கள், தேவாரம், திருப்புகழ், வினா விடை, வினாயகர் அகவல், சகல கலாவல்லி மாலை, பகவத் கீதை, மற்றும் கீதை ஸ்லோகங்களின் பொருள் ஆகியன கற்றுத் தரப்படுகின்றன. வெள்ளிமலை ஹிந்து தர்ம வித்யா பீடத்தின் வாராந்திர சமய வகுப்புகளின் பாடத்திட்டத்தின் அடிப்படையில் இந்த பண்பாட்டு வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. வெள்ளிமலை ஹிந்து தர்ம வித்யா பீடத்தில் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் இந்த சமய வகுப்புகளை திறம்பட நடத்தி வருகின்றனர்.

வருடந்தோறும் பகவத் கீதை, விநாயகர் அகவல் ஒப்புவிக்கும் போட்டியும், போட்டியில் வென்ற மாணவர்களுக்கு ஊக்கப் பரிசுகளும் வழங்கப்படுகின்றன.

**கணிப்பொறி பயிற்சி:**

அன்னை சத்யா நகர், மேட்டுக்குப்பம் ஆகிய இரு இடங்களிலும் நடைபெறும் இலவச கணிப்பொறி பயிற்சி மையத்தில், MSOffice, Python, AutoCad, UI/UX, Power BI, MySQL, Website Development, Digital Marketing, English and Tamil Typing, Computer Fundamentals மற்றும் மத்திய அரசின் தகவல் தொழில் நுட்பத்துறை நடத்தும் ACC, CCC போன்ற பல்வேறு கணிப்பொறி பயிற்சிகளில் சுமார் 500க்கும் மேற்பட்டோர் நிறைவு செய்துள்ளனர். பயிற்சி பெற்றவர்களில் 80க்கும் அதிகமானோருக்கு கணிப்பொறிச் சார்ந்த துறைகளில் வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது. கணிப்பொறியை முதன் முறையாகக் கையாளக்கூடிய, ஆங்கிலம் தெரியாத பல குடும்பப் பெண்களும் இதில் கணிசமான எண்ணிக்கையில் தேர்ச்சி பெற்று வருவது கூடுதல் சிறப்பு.

**பெண்கள் திறன் மேம்பாடு:**

பெண்கள் திறன் மேம்பாட்டிற்காகக் கணிப்பொறி பயிற்சியுடன், தையல் பயிற்சி, அச்ணூடி நிணிணூடு Training, சுய உதவிக்குழு ஆகிய திட்டங்களும் செயல்படுத்தப்படுகின்றன.

அன்னை சத்யா நகர் பகுதியில் காலை மற்றும் மாலை நேரங்களில் நடைபெறும் இலவச தையல் பயிற்சி மையத்தில் 40 பேர் பயிற்சி பெற்று வருகின்றனர். அதே தையல் பயிற்சி மையத்தில் மதிய வேளையில் ஆரி வொர்க் பயிற்சி நடைபெறுகிறது. மேலும் அன்னை சத்யா நகர் பகுதியில் "குந்தவை மகளிர் சுய உதவிக் குழு", வாராந்திர கூட்டு வழிபாடு, கந்தர் சஷ்டி பாராயணம், திருவிளக்கு பூஜை போன்ற நிகழ்வுகளும் நடந்து வருகின்றன.

மகளிர் திறன் மற்றும் ஆற்றல் மேம்படுத்தல் (women empowerment) மட்டுமன்றி, ஆன்மீக கலாச்சார பயிற்சிகளாலும் ஒருங்கிணைந்த மகளிர் மேம்பாட்டில் கவனம் தரப்படுகிறது.

**ஸ்ரீஸ்வயம்**

கணிப்பொறி மையத்தில் சொல்லித் தரப்படும் பயிற்சிகளில் திறம்பட தேர்ச்சி பெற்ற சில யுவதிகளின் சுயதொழில் முனைப்பே ஸ்ரீஸ்வயம் என்ற புது அமைப்பாக உருவாகியுள்ளது. ஸ்ரீஸ்வயம் பெண்கள் தற்போது பத்திரிக்கை / புத்தக வடிவமைப்பு, இணைய தள வடிவமைப்பு, சிறு குறு நிறுவனங்களின் மென் பொருள் தயாரிப்பு, இணைய தளத்தை தேடும் பொறிக்கு உகந்ததாக்குதல்

(SEO), டிஜிட்டல் மார்க்கெட்டிங், ஆட்டோகேட் வரைகலைப் பணிகள், கணிப்பொறி வரைகலை வடிவமைப்பு (Graphic Design) ஆகிய துறைகளில் சிறு சிறு பணிகளைச் சந்தையில் இருந்து பெற்று செய்ய ஆரம்பித்துள்ளனர்.

**மருத்துவப் பணியும் பேரிடர் மேலாண்மையும்**

மாலை நேர வகுப்பு நடைபெறும் பகுதிகளில் இலவச பல் சிகிச்சை மற்றும் பல் நோய்கள் கண்டறியும் முகாம் நடைபெறுகிறது. SRM Dental College மருத்துவக் கல்லூரியின் நகரும் பல் மருத்துவச் சிகிச்சை ஊர்தி அந்தப் பகுதிகளுக்குச் செல்லும். பல் நோய்களைக் கண்டறிந்து அடிப்படை சிகிச்சைகள் மருத்துவர்களால் அதே இடத்தில் மருத்துவ ஊர்தியிலேயே தரப்படுகின்றன. மேல் சிகிச்சை பெற வேண்டிய நோயாளிகள் கண்டறியப்பட்டு, அவர்களுக்கான சிகிச்சை SRM பல் மருத்துவக் கல்லூரியில் இலவசமாகத் தரப்படுகின்றன.

சென்னையில் கொரோனா பெருந்தொற்று காலத்திலும், புயல் மழை வெள்ளத்தால் தாழ்வான பகுதிகள் பாதிக்கப்பட்டபோதும் நிவாரண உதவிகள் தரப்பட்டன.

**சிறப்புப் பயிற்சிகள்**

- 10வது, 12வது வகுப்பு மாணவர்களுக்கு தேர்வுக்கு முன்னர் தேர்வுகளை அச்சமின்றி எதிர்கொள்ளுதல், மன ஒருமைப்பாடு, நினைவு ஆற்றலை அதிகரித்தல் (removing exam fear, concentration and focusing, memory retention techniques) ஆகியவற்றில் உளவியல் வல்லுநர் மூலம் பயிற்சி அளிக்கப்படுகிறது.
- 12வது வகுப்பு முடித்த மாணவர்களுக்கு மேற்படிப்பிற்கான வழிகாட்டுதல் துறை வல்லுநர்களால் வழங்கப்படுகிறது.
- கல்லூரி இறுதி ஆண்டு மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு திறன் வளர்ச்சி (career guidance and skill development) யில் தகவல் தொழில் நுட்பத்துறை மேலாளர்களின் வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன.
- TNPSC போன்ற போட்டித் தேர்வுகளை எதிர்கொள்ள தேர்ந்தெடுக்கப்பட மாணவர்களுக்கு சி றப்பு வகுப்புகள் நடத்தப்பட்டு உள்ளன.
- மொபைல் போன் மூலம் வரும் ஆபத்துக்கள், மொபைல் போன்களை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்த ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.
- அமிர்த வித்யாலயா பள்ளி மாணவர்களுக்கு சென்னை IIT யில் Indian Contribution to Science & Technology என்ற தலைப்பில் அறிவியல் கண்காட்சி நடத்த பயிற்சி அளிக்கப்பட்டது
- பள்ளி இடைநின்ற சில மாணவர்கள் கண்டறியப்பட்டு, உளவியல் ஆலோசனை, பெற்றோர்க்கு பரிந்துரைகள் மற்றும் பள்ளி ஆசிரியரின் ஒத்திசைவு மூலமாக மீண்டும் பள்ளிப் படிப்பைத் தொடர முயற்சி செய்யப்பட்டுள்ளது.
- புதிய முயற்சியாக, ஆங்கில பேச்சுப் பயிற்சி, தட்டச்சுப் பயிலகம் ஆகியவை பரீட்சார்த்தமாகத் தொடங்கப்பட்டுள்ளன.

**ஆண்டுதோறும் சமய நிகழ்வுகள்**

- கண்ணன் அவதரித்த நன்னாளில், அன்னை சத்யா நகர் பகுதியில் நடக்கும் உரியடி விழாவில் அத்தனை வீடுகளில் இருந்தும் ஆண் பெண் என அனைவரும் ஆர்வத்துடன் கலந்துகொள்ளும்போது அந்த ஊரே செம VIBE ல் இருக்கும்.
- நவராத்திரி நன்னாளில் சத்யா நகரில் பெண்களை வைத்து நவராத்ரி பூஜை நடத்தப்படுகிறது.

**வருங்காலத் திட்டங்கள்**

- இளைஞர் மன்றம் அமைத்து, சிலம்பம் போன்ற நாட்டுப்புறத் தற்காப்பு கலைகளை ஊக்குவித்து, இளைஞர்களை ஆக்கபூர்வமான செயல் திட்டங்களில் ஈடுபடுத்துதல்
- இலவச கண் மருத்துவ முகாம்கள் மூலம் வயோதிகர்களுக்கு இலவச கண் சிகிச்சை மற்றும் கண்ணாடி வழங்குதல்
- போதைப் பொருட்கள் மற்றும் குடிப்பழக்கத்துக்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
- திருவள்ளுவர் அவதரித்த வைகாசி அனுட நாளில் திருக்குறள் வாழ்வியல் கண்காட்சி மேதகு ஆளுநர் முன்னிலையில் நடைபெற்றது. தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு இதில் பயிற்சி அளித்து, அந்தந்தப் பள்ளிகளில் திருவள்ளுவர் வாழ்வியல் கண்காட்சி நடத்திட ஏற்பாடு செய்தல்

**கிராமத் தொலைவிலும்**

சென்னையில் முப்பெரும் இயக்கங்கள் இணைந்து ஆற்றி வரும் இது போன்ற அரும்பணிகளால் நிகழும் ஆக்கப் பூர்வமான சமுதாய மாற்றங்களைக் கண்டு ஊக்கம் பெற்ற சிலர், இதையே முன் மாதிரியாகக் கொண்டு அவரவர் பகுதிகளில் இதே போல ஆரம்பிக்க முயற்சி எடுத்து வருகின்றனர். மெள்ள சென்னை நகரின் எல்லைகளைத் தாண்டி இந்தப் பணிகள் விரிவடையும் காலம் மலர்ந்து வருகின்றது.

**ஆண்டு விழா**

தொண்டுப்பணிகளைச் செவ்வனே ஆற்றி வரும் தன்னார்வலர்கள், பயனாளிகள், ஆதரவாளர்கள் அனைவரும் கலந்துகொள்ளும் ஆண்டு விழா இந்த முறை 25-01-2026 மாலை 4:25 மணி முதல் இரவு 8:30 மணி வரை சென்னை தியாகராய நகர் ராமகிருஷ்ணா பள்ளி வளாகத்தில் உள்ள இன்ஃபோசிஸ் அரங்கில் கோலாகலமாக நடைபெற்றது. ஸ்ருதி கேந்திரா நிறுவனர் ஸ்வாமி மோக்ஷ வித்யானந்தா மற்றும் மனித வள மேம்பாட்டு ஆலோசகர் திருமதி ப்ரவீணா

ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

**கலை நிகழ்ச்சிகள்**

கணிப்பொறி மையம் மற்றும் ஒவ்வொரு மாலை நேர வகுப்பிற்கு ஒரு கலை நிகழ்ச்சி என மொத்தம் 19 விதமான கலை நிகழ்ச்சிகள் இந்த ஆண்டு விழாவில் இடம்பெற்றன. பரத நாட்டியம், கோலாட்டம், சைகை நடிப்பு (மைம்), ஐயப்பன் பஜனை, நடனம், நாடகம், நாட்டிய நாடகம், வில்லுப்பாட்டு, பொம்மலாட்டம் ஆகிய வெவ்வேறு பகுதிகளாக கலை நிகழ்ச்சிகள் அமைந்திருந்தன. சில டியூஷன் மையங்களில் ஆதி முதல் அந்தம் வரை அனைத்தையும் அவர்களே அமைத்து, இயக்கி செயல்படுத்தினர். சில டியூஷன் செண்டர்களுக்குக் கலை நிகழ்ச்சிகளுக்கான கருப்பொருள் மட்டும் வழங்கப்பட்டது.

கலை நிகழ்ச்சி வடிவமைப்பு, இயக்கம், கலை நிகழ்ச்சிகளுக்கானப் பின்னணிப் பாடல் தேர்வு, LED திரைகளில் அந்தந்த கலை நிகழ்ச்சி நடக்கும்போது இயக்க வேண்டிய பின்னணி படம் / வீடியோ தேர்வு செய்தல், நாட்டிய நிகழ்ச்சிக்கான உடலியக்க முறைகளை வகுத்து ஒழுங்கமைத்தல், நடன அமைப்பு ஆடற்காட்சி அமைத்தல் பொருத்தமான ஆடை தேர்வு என கலை நிகழ்ச்சிகளின் அனைத்து நிலைகளிலும் தாங்களாகவே சுய முனைப்புடன் ஈடுபட்டு மாணவர்களும் ஆசிரியர்களும் தங்களது படைப்பாற்றலை வெளிப்படுத்தினர்.

இந்த டியூஷன் மையங்களில் பல இத்தகைய கலைப் பயிற்சிகளைச் செய்து பார்க்கக் கூடிய அளவு போதுமான இட வசதி அற்றவை. ஒவ்வொரு மையத்திற்கும் வரக்கூடிய மாணவர்கள் ஒரே பள்ளியில் இருந்து வருவதில்லை. அவர்கள் பல பள்ளிகளில் இருந்து பல்வேறு விதமான பின்னணி உள்ள மாணவர்களாக வருகிறார்கள். அரசுப் பள்ளிகளில் படிக்கும் பல மாணவர்கள் பலர் இப்போதுதான் இது போன்ற மேடைகளில் முதல் தரம் அரங்கேறுகின்றனர். இத்தனை சவால்களையும் தாண்டி, தரமான நிகழ்ச்சிகளை அனைவரது கைத்தட்டலுடன் நிகழ்த்திக் காட்டிய அத்தனை ஆசிரியப் பெருமக்களின் முனைப்பும் பாராட்டுதற்குரியது.

**நடன நிகழ்வுகள்**

பதிவு செய்யப்பட்ட பாடல்களை இசைத்து, அதற்கேற்றபடி பரத நாட்டியம், கோலாட்டம் மற்றும் இதர நாட்டிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன. 10வது, 12வது சிறப்பு டியூஷன் மையத்தின் மாணவிகளின் “ஜெகத் ஜால பாலம்” என்ற ஹரி ஸ்தோத்ரத்திற்கான பரத நாட்டியத்துடன் கலை நிகழ்ச்சிகள் இனிதே துவங்கின. கங்கையம்மன் கோவில் மாணவ மாணவிகளின் “பட்டு மலை ஆண்டவனே” என்ற பாடலுக்கான கோலாட்டம், “கும்மியடி கும்மியடி குலவையிட்டு கும்மியடி” என்ற பாடலில் அண்ணா வீதியைச் சார்ந்த சின்னஞ்சிறு குழந்தைகளின் பிஞ்சு நடனம், பம்பா கணபதி என்ற ஐயப்பன் பாடலையும், நமசிவாய என்ற பாடலையும் ஒன்றாக இணைத்து புதுமையான நடனம் ஆடிய சூலைப்பள்ளம் மாணவர்கள், நமோ நமோ நமசிவாய என்ற பக்திப்பாடல் நடனத்துடன் பாரதி நகர் மாணவிகள், வேப்பிலை.. வேப்பிலை.. என்ற கிராமிய பாட்டிற்கு அட்டகாசமான நடனம் புரிந்த தங்கவேல் நகர் மாணவக் கண்மணிகள், “அஷ்டகாளி” என்ற பாட்டின் மூலம் எட்டு விதமான காளிகளை கண் முன் நிறுத்தி தர்மம் என்றும் வெல்லும் என்று அசத்திய ஆத்துக்கோவில் மாணவ மாணவிகள் - இப்படி வகை வகையான நடனங்கள் ஒன்றிற்கொன்று போட்டியாக அரங்கு கரவொலிகளால் ஆர்ப்பரித்தது. விநாயகர் ஞானப்பழம் பெற்ற புராணச் சம்பத்தை நாட்டிய நாடகமாக சிவா விஷ்ணு கோவில் மையம் சிறப்புறச் செய்தனர். அந்த டியூஷன் மையத்தில் 9ஆம் வகுப்பு படிக்கும் மாணவியே இந்த நாட்டிய நாடகத்தைத் தயாரித்து, இயக்கி, பயிற்சி கொடுத்து அவரும் அதில் நடித்திருந்தது சிறப்பு.

**சைகை நடிப்பு (மைம்)**

மற்ற கம்யூட்டர் மையத்தில் பண வசதி இல்லாததால் கல்வி மறுக்கப்பட்ட ஒரு பெண் அனன்யா கணிப்பொறி மையத்திற்கு வந்து எப்படி தரமான கல்வி பெறுகிறார் என்ற நாடகத்தை மவுனமாக நடித்துக் காட்டினர் கணிப்பொறி மாணவிகள். பஹல்காம் தாக்குதல், ஆபரேஷன் சிந்தூர் ஆகிய ராணுவக்காட்சிகளை அற்புதமான பின்னணிப் படங்கள், இசை ஆகியவற்றுடன் மவுனமாக நடித்து அபாரமாகத் திறமையை வெளிப்படுத்தினர் கன்னியம்மன் கோவில் மாணவ மாணவிகள்.

**நாடகங்கள்**

ஜெய் ஹிந்த் செண்பகராமன் (எம்ஜிஆர் நகர் முருகன் கோவில்), நசிகேதன் (சின்மயா நகர்), வீர வேலு நாச்சியார் (காமாட்சியம்மன் கோவில் மற்றும் சத்யமூர்த்தி பிளாக்) ஆகிய நாடகங்கள் சிறப்புற நடைபெற்றன. கல்வி சிறந்த தமிழ்நாடு என்ற நாடகத்தின் மூலம் (10வது 12வது சிறப்பு டியூஷன் மையம்) மெக்காலே கல்வித்திட்டம் வரும் முன்பு நமது பாரத நாடு எப்படி கல்வியில் சிறந்திருந்தது என்பதை அருமையாக விளக்கினர்.

**ஐயப்பன் பஜனை**

கன்னிசாமியின் ஐயப்ப விரதத்தை தத்ரூபமாக அரங்கிலே நிகழ்த்தினர் ஐயப்பன் கோவில் மாணவர்கள். இந்த நிகழ்வுக்காக 2 வார காலம் தினசரி விரதம் இருந்து அதை நிகழ்த்தியது அவர்களது உணர்வுபூர்வமான பக்தியை வெளிப்படுத்தியது.

**வில்லுப்பாட்டு**

திருப்பரங்குன்றத்தின் வரலாறு, தீபத்தூண் போராட்டம் ஆகியவற்றை வில்லிசையாகப் பாடினர்

"அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"
-மகாகவி சுப்ரமணிய பாரதியார்

அன்னை சத்யா நகர் மாணவிகள்.

**பொம்மலாட்டம்**

மறைந்து கொண்டிருக்கிற பண்டைய கிராமியக் கலையான பொம்மலாட்டத்தை பிரகலாதன் கதையாக நமக்குஅளித்தனர்வேம்புலிஅம்மன்கோவில்மாணவச் செல்வங்கள்.

**விருதுகளும் பரிசுகளும்**

ஒவ்வொரு ஆண்டிலும் சிறந்த கல்வித்தேர்ச்சி, சமய வகுப்பில் தேர்ச்சி மற்றும் ஒட்டுமொத்த முன்னேற்றம் ஆகியவை கணிக்கப்பட்டு அந்தந்த ஆண்டிற்கான விருதுகள் வழங்கப்படுகின்றன.

இந்த ஆண்டிற்கான விருதுகள், கலை நிகழ்ச்சியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசுகள் மற்றும் கீதா ஜெயந்தி அன்று பகவத் கீதை ஒப்புவிக்கும் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசுகள் ஆகியன சிறப்பு விருந்தினர்களாலும், நடுவர் திருமதி ஹரிகதா சிந்து அவர்களாலும், அனன்யா ஃபவுண்டேஷன் அறங்காவலர் திரு.பாபு அவர்களாலும் வழங்கப்பட்டன. அனைத்து டியூஷன் மைய ஆசிரியர்களும், கணிப்பொறி ஆசிரியர்களும், மக்கள் தொடர்பு பணிகளைச் செய்து வரும் திருமதி.பார்வதி, திருமதி வேலம்மாள் அவர்களும் விழா மேடையில் சிறப்பு விருந்தினர்களால் கௌரவிக்கப்பட்டனர்.

**ஒரு பொன்மாலைப் பொழுது:**

பள்ளிக் கல்வியுடன் ஹிந்து சமயக் கல்வியையும், தேசியத்தையும் ஆர்வமுடன் கற்கும் இளைய தலைமுறையினர், இதை முனைப்புடன் செயல்படுத்தும் டியூஷன் மைய ஆசிரியர்கள் மற்றும் சமய வகுப்பு ஆசிரியர்களின் அர்ப்பணிப்பை பறைச ாற்றும் ஒரு பொன்மாலைப் பொழுதாக ஆண்டு விழா அமைந்திருந்தது.

**இந்த ஆண்டிற்கான விருதுகள்:**

| | |
|---|---|
| கல்வித் தேர்ச்சி சாதனை 2025-2026: **ஸ்ரீ சாரதா விருது** | மேட்டுக்குப்பம் |
| சிறந்த சமய வகுப்பு 2025-2026 **ஆதி சங்கரர் விருது** | சிவா விஷ்ணு கோவில் |
| சிறந்த மாலை நேர வகுப்பு 2025-2026 **திருவள்ளுவர் விருது** | அன்னை சத்யா நகர் |
| சிறந்த பாடல் நிகழ்ச்சி 2025 - 2026 **கலைமகள் விருது** | ஐயப்பன் கோவில் (ஐயப்பன் பஜனை) |
| சிறந்த நடன நிகழ்ச்சி 2025 - 2026 **நடராஜர் விருது** | ஆத்துக்கோவில் (அஷ்ட காளி நடனம்) |
| சிறந்த நாடக நிகழ்ச்சி 2025 - 2026 **காளிதாசன் விருது** | காமாட்சி கோவில் - SM பிளாக் (வீர மங்கை வேலு நாச்சியார்) |
| சைகை நாடக நிகழ்ச்சி 2025 - 2026 **நாரதர் விருது** | கன்னியம்மன் கோவில் (ஆப்ரேஷன் சிந்தூர்) |
| வில்லுப்பாட்டு நிகழ்ச்சி 2025 -2026 **தோவாளை சுந்தரம்பிள்ளை விருது** | அன்னை சத்யா நகர் (திருப்பரங்குன்றம்) |
| பொம்மலாட்டம் நிகழ்ச்சி 2025 - 2026 **இளங்கோவடிகள் விருது** | ஆதிவேம்புலி அம்மன் கோவில் (பிரகலாதன்) |
| கலைவிழா சிறப்பு விருது 2025 - 2026 **ஆண்டாள் விருது** | 1.சிறப்பு பயிற்சி வகுப்பு (10,11,12) (மெக்காலே கல்வி நாடகம்) - 2.கணிப்பொறி மையம் (சைகை நடிப்பு) |
| சிறந்த கிராமிய நிகழ்ச்சி 2025 - 2026 **வள்ளி விருது** | கங்கை அம்மன் கோவில் தெரு, விருகம்பாக்கம் |
| சிறந்த நாட்டிய நாடக நிகழ்ச்சி 2025 - 2026 **பரத முனி விருது** | சிவா விஷ்ணு கோவில் |

Printed by Published by Padmapriya L on behalf of Padmapriya L, Published at 77/6, 10th Avenue, Ashok Nagar, Chennai - 600 083 Printed at Chennai Offset Printers, No. 19/1 & 21/2, Kitabath Khan Bahadur Street, Ellis Road, Chennai - 600 002, Editor Padmapriya L.